
# திருநாவுக்கரசரின் தெய்வநெறி





மெய்யப்பன் பதிப்பகம்

புலவர் ஆ. சந்திரசேகரன்

# திருநாவுக்கரசரின் தெய்வ நெறி



ஆ. சந்திரசேகரன்

மணிவாசகர் பதிப்பகம்
31, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

முதல் பதிப்பு : டிசம்பர், 2012

திருவள்ளுவர் ஆண்டு : 2043



**விலை : ரூ. 50.00**

மணிவாசகர் பதிப்பக வெளியீட்டு எண் : 1954

நினைவில் வாழும்
நிறுவனர்



**ச. மெய்யப்பனார்**

டாக்டர் ச. மெய்யப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

பல்கலைக்கழகங்கள் பலவற்றில் இவர் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.

**'வள்ளுவம்'** இதழின் நிறுவன ஆசிரியர்.

குன்றக்குடி அடிகளார் **'தமிழவேள்'** என்றும், தருமபுரம் ஆதீனத் தலைவர் **'செந்தமிழ்க் காவலர்'** என்றும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

**'பதிப்புச் செம்மல்'** என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

*கிடைக்குமிடங்கள்:*

**மணிவாசகர் நூலகம்**

12-B, மேல சன்னதி, சிதம்பரம் - 608001. ✆:04144-230069

31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600108. ✆:044-25361039

6, சிவஞானம் தெரு, தி. நகர், சென்னை - 600017. ✆:044-24357832

110, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை - 625001. ✆:0452-2622853

15, ராஜ வீதி, கோயமுத்தூர் - 641001. ✆:0422-2397155

296/134, செரி சாலை, சேலம் - 636007. ✆:0427-4030709

28, நந்தி கோயில் தெரு, திருச்சி - 620002. ✆:0431-2706450

---

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ்,
சென்னை – 600 021, தொலைபேசி : 25954528

திருச்சிற்றம்பலம்



**தவத்திரு ஞானப் பிரகாச சுவாமிகள்,**
தலைவர் வேதாந்தத் திருமடம்.
40,வடக்குக் கோட்டை வீதி,
விருத்தாசலம் – 606 001.
கடலூர் மாவட்டம்.

# வாழ்த்துரை

**ந**ல்லன்பர் திரு. புலவர். ஆ. சந்திரசேகரன் அவர்களைப் பத்தாண்டு காலத்திற்கு மேலாக நன்கறிவோம். இவர் சிவசிந்தனையாளர். 'கனியினும், கட்டிப்பட்ட கரும்பினும் இனிமையுடையவர்'. எளிமை கொண்டவர். யாவரிடத்தும் அன்பாகப் பழகும் இயல்பினர். இவரின் நற்பண்புகளை விரிக்கின் பெருகும்.

திருமுதுகுன்றத்து அருள்மிகு பாலாம்பிகை, விருத்தாம்பிகை உடனுறை பழமலை நாதரைப் பணிந்து வணங்க வரும் போதெல்லாம் வேதாந்தத் திருமடத்திற்கும் வந்திருந்து பன்னிரு திருமுறைகள் பற்றிய சிந்தனைகளை நம்முடன் பகிர்ந்து கொள்ளும் பண்பினர்.

இவர் 'திருநாவுக்கரசரின் தெய்வநெறி' என்னும் தலைப்பில் ஆய்வு செய்து ஆர்வத்தோடும் பெருமுயற்சியோடும் இந்நூலைப் படைத்துள்ளார்.

தமிழ் கூறும் சைவ நல்லுலகில் நால்வகை நெறிகளைச் சிறப்பித்துக் கூறுவர். இந்த நால்வகை நெறிநின்றும் நால்வர் உலகோர்க்கு நல்வழி காட்டியுள்ளனர்.

| | | |
|---|---|---|
| சரியை | – | திருநாவுக்கரசர் |
| கிரியை | – | திருஞானசம்பந்தர் |
| யோகம் | – | சுந்தரர் |
| ஞானம் | – | மாணிக்கவாசகர் |

இவற்றுள், 'தொண்டு அலால் துணையுமில்லை' என்று வாழ்ந்து காட்டி பெருமை பெற்றவர் திருநாவுக்கரசர். இவரின் திருத்தொண்டின் பெருமையை அப்பூதியடிகள் வாயிலாக

***'நம்மையுடையவர் கழற்கீழ் நயந்த திருத்தொண்டாலே***
***இம்மையினும் பிழைப்பதென எம்போல்வாருந் தெளியச்***
***செம்மைபுரி திருநாவுக்கரசர்'***

என்று சேக்கிழார் நமக்குக் காட்டுகிறார்.

அப்பூதியடிகளின் திருமகனார் அரவுதீண்டி இறந்த நிலையில் 'ஒன்று கொலாம்' என்று பதிகம்பாடி உயிர்ப்பித்தார். திருவீழிமிழலையில் பஞ்சத்தின் கொடிய நிலை மக்களை வாட்டியபோது, பசிபோக்க பலநாள் அங்கேயே

தங்கியிருந்து, இறைவனின் திருவருளால் படிக்காசு பெற்று அமுதூட்டி அவர்களின் துயர் களைந்தார்.

'கர்மணி ஏவ அதிகாரஸ்தே மா பலேஷு கதாசன' என்பது கீதாசாரியன் வாக்கு, அதில் கர்மம் செய்ய அதாவது வினையாற்ற மட்டுமே உனக்கு அதிகாரம் உண்டு, பலனில் இல்லை. ஆகவே, பலனைச் சார்ந்திராதே. பலனை உண்டு பண்ணுபவனாகவும் ஒருபோதும் நீ ஆகாதே. என்றெல்லாம் இதற்கு விளக்கங்கொள்ளலாம்.

இதனை அப்பரடிகள்

'*என்கடன் பணிசெய்து கிடப்பதே*

*தன்கடன் அடியேனையும் தாங்குதல்*' என்று அருளுகின்றார்.

திருத்தலங்கள் தோறும் சென்று பாடிப்பரவிய திருநாவுக்கரசர் தில்லையம்பல வாணரைக் கண்டு தரிசித்தார். அப்போது, அகக் கரணங்களும் பொறிபுலன்களும் பெருமானிடம் ஈடுபட்டன. வழிபாட்டிலிருந்து விடுபட்ட அவர்.

'மனித்தப் பிறவியும் வேண்டுவதேயிந்த மாநிலத்தே' என்று மகிழ்கிறார். அவ்வளவில் நில்லாமல் 'என்று வந்தாய் என்னும் எம்பெருமான் தன் திருக்குறிப்பே' என்றும் உணர்கிறார், பக்தி முதிர்ந்த நிலையை அனுபவத்தை இத்தகைய பாடல்கள் வழிநின்று உணரலாம்.

'கள்ளனேன்' என்னும் பாடலில் 'உள்குவார் உள்கிற்றெல்லாம் உடனிருந்து அறிதியென்று' யோகானுபவம் பற்றியும் 'ஞானத்தால் ... நானுய்ந்தேனே' என்று ஞான மார்க்கம் பற்றியும் கூறுகிறார்.

இவ்வாறாக, திருநாவுக்கரசர் தொண்டுநெறி, பக்திநெறி, யோக நெறி, ஞான நெறி ஆகியவற்றில் சிறந்து விளங்கியுள்ள தன்மையை ஆசிரியர் ஆய்ந்து நோக்கி தம்நூலுள் வெளிப்படுத்தியுள்ள பாங்கு போற்றற்குரியது. இந்நூல்வழி ஆசிரியர் நமக்கு அருள் விருந்தளித்துள்ளார்.

இவர் மேலும் செம்மை சான்ற பல நூல்கள் புடைத்துச் சிறப்புற வேண்டும். அதற்கு 'சிவனெனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனியம்மான்' 'இவருக்கு நிறைந்த நல்வாழ்வையளிக்க வேண்டுமென திருவருளை வணங்கி வாழ்த்துகின்றனம்.

திருச்சிற்றம்பலம்.

ஞானப்பிரகாச சுவாமிகள்.

இடம் : விருத்தாசலம்

தேசிய நல்லாசிரியர்
முனைவர். நயம்பு. **அறிவுடைநம்பி**
மாவட்டச் செயலர்
உலகத் திருக்குறள்பேரவை

நயம்பாடி (அஞ்சல்)
செஞ்சிவட்டம் – 604151
விழுப்புரம் மாவட்டம்.

# மதிப்புரை



**வா**ழ்க்கைப் பயணத்தில் இலட்சக்கணக்கானோரைப் பார்க்கிறோம். ஆயிரக்கணக்கானோரிடம் பேசுகிறோம். நூற்றுக் கணக்கானோருடன் பழகுகிறோம். ஆனால் நெஞ்சில் நிற்போர் ஒரு சிலரே! எம் நெஞ்சில் நிற்போருள் புலவர். ஆ. சந்திரசேகரன் அவர்கள் ஒருவராவார். அவரது பணிவு, நடத்தை, ஒழுக்கம், புலமை, கற்பிக்கும் ஆற்றல் ஆகிய இன்னோரன்ன பண்புகளே அதற்குக் கரணியமாகும். 'பண்புடையார் பட்டுண்டு உலகு' என்பார் திருவள்ளுவர். அத்தகைய பண்புடையவருள் ஒருவர் இவர். அடக்கமே இவரது உயர்விற்கும் பெருமைக்கும் கரணியம். எவனொருவன் தன்னைத்தானே தாழ்த்திக் கொள்கிறானோ அவன் உயர்த்தப்படுவான் என்பது பைபிள் பொன்மொழி. அப்பொன்மொழிக்கு நன்மொழியானவர். செந்தமிழிலும் சிவனிய நெறியிலும் ஆழங்கால் பட்டவர்.

***"குலனருள் தெய்வம் கொள்கை மேன்மை***
***கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை***
***நிலம் மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்***
***உலகியல் அறிவொடு உயர்குணம் இனையவும்***
***அமைபவன் நூலுரை ஆசிரியன் அன்னே"***

"(நன் 26)" என்ற நன்னூல் கூறும் நல்லாசிரியருக்கு இலக்கியமாகத் திகழ்பவர். தாம் பெற்ற புலமையை மாணவரும் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டுமென்ற பரந்த உள்ளம் கொண்டவர். இவரது கற்பிக்கும் பாங்கு கேட்டார்ப் பிணிக்கும் தகையது. அன்று வகுப்பிற்கு வந்து கேளாதவர் கேட்க இயலாமற் போனோமே என்று வருந்தும்படியானது. கற்றல், கற்பித்தலில் ஆற்றலாளர், ஒழுக்கம். பண்பாடு ஆகியவற்றின் இருப்பிடமானவர். கல்விப்பணிக்கே தம்வாழ்நாளை ஈகம் செய்தவர். கல்வி உலகம் இவரை ஒரு முன்னோடியாகக் கொள்ள வேண்டும்.

தம் மக்கள் மழலைச்சொல்லைக் கேளாதவர் குழலிசை இனிமையானது, யாழிசை இனிமையானது என்பர் என்பது திருவள்ளுவர் கூற்று. அதைப்போல இவரது கையெழுத்தைப் பார்க்காதவர், ஏதேனும் அழகிய கையெழுத்தைப் பார்க்க நேரின் முத்துப்போல அழகான கையெழுத்து என்று பாராட்டுவர். இவரது கையெழுத்தைப் பார்த்தவர்கள், முத்தானது இவரது கையெழுத்துப் போல அழகாக உள்ளது என்றே கூறுவர். ஒருவரின் கையெழுத்தைக் கொண்டு அவரின் குண நலங்களை அறியலாம் என்பர் உளவியலார். இவரது கையெழுத்தைப் பார்த்து இவரது நல்லகுணங்களையும் நன்னடத்தையையும் அறிந்து மகிழ்ந்து பின்பற்றலாம்.

புலவர் நா. உலகநாதன், புலவர். ஆ. சந்திரசேகரன் இவர்களுடன் யானும் இணைந்து மதுரை, காமராசர் பல்கலைக்கழக இளமுனைவர் பட்டப்படிப்பில் மூவரும் ஒன்றாகச் சேர்ந்து, ஒன்றாகக் கலந்து படித்து, ஒன்றாகத் தேறினோம். வள்ளற்பெருமானின் அருளொளி பரவிய வடலூரில் வாரம் ஒருமுறை கூடி கலந்து மகிழ்ந்து உரையாடிப் படித்த

நாட்கள் பசுமையானவை. இவ்விருவரின் நட்பும் தமிழ்ப்புலமையும் கூடிப்பிரிந்ததும்

*"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்*
*அனைத்தே புலவர் தொழில்* "(குறள் 394)

என்பதே எம் வாழ்நாளில் நினைவூட்டி வந்த திருக்குறள்.

அப்பரடிகளின் முழுமையான வாழ்க்கை வரலாறு முதல் இயலில் ஆசிரியரால் மிகவும் தெளிவாக எடுத்தியம்பப்பட்டுள்ளது. அப்பரடிகள் இவ்வுலகில் பிறந்ததைத் தெய்வச் சேக்கிழார் பெருமான் 'ஒளிவிளங்கு கதிர் பின்மலரும் மருள்நீக்கியார் வந்து அவதாரம் செய்தார்' என்று பாடியுள்ளார். இறைவன் துட்டர்களை அழித்துச் சிட்டர்களைக் காக்க மேலிருந்து கீழேவருவது அவதாரம் எனப்படும். அவதாரம் என்ற சொல்லின் பொருளை நுட்பத்துடன் ஆசிரியர் விளக்கியிருப்பது அவரது நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுகிறது. அவதாரம் என்ற சொல்லுக்கு 'வருவிக்கவுறுதல்' என்ற பொருள் நயத்தை வள்ளலார் பாடலுடன் சான்று காட்டி விளக்கியுள்ளார். மருள்நீக்கியார், நாவுக்கரசர், தருமசேனர், அப்பர், தாண்டக வேந்தர் ஆகிய பெயர்கள் பெற்ற கரணியங்களை அழகுபடத் தெளிவுபடுத் தியுள்ளார்.

சமயம் என்பதன் பொருள், தமிழகத்தில் வழங்கும் அகச்சமயங்கள், புறச்சமயங்கள் பற்றி மிகத் தெளிவாக இரண்டாம் இயலில் கூறப்பெற்றுள்ளது. 'சமயம் சடங்குகளன்று. பொருளற்ற சடங்குகளுக்கு அப்பாற்பட்டு, இறைமை இயல்பிற்கு அழைத்துச் செல்லும் ஒளிவிளக்கே சமயம்' என்ற விளக்கம் ஏற்கத்தக்கது. முதன்முதலில் மணிமேகலையில்தான் சமயம் என்னும் சொல் காணப்படுகிறது என்ற செய்தி அவரது சொல்லாய்வு புலமையைக் காட்டுகிறது. சிவம் என்னும் சொல்லாட்சி நன்கு விளக்கப்பெற்றுள்ளது. சிவனியம், மாலியம் என்பன அகச்சமயங்கள். சமணம், பௌத்தம் என்பன புறச்சமயங்கள் என்பதே சரியாகும். இதனை ஆசிரியர் மீள்பார்வை செய்யவேண்டும். சிவனியம், பௌத்தம், சமணம் ஆகிய சமயங்களை மிக விரிவாக எடுத்துரைத்த ஆசிரியர் தொன்மையான திருமாலியம் பற்றி ஒன்றும் குறிப்பிடாதது ஏன் என்று விளங்கவில்லை. "கருவுற்ற நாள் முதலா உன்பாதம் காண்பதற்கு உருகிற்று என் உள்ளம்" (அப்தேவா 4 : 961) "பார்வாழ திருவீதிப் பணிசெய்து பணிந்தேத்திப் பரவிச் சென்றார்" (பெ.புராணம் 132) என்ற அடிகள் அப்பரடிகளை நம் கண்முன் நிறுத்துகின்றன. அருட்செய்தியும் மனம் ஒன்றிய வழிபாடும் பற்றி ஆசிரியர் கூறியன எக்காலத்திற்கும் எவர்க்கும் பொருந்தும் நல்ல விளக்கமாகும்.

**சைவ சித்தாந்த பொருள் விளக்கும் ஆற்றல்:**

சைவ சித்தாந்த முப்பொருள் உண்மைகளான பதி, பசு, பாசம் ஆகியவற்றை ஆசிரியர் மிகத் தெளிவாக இயல் மூன்றில் விளக்கியுள்ளார். பிறப்பறுக்கும் பெருநெறியே, மெய்ப்பொருள்நெறி என விளக்கமளித்துள்ளார். பற்றினால் பிறப்பும் பற்றின்மையால் பிறவாமையும் உண்டாகுமென்பதை மணிமேகலை நூல் சான்றுகாட்டி நிறுவியுள்ளார். ஐம்புலவேடர்கள் உடலாகிய பானையில், ஆசையெனும் நீரை நிரப்பி, சீவனாகிய ஆமையை அதிலிட்டு, தீவினையாகிய தீயை மூட்டி, பந்த பாசமெனும் தட்டால் மூடினர். சீவனாகிய ஆமை இளஞ்சூட்டில் வரும் துன்பம் அறியாது திளைத்தாடுகிறது. இதனைத் "திளைத்து நின்று ஆடுகின்ற ஆமைபோல் தெளிவிலாதேன்" என உலகோர் நிலையை அப்பரடிகள் தம்மீது ஏற்றிப் பாடுகின்றார். இவ்வுண்மையை ஆய்வாளர் மிக நயம்பட விளக்கியிருப்பது படித்து இன்புறத்தக்கது. உணரத்தக்கது. இந்த அறியாமையிலிருந்து "முக்கணான் பாத நீழல் உள்ளிடை மறைந்து நின்று

அங்கு உணர்வினால் எய்தலாம்" என அப்பரடிகள் வழியும் காட்டியுள்ளார் என எடுத்துக் காட்டியுள்ளார்.

"மனமெனும் தோணிபற்றி" என்ற படகுப் பாடத்தை நன்குணர்ந்து, நலமுடன் வாழ திருவொற்றியூர் சிவனிடம் அப்பர் வேண்டுவதை ஆய்வாளர் இங்கே நினைவூட்டியிருப்பது மிகவும் சாலப் பொருத்தமாகும். பிறப்பறுக்க ஒரு புதிய, வேளாண்மையை அப்பரடிகள் அறிமுகப்படுத்துகிறார்.

"*மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்*
*பொய்மையாம் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சித்*
*தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலி யிட்டுச்*
*செம்மையுள் நிற்பராகில் சிவகதி விளையு மன்றே*" என்கிறார்.

இந்தப்புதிய வேளாண்மையால் அறியாமை நீங்கி, மெய்ப்பொருள் உணர்ந்து, பிறப்பு நீங்கி, பேரின்பநிலை எய்தலாம். இதுதான் மெய்ப்பொருள் நெறி என ஆய்வாளர் தலைப்பிட்டுத் தக்க சான்றுகளுடன் விளக்கியிருப்பது பாராட்டத்தக்கது. மேலும் இவ்வியலில் திருநீற்றின் பெருமையையும், அஞ்செழுத்தின் மேன்மையையும் சான்றுகளுடன் விளக்கியுள்ளார். இவ்வியல் வாயிலாக ஆய்வாளர் சைவ சமய உண்மைகளை நன்கறிந்தவர், ஆழங்கால்பட்டவர் என்பது விளங்குகிறது. இவ்வியலைப் படிப்போர் திருநீற்றைத் தம் மெய்யழுத்தி, ஐந்தெழுத்தைத் தம்நெஞ்சமுத்தி வாழ்வாங்கு வாழ்வர் என்பது திண்ணம்.

**தொண்டு நெறியே வாழ்கையின் பயன்:**

சிவனடியார்கள் ஒவ்வொருவரும் ஏதேனும் ஒருவகையில் தொண்டு செய்தே வீடுபேறு பெற்றனர். "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்றார் ஔவையார். "எளிது எளிது மானிடராய்ப் பிறத்தல் எளிது; அரிது அரிது மானிடராய் வாழ்தல் அரிது" என்றார் இக்காலப் பாவலர் ஒருவர். இதுவே சரியெனப்படுகிறது. மக்களில் பலர் மானிடராய் வாழாமல் விலங்குகளாகவே வாழ்கின்றனர். பிறர்க்குச் செய்வதே தொண்டெனப்படும். "தனக்கென முயலா நோன்றாள் பிறர்க்கென முயலுநர் உணமையானே உண்டாலம்ம இவ்வுலகம்" (புறம் 182) என்ற பாடலை ஆசிரியர் எது தொண்டு என்பதை விளக்க எடுத்துக்காட்டியுள்ளார். தொண்டின்பெருமை, தொண்டர் பெருமை ஆகியன அளவிடமுடியாதவை. முருகன் ஔவையாரிடம் எது பெரிது என்று கேட்க ஔவையார் "பெரிது பெரிது புவனம் பெரிது" என்ற பாடலில் "இறைவன் தொண்டர் தம் உள்ளத்து ஒடுக்கம்; தொண்டர்தம் பெருமை செல்லவும் பெரிதே" என்றார்.

"*திருநாவுக்கரசு வளர்திருத் தொண்டின் நெறிவாழ*
*வருஞானத் தவ முனிவர்*" (திருநாவுக், புராணம் பாடல் 1)

என்ற அப்பரடிகள் அறிமுகத்தைச் சேக்கிழார் பாடுவார். இதனை இங்கே ஆசிரியர் மிகமிகப் பொருத்தமாக எடுத்துக்காட்டியபாங்கு நனி சிறப்புடையது. இத்துடன் இங்கே ஒருகருத்தைச் சிந்திப்பது மேலும் நயம்பயக்கும்.

"*ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது*
*ஊதியம் இல்லை உயிர்க்கு*" (குறள் 231)

என்றார் திருவள்ளுவர். திருக்குறளில் ஆழங்கால்பட்ட அப்பரடிகள் இன்னும் ஒருபடி மேலே போய்

"தொண்டலல்லால் உயிர்க்கு ஊதியம் இல்லை" என்றார். இங்ஙனம் உலக வரலாற்றில் உயிர்க்கு ஊதியம் எது என்பதற்கு விடையளித்தவர்கள் திருவள்ளுவரும் திருநாவுக்கரசரும் என்பதை மனதில் நிறுத்த வேண்டும். அப்பரடிகளின் அமுதவாக்கான "என்கடன் பணிசெய்து

கிடப்பதுவே" என்பதை ஆசிரியர் கையாண்டிருப்பது போற்றத்தக்கது. ஊறுகாய் எண்ணெய்யில் ஊறிக்கிடப்பதுபோல அப்பரடிகள் தொண்டு நெறியில் மூழ்கிக்கிடந்தார். தொண்டெனில் அப்பர். அப்பரெனில் தொண்டு என்பதாகும். அவரது தொண்டைச் சோதிக்க இறைவன் மண் ஓடுகளுக்கிடையே பொன்னை வைக்கிறார். அப்பரடிகள் "ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கினார்" என்பார் சேக்கிழார். ஓட்டைப் போலவே செம்பொன்னையும் அப்புறப்படுத்தினார். இறைவன் வைத்த சோதனைத் தேர்விலும் தொண்டு நெறியில் வென்றவர் அப்பரடிகள். காடு வளர்த்தும், குளம்தொட்டும், விருந்தளித்தும், அறச்சாலைகள் அமைத்தும், தண்ணீர்ப்பந்தல் வைத்தும், நந்தவனம் அமைத்தும் ஆகிய இன்னும்பல தொண்டுகளைச் செய்ததாகச் சேக்கிழார் பதிவு செய்துள்ளார். அப்பரடிகள் தம்முன் வாழ்ந்த தொண்டர்களையும் தம் காலத்துத் தொண்டர்களையும் பாராட்டிப் பாடியுள்ளதைப் பதிகம் 4,5 ஆகியவற்றில் காணலாம். இவற்றையெல்லாம் நூலாசிரியர் பதிவுசெய்து தெளிவுபட விளக்கியுள்ளார். அப்பரடிகள் தொண்டைப் போலவே இவரது பதிவுத் தொண்டும் பாராட்டத் தக்கது. பின்பற்றத்தக்கது. தொண்டுநெறி பற்றிய விரிவான விளக்கம் இந்த நான்காம் இயலில் நன்கு வெளிப்படுகிறது.

**தெய்வநெறி உணர்த்தும் உத்தி:**

இறைவனை அடைதலே தெய்வநெறி என்பதை ஐந்தாம் இயலில் தெளிவுபடுத்தியுள்ளார். தெய்வநெறி பற்றி அப்பரடிகள்

***"தன்னைச் சரண் என்று தாளடைந்தேன் தன்னடி யடையப்***
***புன்னைப் பொழில் புகலூர் அண்ணல் செய்வன கேண்மின்களோ***
***என்னைப் பிறப்பறுத்து என்வினை கட்டறுத்து ஏழ்நரகத்து***
***என்னைக் கிடக்கல் ஒட்டான் சிவலோகத்து இருத்திடுமே"***

( அப். தேவா. 4 : 1009)

என்பதால் அறியலாம். இப்பாடலைச் சான்றுகாட்டி எது தெய்வநெறியென ஆசிரியர் விளக்கியுள்ளார். திருவள்ளுவரும் "பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறிநின்றார் நீடு வாழ்வார்" (குறள் 6) என்றார் இக்கருத்து இங்கே சிந்திக்கத்தக்கது. நாவரசர் சிறுதெய்வழிபாட்டை மறுத்தவர் என்பதைச்

***"சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்,***
***சிவபெருமான் திருவடிக்கே சேரின் அல்லால்*** "(அப். தேவா. 6:905)

என்று சான்று காட்டி நிறுவியுள்ளார். இறைவன் திருவடியே பிறப்பறுக்க வல்லது என்பதைப் "புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன். "(அப். தேவா. 6:971)" "அட்டான் அடிநிழல் கீழதன்றோ எந்தன் ஆருயிர் "(அப். தேவா. 4:801) என்ற அப்பரடிகள் தேவார அடிகளை மேற்கோள் காட்டி விளக்கியுள்ளார். இதனை வலியுறுத்த "பிறவிப் பெருங்கடல்" (குறள் 10) "பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் பெய்கழல்கள்" (சிவபுராணம் வர் 1) "செவ்வடி செவ்வித் திருக்காப்பு" (நா.தி.பிரபந்தம் பா.1) என்பனவற்றைத் துணையாகக் கொண்டு விளக்கியுள்ளார். மேலும் "புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா/ உன்னடி என்மனத்தே / வழுவாதிருக்க வரம்தரவேண்டும்/ இவ்வையகத்தே" (அப். தேவா. 4 : 920) பிறப்பின்றித் திகழ "ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை" (அப். தேவா. 4 781) என்ற அப்பரடிகள் திருவாக்கை நினைவூட்டியுள்ளார். தெய்வ நெறியே நன்னெறி, பிறநெறிகள் புன்நெறிகள் என உணரவேண்டும். "தன்தாள் அடைந்தார் கட்கு வானம் காட்டுவார்போல் வன்னியூரரே" (தேவா 5 258) என்பதே தெய்வநெறி என உணர்ந்து அதன்வழி ஒழுகவேண்டும். அதன்வழி ஒழுகினால் பிறப்பின்றி, பேரின்பநிலை எய்தலாம் என ஆசிரியர் தெளிவாக, எளிமையாகச் சமய உண்மைகளை விளக்கிய உத்தி பெரிதும் போற்றிப் பாராட்டத்தக்கது.

சுருங்கச்சொல்லி விளங்க வைப்பதில் வல்லவர் இவரென்பது இவ்வியலால் அறியலாம்.

**பன்முக இலக்கியப் புலமை:**

நூலாசிரியர், தாம் மேற்கொண்ட ஆய்வில், தாம் கூறவந்த கருத்தை வலியுறுத்தப் பல்வேறு இலக்கியச் சான்றுகளைப் பொருத்தமாக இணைத்துக் காட்டி விளக்கியுள்ளார்.

"சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்?" என்ற

அப்பரடிகளின் கருத்திற்கு இசைவாக

*"சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே*
*சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே*
*ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்*
*அலைந்தலைந்து வீணே நீர் அழிதல் அழகலவே"*

என்ற வள்ளலாரின் வாய்மொழியை இணைத்து விளக்கியுள்ளார்.

இயல் மூன்றில் திருநீறணியும் பெருமையை அப்பரடிகளின் பாடல்களுக்குப் பொருத்தமாக ஔவையார், திருஞானசம்பந்தர் மற்றும் பலரின் பாடல்களைப் எடுத்துக்காட்டியுள்ளார்.

"அன்பின் வழியது உயிர் நிலை" என்றார் திருவள்ளுவர். அன்பின் பெருமையைக்

*"கங்கைவார் சடைகரந்தார்க்கு அன்பராகில்*
*அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே"*

என்ற அப்பரடிகள் கருத்திற்கு அரண் செய்ய "அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்" என்ற திருமூலர் பாடலையும் "அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே" என்ற வள்ளலார் பாடலையும் மிகப்பொருத்தமாக இணைத்து விளக்கியுள்ளார்.

இங்ஙனம் பல்வேறு இடங்களில் ஆசிரியர் தம் கருத்தை வலியுறுத்த சான்றோர் பலரின் பொன்மொழிகளைப் பொன்னேபோல் போற்றிப் பொருத்தமாக இணைத்து விளக்கியுள்ள உத்தி பாராட்டத்தக்கது. இதன் வாயிலாக இவரது பன்னூல் இலக்கியப் புலமையும் வளமும் ஆற்றலும் புலப்படுகிறது.

**வரலாற்றுப்பதிவு:**

மேலைநாடுகளிலும், கீழைநாடுகளிலும் தத்தம் வரலாற்றைப் பதிவு செய்திருப்பதை உலகம் நன்கறியும். ஆனால் தமிழகத்தில் அரசர்கள், புலவர்கள் மற்றும் நாட்டு நடப்புக்கள் ஆகிய இன்னோரன்ன நிகழ்வுகளை முறையாகப் பதிவுசெய்யப்படவில்லை என்றகுறை நம்மிடத்தில் உண்டு. ஆனால் இந்நூலில் ஆய்வாளர் அப்பரடிகளின் வாழ்வியல் நிகழ்ச்சிகளைத் தவறாமல் பதிவுசெய் திருப்பது இவரது வரலாற்று நுட்பத்தைப் புலப்படுத்துகிறது. இது பாராட்டத்தக்கது. அப்பரடிகளின் பிறப்பு – கல்வியில் ஆர்வம் – சமணம் சார்ந்தது – சைவம் திரும்பியது – பல்லவ மன்னனின் இடர்களிலிருந்து தப்பிப் பிழைத்தது – திருப்பெண்ணாகடத்தில் சிவச்சின்னம் பெற்றது – திங்களூரில் பாம்பு தீண்டிய மகனை உயிர்ப்பித்தது – திருப்பைஞ்ஞீலியில் இறைவனிடமிருந்து பொதிச்சோறு பெற்றது – திருமறைக்காட்டுக் கோயில் கதவம் திறக்கப் பாடியது – கயிலைக் காண கடுநடை மேற்கொண்டது – திருவையாற்றில் கயிலைத் திருக்காட்சி கண்டு அனுபவித்து மகிழ்ந்தது – திருப்புகலூரில் முக்தியடைந்தது முதலிய வரலாற்று நிகழ்வுகளைப் பதிவு செய்திருப்பது போற்றத்தக்கது. இந்த வரலாற்றுப் பதிவுகள் வருங்காலத் தலைமுறைக்கு வளமும் திறமும் அளிக்கும் என்பதில் ஐயமில்லை. இவ்வரலாற்றுப் பதிவுகள் வாழும் மக்களுக்கு வழிகாட்டியாய் அமையும் என்பது திண்ணம். வரலாற்றுப் பதிவுக்

குறையை ஓரளவு நிவர்த்தி செய்த புலவர். ஆ. சந்திரசேகரை இன்னும் ஒரு நூறாண்டு இரும் என வாழ்த்தலாம்.

பழையாறை வடதளியில் சிவன்கோயிலைச் சமணர்கள் பிறர் பார்த்து வழிபடாவண்ணம் மறைத்துவிட்டனர். அதனைக் கண்ட அப்பரடிகள் "வண்ணம் கண்டு நான் உம்மை வணங்கியன்றி போகேன்" என்று அமுது (உண்ணா நோன்பு) செய்யாதிருந்தார். அரசன் கனவில் சிவபெருமான் தோன்றி நாவரசர் தம்மை வணங்க அமணரை அழித்து, மறைத்த கோயிலைக் காட்சிப்படுத்துமாறு கூறினார். அரசன் அங்ஙனமே செய்ய அப்பர் வழிபட்டுச் சென்றார். உலக வரலாற்றில் தம்குறிக்கோளை அடைய முதன் முதலில் உண்ணா நோன்பிருந்தவர் அப்பரடிகளே. அண்ணல் காந்தியடிகளுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் அப்பரடிகள். இந்த அரிய அரசியல் வரலாற்றுச் செய்தி இவ்வாய்வேட்டில் இடம்பெறாதது ஒரு குறையே. இனி வருங்காலத்தில் இந்நூலாசிரியரும் பிறரும் வரலாற்றுப் பதிவுகளை விட்டுவிடாமல் கவனமாகப் பதிவு செய்ய வேண்டுமென்பது எமது வேண்டுகோளாகும். மேலும் அப்பரடிகள் முன்மொழிந்த தர்மகர்த்தா முறை நடைமுறைப்படுத்தப்பட்டால் சமுதாய ஏற்றத் தாழ்வு நீங்கும்.

பின்னிணைப்பு பகுதி மிகுந்த பயனுடையது. பின்னிணைப்பு ஒன்றில் நாவரசர் போற்றிய இருபத்தைந்து புராணங்கள் இடம் பெற்றுள்ளன. இரண்டில் நாவரசர் தமிழகத் தலப்பயணம் (தொண்டைநாடு, பாண்டிநாடு, சோழநாடு) கயிலைப் பயணம் ஆகியன இடம் பெற்றுள்ளன. மூன்றில் அப்பர் சென்று வழிபட்ட எண்பத்தெட்டுச் சிவத்தலங்கள் இடம்பெற்றுள்ளன. இப்பின்னிணைப்பு சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளது.

*"குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்*
*மிகைநாடி மிக்கக் கொளல்"* (குறள் 504)

என்பது வள்ளுவம். அவ்வகையில் இந்நூலில் ஏராளமான குணங்கள் உள்ளன. அவற்றைப் பட்டியலிட்டால் பெருகும். மிக மிக நுட்பமாகத் தேடினால் தான் ஓரிரண்டு குறைகள் தென்படும். இதை இங்கே கூறுவதின் நோக்கம் அடுத்த பதிப்பு மிகச் செம்பதிப்பாகப், பார் போற்றும் பதிப்பாக வெளிவரவேண்டும் என்ற பெரு விருப்பமாகும்.

ஆசிரியர் இனி ஒவ்வோர் ஆண்டும் இதைப் போன்ற நல்ல நூல்களைத் தவறாமல் எழுதித் தமிழன்னைக்கு அணிசேர்க்க வேண்டுமென்பதே எம் வேண்டுகோளாகும். ஆசிரியரின் தமிழ்ப் புலமைக்கும் பன்னூல் திறமைக்கும் வாழ்த்துகள். பாராட்டுதல்கள்.

"உன்னைக் குனிந்து நோக்கினேன். உலகம் என்னை நிமிர்ந்து பார்த்தது. நன்றி ஏ புத்தகமே" என்பது ஒரு மேனாட்டறிஞன் வாக்கு. சிவனியத்தை இதுவரை அறியாதோரும் இந்நூலைக் குனிந்து கற்றால், உலகம் அவரை நிமிர்ந்து நோக்கும் என்பது முற்றிலும் உண்மை. இதுவே இந்நூலின் பெரியவெற்றி என்பது வெள்ளிடை மலை. தொண்டாற்றுவோம் உலகுடன் உயர்வோம்.

**"என்கடன் பணிசெய்து கிடப்பதுவே" – அப்பரடிகள்**
**"என்கடன் பணிசெய்து நடப்பதுவே" – நயம்பாடி நம்பி**
**"தங்குபுகழ்ச் செந்தமிழ்க்கோர் அன்பராகில்**
**அவர்கண்டீர் யாம்வணங்கும் கடவுளாரே"**

நயம்பாடி – 604 151.
செஞ்சிவட்டம்

என்றும் அன்புடன்,
திருக்குறள் தொண்டருள் தொண்டன்
நயம்பு. அறிவுடைநம்பி

# UNIVERSITY OF MADRAS
# சென்னைப் பல்கலைக்கழகம்
## DEPARTMENT OF SAIVA SIDDHANTA
## சைவ சித்தாந்தத்துறை

**Dr. C. Murugan,** M.A. Ph.D.,
Assistant Professor, Dept. of Saiva Siddhanta.

Centunaray Bilding
Chennai - 600 005.


---

## அணிந்துரை

சைவசமயம் சிவநெறி, செந்நெறி, தெய்வநெறி எனப் பல பெயர்களில் வழங்கி வருகின்றது. மற்றைய சமய நெறிகளைக் கடந்து செந்நெறியாக விளங்கும் இந்நெறியினை அப்பர் சுவாமிகள், 'மெய்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்தி . . . செம்மையுள் நிற்பராகில் சிவகதி விளையுமன்றே' எனக் குறித்தார். பலவகையான ஆறுகள் இறுதியில் கடலில் சென்று சங்கமிப்பது போல, எல்லாச் சமய நெறிகளும் இறுதியில் சைவநெறியில் வந்து முடிவடைகின்றது. இதனையே சிவஞான சித்தியார்,

*"புறச் சமய நெறி நின்று, அகச் சமயம் புக்கும்,*
*புகல் மிருதி வழி உழன்றும், புக்லும் ஆச்சிரமம்*
*அறத் துறைகள் அவை அடைந்தும், அரும் தவங்கள் புரிந்தும்,*
*அரும் கலைகள் பல தெரிந்தும், ஆரணங்கள் படித்தும்,*
*சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும், வேத*
*சிரப் பொருளை மிகத் தெளிந்தும், சென்றால் சைவத்*
*திறத்தடைவர் இதில் சரியை, கிரியை, யோகம்*
*செலுத்தியபின், ஞானத்தால் சிவன் அடியைச் சேர்வர்"*

எனக் குறிப்பிடுகிறது. செந்நெறியாகிய சைவசமயத்தைத் தெய்வநெறியாக வகுத்துக் காட்டியவர்கள் நாயன்மார்கள். புறச்சமயமாகிய சமண சமயம் நின்று உண்மைநெறி உணர்ந்து சிறப்புடைய சைவநெறி வந்து சிவன் அடியைச் சேர்ந்த திருநாவுக்கரசர்

**'சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம் சிவநெறியே சேரப்பெற்றோம்'**

எனத் தெய்வநெறியாகிய சைவத்தை நிலைநிறுத்தினார். இதனைச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் சொல்லியவையே சொல்லி உகப்பானை என அறுதியிட்டார். **'என் கடன் பணி செய்து கிடப்பதே'** என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு

இறுதிவரை தொண்டு நெறியிலே வாழ்ந்தவர் திருநாவுக்கரசர்; ஏனைய சமயக்குரவர்களுக்கு அந்நெறி வாய்க்கவில்லை என்பதை ஆசிரியர் சிறப்பாக எடுத்துக்காட்டுகிறார். 'மருள்நீக்கியார்' எனும் இயற்பெயருக்கு ஏற்ப மாந்தர்கள் பிறவி மருள் நீக்க வந்தவர் திருநாவுக்கரசர். சிவப்பணி நிற்போர் யாருக்கும் அஞ்சுவதும் இல்லை என்பதை **'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்'** எனும் நாவுக்கரசர் திருவாக்கின் மூலம் உணரலாம்.

**'ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவர் கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி வீடும் வேண்டாம் விறலின் விளங்கினார்'** என அடியார்களது இலக்கணத்தைத் திருநாவுக்கரசர் வாழ்க்கையில் கண்டார் சேக்கிழார். ஆன்ம வைராக்கியம் எப்படி இருக்க வேண்டும் என்பதை நாவுக்கரசர் கூற்றாக **'ஆளும் நாயகன் கயிலையின் இருக்கை கண்டு அல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்'** எனக் கூறுவது நோக்கத்தக்கது.

இன்று சாதி, சமயம் எனும் பெயரில் புரையோடிப் போயுள்ளது சமுதாயம். அதற்கு மருந்து தரும் வகையில் **'ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில் அவர்கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே'** எனும் அப்பரது வாக்கின் துணைகொண்டு சமரச சன்மார்க்கம் பேசியுள்ளார் ஆசிரியர். **'யாது ஒரு தெய்வம் கொண்டீர், அத் தெய்வம் ஆகி, ஆங்கே, மாது ஒரு பாகனார்தாம் வருவார்'** என்ற சாத்திர இயைபுக்கு ஏற்ப நாவுக்கரசரும் சிவத்தைத் தவிர வேறு தெய்வத்தைக் கனவிலும் நினைத்தறியார் என்பதையும் சிவனே முத்தி தரும் தெய்வம் என்பதைப் பல எடுத்துக்காட்டுக்கள் மூலம் தெளிய வைத்துள்ளார் ஆசிரியர்.

சிவநெறியே உயர்ந்த நெறி என வாழ்ந்த திருநாவுக்கரசரது அற்புத வரலாறு **'திருநாவுக்கரசரின் தெய்வநெறி'** எனும் ஆய்வு நூலாக வெளிவருவது சிறப்புடையதே. சைவப் பெருமக்கள் அனைவரும் கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு நல்லநூல். ஆய்வாளர் புலவர் **ஆ. சந்திரசேகரன்** அவர்கள் இதுபோலப் பல நூல்களையும் வெளிக் கொணர வேண்டும் என எல்லாம் வல்ல ஏலவார் குழலியுடனாய கச்சி ஏகம்பனின் கமல மலர்ப்பாதங்களை வேண்டுகிறேன்.

**சி. முருகன்.**
உதவிப் பேராசிரியர்
சைவ சித்தாந்தத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

# நன்றியுரை

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்ற பொருள் மொழிக்கேற்ப தோன்றும் துணையாக் விளங்கி என்னை நன்னிலையில் காத்து வளர்த்து வரும் என் பெற்றோரைப் போற்றுகின்றேன். இளம்பருவம் முதல் உற்றதுணையாகி, உண்மைப் பொருளாகிய கல்விச் செல்வத்தையும் நல்லொழுக்க நெறிகளையும் புகட்டிய் குருவின் மலரடிகளைப் போற்றி வணங்குகின்றேன்.

தில்லையில் பல்லாண்டு காலம் தொடர்ந்து குங்கிலியத் தொண்டு செய்தவரும் திருவருட்பிரகாச வள்ளலார் நெறியை வாழ்வியலாகக் கொண்டவரும் ஞானாசிரியராக விளங்கியவருமான தவமிகு. பழ. சண்முக குங்கிலிய சுவாமிகள், எனக்குப் பல நேரங்களில் திருமுறைக் கருத்துகளைக் கனிவுடன் எடுத்துரைத்தார்கள். அன்னவரை வணங்குகின்றேன்.

இந்த ஆய்வுக் கட்டுரையைச் செம்மைப்படுத்தி எனக்கு வழிகாட்டி ஆசிரியராக விளங்கிய முனைவர், தமிழ்ப்பேராசிரியர் திருமிகு. சு. தங்கத் துரை ஐயா அவர்களை வணங்கி நன்றியுரைக்கின்றேன்.

இப்பணி சிறக்க உற்றுழி உதவிய தமிழாசிரியர் புலவர். திரு. பூவை. செயராமன் அவர்களுக்கும் சித்தாந்த ரத்தினம் திருக்கூடலையாற்றூர். புலவர். திரு. கு. கலியமூர்த்தி அவர்களுக்கும் காந்தியப் பற்றாளர் திரு. இல. சிறுத்தொண்டநாயனார் அவர்களுக்கும் பெரிதும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களின் நல்வாழ்விற்கு வாழ்த்தளித்து மகிழும் தமிழ்ச்சான்றோர், பெரிய குளம் புலவர். திருமிகு. ப. பாண்டியராசு ஐயா அவர்களை வணங்குகின்றேன்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயிலுங்கால் தொடங்கி இன்றளவும் என் அன்பிற் கலந்து விளங்கும் ஆருயிர் நண்பர், கல்பகனூர். புலவர். இரா. கலியபெருமாளுக்கு நட்புடன் கூடிய நன்றி என்றும் உரியது.

நற்றவத்தவர், நற்குணசீலர், திருமுறைப்பாடல்களை நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் திருமுதுகுன்றம் திருக்கோயிலில், இசைக்கும் திருமுறை விண்ணப்பதாரராக விளங்குபவர், வேதாந்தத் திருமடத்தின் தலைவர், தவத்திரு. ஞானப்பிரகாச சுவாமிகள் இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கியிருப்பது யான்பெற்ற பெரும்பேறாகும். சுவாமிகளை என்றும் வணங்கும் நன்றியன்.

'வாக்கில் வாய்மையும், வாழ்வில் தூய்மையும், அன்பில் தாய்மையும்' கொண்டு திருக்குறளே வாழ்வு – வாழ்வே திருக்குறள் என்று வாழ்பவரும் 'திருக்குறள் பண்பாட்டுச் சிற்பி' 'தேசிய நல்லாசிரியர்' 'செந்தமிழ்நம்பி' என்றெல்லாம் பாராட்டப் பெறுபவருமான முனைவர், திருமிகு. நயம்பு. அறிவுடைநம்பி ஐயா அவர்கள் என் வாழ்வின் கலங்கரை விளக்கம். இந்நூல் தக்கபெரும் கருத்துரையை அணிந்து வெளிவருவதற்கு முழுமுதற் காரணமாக விளங்கும் இத்தகு தமிழ்ச்சான்றோரை என்றும் நன்றியுடன் வணங்குதலுடையேன்.

சீர்மிகு பல்புகழ்ச் சென்னைப்பல்கலைக் கழகத்தின் சைவசித்தாந்தத் துறை உதவிப்பேராசிரியர் முனைவர். திருமிகு. சி. முருகன் ஐயா அவர்கள், அழுக்கிலா மணமும் வழுக்கிலா வாழ்வும் சிவநெறிச் சிந்தனையும் கொண்டு திகழ்பவர். அவர் இந்நூலுக்கு அணிந்துரை உவப்புடன் அளித்துப் பாராட்டிய பாங்கு சிறப்புடையது. இப்பெருந்தகையாளரை வணங்கி நன்றியுரைத்து மகிழ்கிறேன்.

இல்லறப் பணிகளுக்கிடையேயும் இயன்றபோதெல்லாம் என்னை ஊக்குவித்து உதவிவரும் அன்பிற்கினிய என் குடும்பத்தார்க்குப் பெரிதும் நன்றி கடப்பாடுடையேன்.

நானிலம் போற்றும் நல்ல பல நூல்களை வெளியிட்டு வரும் மணிவாசகர் பதிப்பகம், செம்மையான முறையில் இந்த நூலையும் கட்டமைத்து அழகுற அச்சேற்றி வெளியிட்டுள்ளது. இதற்குப் பெரிதும் துணைநின்ற பதிப்பக உரிமையாளர் தமிழ்த்திரு. ச.மெ. மீனாட்சி சோமசுந்தரம் அவர்களுக்கும் பதிப்பக மேலாளர் திரு. இராம. குருமூர்த்தி அவர்களுக்கும் என்றும் நன்றி.

அன்புடன்

**ஆ. சந்திரசேகரன்**

# முன்னுரை

## ஆய்வுத் தலைப்பு

திருநாவுக்கரசரின் தெய்வநெறி என்னும் தலைப்பை ஆய்வுப் பொருளாகக்கொண்டு இந்த ஆய்வு செய்யப்படுகிறது.

## ஆய்வின் நோக்கம்

1969-ஆம் ஆண்டு முதல் 1972-ஆம் ஆண்டுவரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 'புலவர்' பட்டய வகுப்பில் பயிலுங்கால் பன்னிரு திருமுறைகளைப்பற்றியும் பெரியபுராணச் சிறப்புப் பற்றியும் தமிழ்ப் பேராசிரியர்கள் சிறப்பான கருத்துகளை உணர்த்தினர். பக்தியுணர்வு என் நெஞ்சில் அரும்பியது. தொடர்ந்து பல பக்தி இலக்கியங்களைப் படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அருள்மொழி அரசு, திருமுருக கிருபானந்த வாரியார் முதலிய ஆன்மீக அறிஞர் பெருமக்களின் சொற்பொழிவைச் செவிமடுக்கும் பேறு பெற்றேன். இறையுணர்விலும் வழிபாட்டிலும் என்மனம் பெரிதும் ஈடுபட்டது.

பெண்ணாகடத்தில் சில ஆண்டுகள் வாழ்ந்திருந்தேன். இப்பெண்ணாகடம் வெள்ளாற்றின் வடகரையில் அமைந்துள்ள சிறப்புமிகு ஊராகும். இவ்வூர் 'கடந்தை' என்றும் தூங்கானை மாடம் என்றும் தேவாரத்திருமுறைகளில் குறிக்கப்பெறுகின்றது.

இத்திருத்தூங்கானை மாடச் சுடர்கொழுந்து நாதரைத் திருநாவுக்கரசர் வழிபட்டு 'பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்' என்ற தேவாரப் பாடலைப்பாடி, சூலக்குறியும் இடப முத்திரையும் தன்மேனியில் பொறிக்கப்பெற்றார். இத்தகைய சிறப்புகளையெல்லாம் அறிந்தபோது திருநாவுக்கரசரைப் பற்றிய ஆய்வு மேற்கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் மிகுந்தது.

இவரைப்பற்றிய வரலாற்று ஆய்வு நூல்களைப் படித்தேன். திருநாவுக்கரசரின் தெய்வநெறியாம் திருவடி நெறி பற்றிய கருத்துகளை அறிந்து உணர்ந்தேன்.

ஆய்வாளர்களும் அறிஞர்களும் தங்கள் ஆய்வுப்பகுதியில் திருவடி நெறி பற்றிய சில செய்திகளை மட்டுமே சுட்டிச் சென்றிருந்தனர். இதனை விரித்து வெளிப்படுத்த வேண்டும் என்ற உந்துதலாலும்

எண்ணத்தினாலும் உணர்ந்த இத்தெய்வ நெறிக் கருத்துகளைப் பின்வரும் சந்ததியினரும் அறிந்து பயன்பெறவேண்டும் என்ற ஆர்வத்தினாலும் நோக்கத்தினாலும் இந்த ஆய்வுத் தலைப்பு எடுத்துக்கொள்ளப்பட்டது.

## ஆய்வு மூலங்கள்

ஆய்வு மூலங்களை முதன்மை மூலங்கள், துணை மூலங்கள் என இருவகையாகப் பிரிப்பர்.

## முதன்மை மூலங்கள்

தருமை ஆதீனத்திலிருந்து வெளியிடப்பட்ட (1957), திருநாவுக்கரசரின் தேவாரத் திருமுறைகள் நான்கு, ஐந்து, ஆறு ஆகிய இந்நூல்கள் முதன்மை மூலங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன.

## துணை மூலங்கள்

திருத்தொண்டர் புராணம் (பெரியபுராணம்) திருப்பனந்தாள் ஆதீன திருமடப்பதிப்பு, திருப்பனந்தாள், 9.6.1982 என்ற இந்த நூலுடன், பக்தி இலக்கிய நூல்கள், மாத இதழ்கள், சங்க இலக்கிய நூல்கள் ஆகியனவும் துணை மூலங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன.

## ஆய்வு எல்லை

திருநாவுக்கரசரின் வாழ்க்கை, சமயம், தத்துவம், இலக்கியம் எனப் பல்வேறு நிலைகளில் ஆய்வுகள் மேற்கொள்ளலாம். ஆனால், இங்கே திருநாவுக்கரசர் உணர்த்தும் மேலான தெய்வ நெறியாம் திருவடி நெறியைக்கண்டு தெளியும் நோக்குடன் இவ்வாய்வு தெய்வநெறி எல்லைக்கு உட்பட்டு விளங்குகிறது.

## ஆய்வு முன்னோடிகள்

மா. இராசமாணிக்கனார் 'பெரியபுராண ஆராய்ச்சி' (1948) என்ற நூலையும்; மறை. திருநாவுக்கரசு 'அப்பர் வரலாற்று ஆய்வுரை' (1978) என்ற நூலையும்; சொ. சிங்காரவேலன், 'அப்பர் தேவாரத்திறன்' (1974) என்ற நூலையும்; வை. இரத்தினசபாபதி 'திருநாவுக்கரசர் ஓர் ஆய்வு' பகுதி - 1 (1984), பகுதி - 2 (1986) என்ற நூலையும்; ஔவை. துரைசாமிப்பிள்ளை 'சைவ இலக்கிய வரலாறு' (1978) என்ற நூலையும்; அ. ச. ஞானசம்பந்தன் 'பெரியபுராணம் ஓர்

ஆய்வு' (1987) என்ற நூலையும்; க. வெள்ளைவாரணன் 'பன்னிரு திருமுறை வரலாறு' (1972) என்ற நூலையும் எழுதியுள்ளனர்.

இந்நூல்களில் பெரும்பான்மையும் திருநாவுக்கரசரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் காலத்தையும் தேவாரப் பாடல்களின் சிறப்பையும் சைவசமய வரலாற்றுப்பின்னணியையும் வாழ்வியல் நிகழ்வு விளக்கக் கொள்கையினையுமே விளக்கியுள்ளனர். இந்நூல்கள் திருநாவுக்கரசரைப்பற்றி அறிந்துகொள்ளும் நோக்கமுடையனவாக உள்ளன.

## ஆய்வு அணுகுமுறை

திருநாவுக்கரசரின் வாழ்க்கை வரலாற்றையும் அவரது தெய்வநெறிக் கருத்துகளையும் வெளிப்படுத்துமுகமாக இந்த ஆய்வு அமைந்திருப்பதால் இதில் விளக்கவியல் திறனாய்வு அணுகுமுறை மேற் கொள்ளப்படுகிறது.

## மொழிநடை

எடுத்துக்கொண்ட ஆய்வுக்கருத்தைத் தெளிவாக விளக்குவதற்கும் விளங்கிக் கொள்வதற்கும் ஏற்ற இனிய எளிய மொழிநடை அமைக்கப் பட்டுள்ளது. 'சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும்' தன்மை கையாளப் பட்டுள்ளது.

## ஆய்வுப் பகுப்பு

இவ்வாய்வேடு முன்னுரை, முடிவுரை நீங்கலாக ஐந்து இயல்களைக் கொண்டு விளங்குகிறது.

இயல் - 1 திருநாவுக்கரசர் வரலாறு
இயல் - 2 சமய நெறி
இயல் - 3 மெய்ப்பொருள் நெறி
இயல் - 4 தொண்டு நெறி
இயல் - 5 தெய்வ நெறி

## முன்னுரை

முன்னுரையில் ஆய்வுத்தலைப்பு, ஆய்வுநோக்கம், ஆய்வு மூலங்கள், ஆய்வு முன்னோடிகள், ஆய்வு எல்லை, ஆய்வு அணுகு முறை, மொழிநடை, ஆய்வுப்பகுப்பு, முடிவுரை, மேற்கோள்விளக்கம், பின்னிணைப்பு என விளக்கப் படுகின்றன.

## இயல் ஒன்று

'திருநாவுக்கரசர் வரலாறு' என்னும் இம் முதலியலில் திருநாவுக்கரசரின் அருட்பிறப்பு, வருவிக்கவுறுதல், சமணம் சார்தலும் தமக்கையின் முறையீடும், இறைவனின் அருட்பேறு, தமக்கையின் உதவியும் சைவம் திரும்பலும், சமணர் ஒறுப்பும் திருநாவுக்கரசர் சிறப்பும், சிவச் சின்னம் பெறுதல், சிவத் தலயாத்திரையும் சிறப்பு நிகழ்வுகளும், கயிலைக் காட்சி, திருப் புகலூரில் முக்திப்பேறு, திருநாவுக்கரசரின் காலம் என்பன போன்ற தலைப்புகளில் கருத்துத் தொகுக்கப்பட்டுள்ளது.

## இயல் இரண்டு

'சமயநெறி' என்னும் இவ்விரண்டாமியல் சமயம், உலக மதங்கள், இந்தியமதங்கள், இந்து மதம், சைவசமயம் அனைத்தும் சிவனே, அன்பே சிவம், சமணசமயம், பௌத்த சமயம், திருநாவுக்கரசர் நெறி என்னும் தலைப்புகளில் கருத்து விளக்கப்பட்டுள்ளது.

## இயல் மூன்று

'மெய்ப்பொருள் நெறி' என்னும் இம்மூன்றாமியல் நூல்கள் உணர்த்தும் மெய்ப்பொருள் நெறி, மக்கள் வாழ்வியல், சைவ சித்தாந்த உண்மை, திருநீற்றின் பெருமை, திருவைந்தெழுத்தின் சிறப்பு, ஐவரும் ஆமையும், பிறப்பறுக்கும் பெருநெறி, சிவகதி, நெஞ்சுக்கு நீதி, சொல்லும் செயலும் எனும் தலைப்புகளில் விரைத்துரைக்கப் பட்டுள்ளது.

## இயல் நான்கு

தொண்டு நெறி என்னும் இந்நான்காமியல் மானிடப் பிறப்பும் மனமும், தொண்டின் சொற்பொருளும் பயனும் வகையும், நன்னெறித் தொண்டும் தொண்டரும், தொண்டர்களைப் போற்றிய தொண்டர், அப்பரின் பிறதொண்டுகள், மக்கள் தொண்டின் சிறப்பு, என்கடன் பணி செய்து கிடப்பதே, தொண்டின் பெருமையென்னும் தலைப்புகளில் மேற்குறித்த இயல் கருத்து விளக்கப்பட்டுள்ளது.

## இயல் ஐந்து

தெய்வநெறி, இவ்வைந்தாமியல் தெய்வத் தொடர்புடைய செய்திகள், நெறிப்பொருளும் சிவச்செய்தியும், பலதெய்வக் கொள்கை, சிறுதெய்வ மறுப்பு, அப்பரும் அரனடியும், திருநாவுக்கரசரின் தெய்வ நெறி என்னும் தலைப்புகளில் விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

## முடிவுரை

ஆய்வேட்டில் தெரிவிக்கப்பட்ட அனைத்து முடிவுக் கருத்துகளையும் தொகுத்து இப்பகுதியில் தரப்பட்டுள்ளது. மேலும், இத்தலைப்பைத் தொடர்ந்து ஆய்வு செய்யவிரும்பும் ஆய்வாளர்க்குப் பரிந்துரையும் தரப்பட்டுள்ளது.

## மேற்கோள் விளக்கம்

மேற்கோள் விளக்கம் எண் கொடுக்கப்பட்டு அந்தந்த இயலின் முடிவில் கொடுக்கப்பட்டுள்ளது.

## பின்னிணைப்பு

பின்னிணைப்பாக துணைநூற்பட்டியல், திருநாவுக்கரசரைப் போற்றும் புராணங்கள், அப்பர் சென்ற திருத்தலங்கள், திருநாவுக்கரசருடைய சோழ நாட்டு யாத்திரைப்படம், இந்திய நாட்டுத் தலயாத்திரைப் பயணம் பற்றிய படம் ஆகியன இணைக்கப் பட்டுள்ளன.

## இயல் - 1

# திருநாவுக்கரசரின் வரலாறு

உலகம் உவப்ப அருள்நெறியாம் ஒளிநெறியினை மக்களுக்கு உணர்த்திய சான்றோர் பெருமக்கள் இப்புண்ணிய பூமியில் வாழ்ந்துள்ளனர். செந்தண்மைப் பூண்டொழுகும் சிவநேயச் செல்வர்களுள் தலைமையும் தகைமையும் பெற்றுத் திகழ்பவர் திருநாவுக்கரசராவார். இவர்தம் வரலாற்றில் அருட்பிறப்பு; வருவிக்கவுறுதல்; சமணம் சார்தல்; மீண்டும் சைவராதல்; சிவச் சின்னம் பெறுதல்; சிவத்தலயாத்திரை; கயிலைக்காட்சி முதலிய இன்றியமையா நிகழ்வுகள் இவ்வியலில் விளக்கப்படுகின்றன.

### அருட்பிறப்பு

தொண்டை நாட்டிற்கும் சோழநாட்டிற்கும் இடையே திருவளர் நாடாகத் திகழ்ந்தது திருமுனைப்பாடி நாடு. இந்நாட்டில்,

'தெய்வநெறி சிவம்பெருக்கும் திருவாமூரில்'[1]

வேளாண்குடி மரபில் குறுக்கையர்குடியில் தோன்றியவர் புகழனார். இவரின் வாழ்க்கைத் துணைவியராக விளங்கியவர் மாதினியார். இவ்விருவரின் அருந்தவப் பேற்றால் மக்கள் இருவர் தோன்றினர். முதலில் பிறந்தவர் திலகவதியார்; அடுத்துப் பிறந்தவர் மருள் நீக்கியார்.

'திலகவதியார் பிறந்து சிவமுறையாண் டகன்றதற்பின்
உலகில்கலைத் துறைதழைப்ப அருந்தவத்தோர் நெறிவாழ
உலகில்வரும் இருள்நீக்கி ஒளிவிளங்கு கதிர்போற்பின்
மலருமருள் நீக்கியார் வந்து அவதாரஞ் செய்தார்'[2]

என்பது மருள்நீக்கியாரின் பிறப்பைக்கூறும் தெய்வச் சேக்கிழாரின் பாடலாகும்.

இப்பாடலில்,

'ஒளிவிளங்கு கதிர்'

'பின்மலரும் மருள்நீக்கியார்'

'வந்து அவதாரஞ் செய்தார்'

என்னும் இச்சொற்றொடர்கள் ஆழ்ந்த பொருளமைந்தனவாகக் கருதப்படுகின்றன.

உலகுக்கு இருளைப் போக்கி ஒளிதந்து காக்கும் கதிரவனைப் போல, மக்களின் அறியாமையாகிய தீமைகளை நீக்கி மேலான தெய்வநெறியாம் பேரொளியைத்தந்து காக்க வல்லவர் மருள் நீக்கியார் என்பது இத்தொடரால் பெறப்படும் உண்மையாகும்.

ஒரு பாத்திரத்தை அறிமுகப்படுத்தும்போது இலக்கியக் கர்த்தாக்கள் அதன் சிறப்பை வெளிப்படுத்துவர். அதேபோன்று சேக்கிழார், திருநாவுக்கரசரை அறிமுகப்படுத்தும்போது, 'ஒளிவிளங்கு கதிர்போல் பின்மலரும்' எனக்குறிப்பிட்டிருப்பது முதலில் அறியாமையில் உழன்று பின் அதை உணர்ந்து மாற்றி வெளிப்படுவார் எனக்குறிப்பிட்டிருப்பது ஆசிரியரின் தனித்தன்மை என்று சுட்டிக் கூறலாம். அவர் முதலில் அறியாமையில் உழன்று பின் வெளிப்படும் உத்தியை முதலிலேயே ஆசிரியர் காட்டுகிறார் எனலாம்.

'புறவிருள் நீக்கிப் பொருட்களைப் புலப்படுத்தும் ஞாயிற்றினும் அகவிருள்நீக்கி ஒளிநெறிகாட்டி மாந்தரை உய்விக்கும் அடிகளின் தோற்றமே உலகிற்கு ஏற்றமுடையது. ஆயினும், சேக்கிழார் பெருமான் அடிகளின் தோற்றத்திற்குக் கதிரவனை உவமையாகக் கூறியது, தெரிந்த பொருளைக் காட்டி தெரியாப் பொருளைத் தெரிவித்ததற்குத் தக்க உவமையாக விளங்குவதால் பகலவனை எடுத்துக்காட்டாய்க் கொண்டிருக்கிறார்.'[3]

பின்மலரும் என்றதனால் இளமைக்காலத்தையும் இக்கால வாழ்வின் துயரையும் அத்துயரால் பெறப்போகும் அனுபவத்தையும் அவ்வனுபவம் பின்னாளில் மலர்ச்சியையும் தரும் என்ற குறிப்பினை அளிப்பதாக உள்ளது.

மருள்நீக்கியார் என்பது மாந்தர்தம் மயக்க உணர்வாகிய மனஇருளை நீக்கவந்தவர் என்ற பொருளாகிறது.

'பொருளல்ல வற்றைப் பொருளென்று உணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு'[4]

என்று திருவள்ளுவரும் குறிப்பிட்டுள்ளார்.

மருள்நீக்கியார் என்ற இப்பெயர் இயற்பெயராக இல்லாமல் சேக்கிழாரால் சிறப்புப் பெயராக இடப்பட்டிருக்கலாம்.

1. திருநாவுக்கரசர், திருவாமூரில் புகழனார்க்கும் மாதினி யார்க்கும் இரண்டாம் மகனாகப் பிறந்தார்.
2. இவரின் தமக்கையார் திலகவதி என்று அறியப்படுகிறது.
3. திருநாவுக்கரசர் ஒளிவிளங்கு கதிர்; பின்மலரும் மருள் நீக்கியார்; வந்து அவதாரஞ்செய்தார் என்றும் அறியக் கிடக்கின்றன.

## வருவிக்கவுறுதல்

சிறப்புப் பொருந்திய மேலோர்களின் பிறப்பை அவதரித்தார்; வந்து தோன்றினார்; உய்யப் பிறந்தார் என்றெல்லாம் பல்வேறு வகையாகச் சிறப்பித்துக் கூறுதல் நூல்வல்லார் மரபாகும். அவ்வழி சேக்கிழார், திருநாவுக்கரசரின் பிறப்பை அவதரித்தார், வருவிக்க வுற்றார் என்று சிறப்பித்துள்ளார்.

மருள்நீக்கியாரின் பிறப்பைக்கூறும் சேக்கிழார், 'வந்து அவதாரஞ்செய்தார்' என்று இங்கே தெரிவிப்பது தெய்வத்தன்மை வாய்ந்ததொரு சிறப்பை உணர்த்துவதாகும்.

திருவருட்பிரகாச வள்ளலாராகிய இராமலிங்க அடிகள்,

> **'இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ்ந் திடுதற்கென்றே என்னை இந்த உகத்தே இறைவன் 'வருவிக்கவுற்றேன்' அருளைப் பெற்றேனே'[5]**

என்று பிறப்பின் சிறப்பையும் நோக்கத்தையும் வெளிப்படுத்துகிறார். இப்பாடலில் வரும் வருவிக்கவுற்றேன் என்பது சொல்லழகு மிக்கது.

எனவே, அவதாரம் என்ற சொல்லுக்கு 'வருவிக்கவுறுதல்' என்பதே மிகவும் பொருத்தமுடையதாகும். திருநாவுக்கரசரும் வருவிக்கவுற்றவர் என்பது விளங்குகிறது.

## சமணம் சார்தலும் தமக்கையின் முறையீடும்

சைவ மரபிலே தோன்றிய திருநாவுக்கரசர் ஊழ்வினை வயத்தால் சமணம் சார்ந்தார். சமணத்திலிருந்து தம்பியை விடுவிக்கத் திலகவதியார் இறைவனிடம் முறையிட்டார்.

இளம் பருவத்திலேயே தாய்தந்தையரை இழந்த மருள் நீக்கியாருக்கு நிலையாமை உணர்வு நெஞ்சில் பதிந்தது.

நிலையான இன்பத்தின் உண்மையினைக் காண அவருள்ளம் பெரிதும் அவாவிற்று. இந்நிலையில் சமணசமயக்கருத்துக்கள் அவரை ஈர்த்திருக்க வேண்டும்.

'நில்லாத உலகியல்புகண்டு நிலையா வாழ்க்கை
அல்லேன் என்றுஅறத்துறந்து சமயங்கள் ஆனவற்றின்
நல்லாறு தெரிந்துணர நம்பர் அருளா மையினால்
கொல்லாமை மறைந்துறையும் அமணசமயம் குறுகுவார்'[6]

அதனால் சைவ சமய மரபிலே அவதரித்த மருள்நீக்கியார் சைவ சமயத்தை விட்டு நீங்கி சமண சமயத்தைச் சார்ந்தார் என்று அறிய முடிகிறது.

சமணம் சார்ந்த மருள்நீக்கியார், அருங்கலை நூல்களையெல்லாம் கற்றுத்தேர்ந்தார். அவரின் புலமைத்திறனையறிந்த சமணர்கள் 'தருமசேனர்' என்ற உயரிய பட்டத்தை அளித்துச் சிறப்பித்தனர்.

'தருமசேனர் தம் புலமையாற்றலால் புத்தரை
வாதில் வென்று சமணத்திற்கு ஆக்கந்தேடினார்'[7]

என்பதை அறிய வாய்ப்புள்ளது.

திருக்குறளுக்கு உரைகண்ட பழைய உரையாசிரியர்கள் பதின்மருள் 'தருமர்' என்பவரும் ஒருவர். 'தருமசேனர்' என்ற பட்டம் பெற்ற மருள்நீக்கியாரே இத்திருக்குறளுக்கு உரைகண்ட தருமர்'[8] என்ற கருத்து இங்கே சிந்திக்கத்தக்கதாக உள்ளது.

திருவதிகைத் திருக்கோயிலில் திருத்தொண்டு செய்துவரும் திலகவதியார், தன் தம்பி சைவநெறியிலே பிறந்து வளர்ந்து தற்போது சமண சமயம் சார்ந்ததை எண்ணிப் பெரிதும் வருந்தினார்.

"திருவதிகைப் பெருமானே! சமணசமயத்தில் அழுந்திவிட்ட என் தம்பியைக் கரையேற்றித் தாங்கள் ஆட்கொண்டருள வேண்டும்" என்று நாள்தோறும் இறைவனை வேண்டி நின்றார் என்பது புலனாகிறது.

'தூண்டுதவ விளக்கனையார்
சுடரொளியைத் தொழுது என்னை
ஆண்டருளும் நீர்ஆகில்
அடியேன்பின் வந்தவனை
ஈண்டுவினை பரசமயக்
குழிநின்றும் எடுத்தாள

**வேண்டும்; எனப்பலமுறையும்**
**விண்ணப்பம் செய்தனரால்'**[9]

என்ற இப்பாடல் மருள்நீக்கியார் சமணம் சார்ந்ததையும் அச்சமயத்திலிருந்து விடுபட்டு மீண்டும் சைவசமயம் சேர்தல் வேண்டுமென்று திலகவதியார் இறைவனிடம் முறையிட்டதையும் விளங்கிக்கொள்ள முடிகிறது.

## இறைவனின் அருட்பேறு

திலகவதியாரின் வேண்டுதலுக்கு இரங்கிய இறைவன், அவர் கனவில் தோன்றி,

**'உன்னுடன் பிறந்த தம்பியாகிய மருள்நீக்கியார்க்கு சூலைநோய் கொடுத்து ஆட்கொள்வோம், உன் மனக் கவலையை விடுவாயாக'**[10]

என்று சிவபெருமான் கூறியுள்ள செய்தியை அறியமுடிகிறது. சிவபெருமான் இவ்வாறு கூறியதற்குக் காரணம்,

**'பண்டுபுரி நற்றவத்தின் பழுதின் அளவுஇறைவழுவும் தொண்டரை ஆள'**[11]

என்பதாம்.

'அஃதாவது, முற்பிறப்பில் மருள்நீக்கியார் எனையடையத் தவம் புரிந்தார். அத்தவத்தில் சிறிது வழுவிவிட்டார். அப்பிழையை நீக்கி அவரை ஆட்கொள்ளவே அவருக்குச் சூலைநோய் தருகின்றேன்' என்று இறைவன் கூறியதை மேற்கண்ட எடுத்துக்காட்டால் அறிய முடிகிறது.

**'முன்னமே முனியாகி எனையடையத் தவமுயன்றான்'**[12]

என்பது பொருள்நுட்பம் வாய்ந்தது. முற்பிறவிச் சிந்தனைக்கு உரியது.

இறைவனின் திருவருள் சோதனையால் தருமசேனர் வயிற்றில் சூலைநோய்ப்பற்றியது. அவரது குடலை முறுக்கிக் கசக்கியது. உடலையும் உயிரையும் வாட்டி வதைத்தது. இந்நோயைப் போக்க இயலாத தருமசேனர் துடித்துத்துவ்ண்டார். சோர்ந்து மயங்கினார். தாம்கற்ற மந்திரத்தால் நோய்தீர்க்க முயன்றார். அவரது முயற்சி பலனளிக்கவில்லை.

'இந்த நிலையையறிந்த சமணர்கள் கவலையுற்றனர். குண்டிகை நீர்கொடுத்தும் மந்திரித்தும் மயிற்பீலியால் உடலெங்கும் தடவியும் நோய் தீர்க்க முயன்றனர். அம்முயற்சி வீணாவதையுணர்ந்து செய்வதறியாது அவரைக் கைவிட்டகன்றனர்.'[13]

## தமக்கையின் உதவியும் சைவத்திற்குத் திரும்பலும்

சூலைநோயால்துன்புறும்தருமசேனருக்குத்தம்தமக்கையாரின் நினைவுதோன்றியது. அவரிடம்சென்று உயர்வுபெறலே சிறந்தவழி என்ற முடிவுக்கு வந்தார். சிலரின் உதவியுடன் சமணக்கோலம் நீங்கி, திருவதிகையிலுள்ள தம் தமக்கையாரிடம் வந்து சேர்ந்தார்.

என்னைப் பற்றி வருத்தும் இச்சூலைநோய் அகல்வதற்கு வழிகூறி, உய்யும் நெறியைக் காட்டவேண்டும் என்று தன் தமக்கையாரிடம் வேண்டினார்.

"தம்பீ! செந்நெறியான சிவநெறியை விடுத்து நீர் கொள்கையிலாத கொடுநெறியாம் சமணநெறியில் வீழ்ந்தீர். அதனால் கொடுந்துயருற்றீர். இந்நோய் உமக்குச் சிவபெருமான் திருவருளால் வாய்த்தது. ஆதலால், தமது திருவடிச்சார்பினை அடைந்தோரது பற்றுகளைப் போக்கிக் காக்கும் சிவபெருமானை வணங்கிப் பணிசெய்வீராக!" என்று கூறியருளினார். மருள் நீக்கியாரும் இதற்கிசைந்தார்.

திலகவதியார், மாதொரு பாகனின் திருவுருவை மனதில் எண்ணி 'நமசிவாய' என்னுந் திருவைந்தெழுத்தை ஓதித் திருவெண்ணீற்றைத் தம்பிக்குக் கொடுத்தார்.

அதைப்பெற்ற மருள்நீக்கியார், 'எனக்குப் பெருவாழ்வு வந்தது', என்று தன்திருமேனியில் தரித்துக்கொண்டார். சிவன் கோயிலைத் தொழுது வலம் வந்தார். அப்போது சிவபெருமானின் திருவருளால் அருந்தமிழ்ப் பாமாலைபாடும் மெய்யுணர்வு வரப்பெற்றார்.

'கூற்றாயினவாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்;
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்;
தோற்றாது என்வயிற்றின் அகம்படியே
குடரோடு தொடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே'[14]

என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடினார். பதிகம்பாடி முடித்தவுடன் இறைவனின் திருவருளால் சூலைநோய் முற்றிலும் நீங்கி நலம்பெற்றார்.

இவற்றால் இறைவன் திருநாவுக்கரசருக்குச் சூலை நோய் தந்து ஆட்கொண்டார் என்று அறிய முடிகிறது.

'கூற்றாயினவாறு' என்று தொடங்கும் பதிகம் பாடினார். இப்பதிகத்தின் சிறப்பு நோக்கி வீரட்டானத்து இறைவன் அவருக்கு 'நாவுக்கரசு' எனப் பெயர் வழங்கினார் என்பதனைப் பெரியபுராணத்துள் வரும்,

'பாவுற்றவர் செந்தமிழின் சொல்வளப்
பதிகத்தொடை பாடிய பான்மையினால்
நாவுக்கரசு என்று உலகேழினும் நின்
நாமம் நயப்புற மன்னுக'[15]

என்னுஞ் செய்யுள்வரியால் அறியமுடிகிறது.

## சமணர் ஒறுப்பும் திருநாவுக்கரசர் சிறப்பும்

தருமசேனர், சூலைநோய் நீங்கப் பெற்றதையும் சிவனருளால் திருநாவுக்கரசு என்று பெயர் பெற்றதையும் மீண்டும் அவர் சைவ சமயத்திற்குத் திரும்பியதையும் அறிந்த சமணர்கள் சினங் கொண்டனர். அவருக்குத் துன்பம் விளைவிக்க எண்ணினர்.

பல்லவ மன்னன் மகேந்திரவர்மனிடம், சமணசமயத்தின் மதிப்பைக் குறைக்கும் நிலையில் திருநாவுக்கரசர் செயல்படுகிறார்; எனவே, அவரைத் தண்டிக்க வேண்டுமென்று சமணர்கள் வேண்டினர்.

இதனை ஏற்ற அரசன், அமைச்சரை அனுப்பி திருநாவுக்கரசரை அழைத்துவரப் பணித்தான். மன்னனின் ஆணையயறிந்த திருநாவுக்கரசர்,

'நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்பமில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரன் நற்சங்க வெண் குழையோர் காதில்
கோமாற்கே நாம்என்றும் மீளா ஆளாய்க்
கொய்ம் மலர்ச்சேவடி இணையே குறுகினோமே'[16]

என்று வெகுண்டெழுந்தார். எனினும், 'அமைச்சர்களுக்குத் துன்பம் நேருமே என்று மனமிரங்கி மன்னனிடம் சென்றார்.'[17]

திருநாவுக்கரசருக்குப் பல்லவ மன்னன் பல்வேறு தண்டனை களைத் தந்து துன்பப்படுத்தினான். நீற்றறையில் அடைத்தும்; நஞ்சு கலந்த பால்உணவை வஞ்சனையால் உண்பித்தும்; யானையின் காலால் இடரச் செய்தும்; கல்லோடு அவரைப் பிணித்துக் கடலிற் பாய்ச்சியும் கொடுமைகள் செய்தான்.

'சிவபெருமானின் திருவருட்கருணையினால் மன்னன் செய்த கொடுமைகளிலிருந்து திருநாவுக்கரசர் மீண்டார். இதனைத் திருநாவுக்கரசர் திருவாய் மலர்ந்தருளியுள்ள திருப்பாடல்களாகிய அகச்சான்றுகளாலும் திருநாவுக்கரசரைப் போற்றிய நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார் போன்ற பெருமக்களின் வாய்மொழிகளாலும் நன்கு வலியுறுத்தப்பெறுவதைக் காணலாம்.'[18]

தண்டனைகள் தந்த பல்லவமன்னன் தன் தவறுக்களுக்காக மிகவும் வருந்தி, தன் பிழைகளைப் பொறுத்தருளுமாறு திருநாவுக்கரசரை வேண்டி நின்றான்.

'அரசன் சைவ சமயமே மெய்ச்சமயமென உணர்ந்து சைவன் ஆனான். அதற்கு அறிகுறியாகத் தன் பெயரால் குணபரவீச்சுரம் என்னும் சிவனாலயம் ஒன்றையும் கட்டுவித்தான்.'[19]

பல்லவ மன்னனைச் சமணத்திலிருந்து சைவசமயத்திற்கு மாற்றிய திருநாவுக்கரசர், தான் ஒரு மேலான சிவத்தொண்டர் என்பதை உறுதிப் படுத்தவும் உலகிற்கு உணர்த்தவும் விரும்பினார். திருப்பெண்ணாகடம் வந்தடைந்தார்.

## சிவச்சின்னம் பெறுதல்

திருப்பெண்ணாகடத்துத் திருத்தூங்கானை மாடச்சுடர்க் கொழுந்தைப் போற்றிப் பரவினார். சமணத்திலுற்ற இவ்வுடல் புனித மெய்துதல் வேண்டி தன்மேனியில் சூலக்குறியையும் இடப முத்திரையையும் இட்டருள வேண்டுமென வேண்டினார்.

'பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு
விண்ணப்பம் போற்றி செய்யும்
என்னாவி காப்பதற்கு இச்சையுண்டேல்
இருங்கூற்று அகல
மின்னாரும் மூவிலைச் சூலம்
என்மேல் பொறிமேவு கொண்டல்

துன்னார் கடந்தையுள் தூங்கானை
மாடச் சுடர்க்கொழுந்தே'[20]

என்று தான் வேண்டியவாறே சிவச்சின்னம் பொறிக்கவும் பெற்றார்.

சமணர் சொத்தாக இருந்த தம் உடலைச் சிவச்சொத்தாக ஆக்கிக்கொள்ள திருநாவுக்கரசர் இவ்விதம் வேண்டிக்கொண்டதாக அறியப்படுகிறது.

## சிவத்தலயாத்திரையும் சிறப்பு நிகழ்வுகளும்

தம்மை அறியாமையிலிருந்து கரையேற்றியருளிய சிவபெருமானைத் திருப்பாதிரிப்புலியூரில் வழிபட்ட திருநாவுக்கரசர் திருமாணிக்குழி, திருத்தினைநகர், திருமுதுகுன்றம், பெண்ணாகடம் போன்ற சிவத்தலங்களை வழிபட்டு தில்லை சென்றார்.

தில்லைச் சிற்றம்பலத்து ஆடும் பெருமான் திருமுன்பு அடைந்தார். பேரன்பால் உருகி வழிபட்டார். கூத்தப்பெருமானையே நோக்கி நின்றார். இறைவன், அஞ்சாதீர்! எனக்காட்டும் அமைந்த கையும் புன்முறுவல் பூத்தத் திருமுகமும் வாயும் திருநாவுக்கரசரை நோக்கி 'என்று வந்தாய்?' என்று கேட்பது போன்ற குறிப்புத் தோன்றியது. இதற்கு விடையளிப்பதுபோல்,

'முத்தனே! முதல்வா! தில்லை அம்பலத்து ஆடுகின்ற
அத்தா! உன்ஆடல் காண்பா னடியேன் வந்தவாறே'[21]

என்ற பதிகத்தை நெஞ்சுருகப்பாடி இறைவனைத் தொழுதுள்ளார்.

அங்கிருந்து சீர்காழி சென்று, அம்மையின் அருட்பாலுண்ட ஆளுடையப் பிள்ளையாராகிய திருஞானசம்பந்தரைச் சந்தித்தார் அவரும் திருநாவுக்கரசரைக் கண்டு வணங்கி 'அப்பரே!' என்றழைத்து மகிழ்ந்தார். இவ்விருவர் சந்திப்பினை,

'அருட்பெருகு தனிக்கடலும் உலகுக்கெல்லாம்
அன்புசெறி கடலுமாம் எனவும் ஓங்கும்
பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற
புண்ணியக்கண் இரண்டெனவும் புவனம்உய்ய
இருட்கடுவுண்டவர் அருளும் அகிலமெல்லாம்
ஈன்றாள்தன் திருவருளும் எனவும்கூடித்
தெருட்கலை ஞானக்கன்றும் அரசும்சென்று
செஞ்சடை வானவர்கோயில் சேர்ந்தார் அன்றே'[22]

என்று சேக்கிழார் கூறி மகிழுந்திறன் மிகவும் போற்றுதற்குரியதாகும்.

திருவாவடுதுறையை அடைந்த திருநாவுக்கரசர் அங்கும் பலநாள் தங்கியிருந்து திருத்தாண்டகம், திருக்குறுந்தொகை, திருநேரிசை, திருச்சந்தவிருத்தம் ஆகிய செந்தமிழ்ப் பாமாலைகளைக் சூட்டி மகிழ்ந்தார்.

திருச்சக்திமுற்றத்தில் தங்கியிருந்தபோது,

'கோவாய் முடுகி யடுதிறற் கூற்றம் குமைப்பதன்முன்
பூவாரடிச் சுவடென்மேற் பொறித்து வை'[23]

என்று வேண்டினார்.

இவ்வேண்டுகோளைச் செவிமடுத்த சிவபெருமான் திருநாவுக்கரசரை நல்லூருக்கு வரப்பணித்து,

'உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்'[24]

என்று தன்னுடைய திருவடியை அவர் தலையில் சூட்டியருளினார்.

திங்களூரில், திருநாவுக்கரசர் தன்னிடம் பக்தியும் பேரன்பும் கொண்ட அப்பூதியடிகளாரைச் சந்தித்தார். அவரின் மூத்தமகன் பாம்பு தீண்டி இறந்தான். அவனை 'ஒன்றுகொலாம்'[25] என்று தொடங்கும் திருப்பதிகம்பாடி உயிர்ப்பித்தார்.

திருவீழிமிழலையில் வறுமையைப்போக்க இறைவனிடம் படிக்காசு பெற்று மக்களின் பசிப்பிணி போக்கினார்.

திருமறைக்காட்டில் அடைத்திருந்த திருக்கோயில் கதவு திறக்க,

'பண்ணினேர் மொழியாளுமை பங்கரோ
மண்ணினி னேர்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்ம்மினே'[26]

என்று பாடி இறைவனை வணங்கி மகிழ்ந்தார்.

திருநாவுக்கரசர், திருப்பைஞ்ஞீலியை அடைந்தபோது பசியாலும் நீர்வேட்கையாலும் பெரிதும் துன்புற்றார். இறைவன் வழிப்பயணம் செய்பவர் போல் வந்து பொதிச்சோறு அளித்து அயர்வு நீக்கியருளினார்.

'திருவண்ணாமலையைத் தரிசித்து, தொண்டை நாட்டுத் தலங்களுக்கும் சென்று வழிபட்டார். திருக்களாத்தி ஈசனை வழிபட்டுப் பாடலால் பரவித் துதித்தார். திருக்கயிலை செல்லும் ஆர்வமுற்றார்.'[27]

## கயிலைக்காட்சி

திருக்காளத்தியைத் தரிசித்த திருநாவுக்கரசர் வடதிசை நோக்கிப் பயணமானார். 'திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்) வணங்கி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், இலாடதேசம், மத்தியப் பிரதேசம் கடந்து வாரணாசி (ஸ்ரீகாசி) அடைந்தார்.'[28] அங்குள்ள இறைவனைத் துதித்துப் போற்றியிருக்கிறார்.

'திருக்கயிலாயத்தைக் காணவேண்டும் என்னும் பெரு விருப்புடன் இரவு பகலாகத் தொடர்ந்து நடந்தார். காடு, மலை கடந்தார். இதனால் கால்தசைகள் தேய்ந்தன. இரண்டு கைகளாலும் தாவிச்சென்றார். கைகள் மணிக்கட்டுவரை சிதைந்தன. மார்பினால் தவழ்ந்து வருந்திச் சென்றார். மார்புச் சதைகளும் நைந்து எலும்புகள் தேய்ந்து முறிந்தன. உடல்முழுவதும் தேயவே, தொடர்ந்து செல்ல இயலாமல் அவ்வழியிலேயே தங்கிக் கிடந்தார்.'[29]

இறைவன், முனிவர் வேடங்கொண்டு, இக்கொடிய வழியில் அங்கஞ்சிதைந்து அழியும்படி வந்த திருநாவுக்கரசரைக் கண்டு வியந்து இவ்வாறு வருவதற்கான காரணத்தைக் கேட்டார்.

**'ஆளும் நாயகன் கைலையில் இருக்கைக் கண்டலல்லால்**
**மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்'[30]**

என்று திருநாவுக்கரசர் பதிலுரைத்தார்.

அவரின் குன்றாத ஆர்வத்தையும் குலையாத மனத் துணிவையும் கண்டு வியந்த இறைவன், நாவுக்கரசரே! எழுவீர் என்று கூறினார். உடல் ஊறுபாடுகள் முற்றும் நீங்கிய நற்றிரு மேனியுடன்,

**'அண்ணலே!**
**கண்ணினால் திருக்கைலையில் இருந்த நின்கோலம்**
**நண்ணிநான் தொழ நயந்தருள்புரி எனப்பணித்தார்'[31]**

இறைவன், நீர் இந்தத் தடாகத்தில் மூழ்கித் திருவையாறடைந்து கைலைக் காட்சியைக் காண்பீராக! எனப்பணித்தருளினார். அவ்வாறே அத்தடாகத்தில் மூழ்கிய திருநாவுக்கரசர் திருவையாற்றுத் தடாகத்தில் தோன்றினார்.

திருவையாற்றில் கைலைத் திருக்கோலக் காட்சியைக் கண்குளிரக் கண்டார்; ஆடினார்; பாடினார்; அன்பினால் நெகிழ்ந்து இன்பக் கண்ணீர் உகுத்து நின்றார்.

'மாதர் பிறைக் கண்ணியானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவார் அவர்பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல்
ஐயாறு அடைகின்ற போது
காதல் மடப்பிடி யோடுங்
களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதங்
கண்டறியாதன கண்டேன்'[32]

என்று தான்கண்ட காட்சியை எண்ணி இன்புற்றிருந்தார்.

## திருப்புகலூரில் முக்திப்பேறு

சோழநாட்டுப் பூம்புகலூரையடைந்த திருநாவுக்கரசரின் பற்றற்ற தூய துறவுநிலையை உலகுக்கு எடுத்துக்காட்ட விரும்பிய 'இறைவன்' அவர் உழவாரப்பணி செய்யும் இடங்களில் பொன்னும் நவமணியும் விளங்கும்படிச் செய்தார். ஓடும் செம்பொன்னும் ஒன்று என்று எண்ணிய திருநாவுக்கரசர் அவற்றை வீசி எறிந்தார்.'[33]

'மேலும் சோதிக்க விரும்பிய இறைவன் தேவலோக அரம்பையரை வரச்செய்து திருநாவுக்கரசர் முன் ஆட்லும் பாடலும் நிகழ்த்தி ஆசையைத் தூண்டுமாறு பணித்தார். திருநாவுக்கரசர் தன் மனஉறுதியிலிருந்து சிறிதும் மாறுபடாமல் சிவபெருமான் திருவடிகளையே சிந்தித்திருந்தார்.'[34]

சிவானந்த ஞான வடிவாகிய சிவபெருமானின் சேவடிக்கீழ் 'சித்திரை மாதச் சதயத் திருநாளிலே'[35] திருநாவுக்கரசர் அமர்ந்தினிதிருந்தார்.

## திருநாவுக்கரசரின் காலம்

திருநாவுக்கரசர், நடுநாட்டின்கண் அரசுபுரிந்த மகேந்திர பல்லவன் காலத்தவர் என்று வரலாற்றால் அறியமுடிகிறது. இம்மன்னனின் ஆட்சிக்காலம் கி.பி. 600 - 630 ஆண்டாகும். எனவே, திருநாவுக்கரசரின் காலமும் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியும் ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியாகவும் இருக்கலாம் என்று கருத இடமுண்டு.

திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் சமகாலத்தவர். ஒருவரையொருவர் சந்தித்து வணங்கி வாழ்த்தியிருக்கின்றனர். 'திருஞான சம்பந்தர் காலம் கி.பி. 638ஆம் ஆண்டாகும்.'[36]

எனவே 'திருநாவுக்கரசர் காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டு'[37] என்று துணிந்துரைக்கப்படுகிறது.

## இயல் முடிபு

1. திருநாவுக்கரசர் திருவாமூரில் புகழனார்க்கும் மாதினியார்க்கும் மகவாகத் தோன்றினார். இயற்பெயர் மருள்நீக்கியார் என அறிகிறோம்.

2. சைவம் விடுத்து சமணம் சார்ந்து தருமசேனர் பட்டம் பெற்றார்.

3. தமக்கை திலகவதியார் வேண்டுதலால், இறைவன், திருநாவுக்கரசருக்குச் சூலைநோய் தந்து ஆட்கொண்டார்.

4. சமணர்களின் ஒறுப்புகளை இறைவனின் திருவருள் கருணையின் துணையால் வென்று மீண்டார்.

5. திருப்பெண்ணாகடத்தில் சிவச்சின்னமாம் சூலக்குறியும் இடபமுத்திரையும் இடப்பெற்றார்.

6. இறைவனின் திருக்கோயில்கள்தோறும் சென்று உழவாரத் திருத்தொண்டு செய்து இறைவனைப் பாடிப்பரவி வழிபட்டார்.

7. பல்வேறு அற்புதங்களை நிகழ்த்தினார்.

8. கயிலைக் காட்சியைத் திருவையாற்றில் கண்டார்.

9. திருப்புகலூரில் முக்தி பெற்றார்.

10. திருநாவுக்கரசரின் காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டாகும்

## அடிக்குறிப்பு

1. பெ. பு. செ. 1282.

2. மேலது, 1288.

3. மறை. திருநாவுக்கரசு, அப்பர் வரலாற்றுஆய்வுரை, ப.3 மறைமலையடிகள் பதிப்பகம், பெரம்பூர், சென்னை-82. 1978.

4. குறள். 351.

5. தி.அ.பா. 5485.

6. பெ. பு. செ. 1307.

7. தாமரைக்கண்ணன், திருநாவுக்கரசர், ப.19, பராசக்தி பதிப்பகம் அச்சிறுப்பாக்கம், நவம்பர், 1989.

8. த. விசுவநாதன், அப்பரடிகள், ப.11, அருணோதயம் பதிப்பகம், சென்னை, 1980.

9. பெ. பு. செ. 1306.

10. மேலது, 1318.

11. மேலது, 1319.

12. பெ. பு. தி. நா. பு. 75.

13. வித்துவான் க. வெள்ளைவாரணன், பன்னிருதிருமுறை வரலாறு, முதற்பகுதி, அண்ணாமலைப்பல்கலைக்கழகம், 1972.

14. அப். தே. 4-1.

15. பெ. பு. தி.நா.பு. 75.

16. அப். தே. 6-961.

17. தாமரைக்கண்ணன், திருநாவுக்கரசர், ப.19. 1989.

18. ஈ.என். தணிகாசல முதலியார், அப்பர், ப.26. கலாநிலையம் சென்னை, 1929.

19. ஆதிரையார், பெரியபுராணக்கதைகள், ப.29. சுவாமிமலை பதிப்பகம், தி.நகர், சென்னை-17. 1992.

20. அப். தே. 4 - 1028.

21. மேலது, 4 - 229.

22. பெ. பு. செ. 145.

23. அப். தே. 4 - 933.

24. பெ. பு.செ. 1465.

25. அப். தே. 4-177.

26. மேலது, 5 -93.

27. தாமரைக்கண்ணன், திருநாவுக்கரசர், ப. 75

28. மறை. திருநாவுக்கரசு, அப்பர் வரலாற்று ஆய்வுரை, ப. 197

29. மேலது.

30. பெ. பு. செ. 1636.

31. மேலது, 1638.

32. அப். தே. 4 - 21.

33. தாமரைக்கண்ணன், திருநாவுக்கரசர், ப. 84

34. மேலது, ப. 85.

35. மேலது, ப. 86.

36. வித்துவான் க. வெள்ளைவாரணன், பன்னிருதிருமுறை வரலாறு, ப. 368.

37. தாமரைக்கண்ணன், திருநாவுக்கரசர், ப. 17.

3

# இயல் - 2

# 2. சமய நெறி

இவ்விரண்டாமியல் சமயம்; உலக மதங்கள், இந்திய மதங்கள்; இந்துமதம்; சைவ சமயம், அனைத்தும் சிவனே, அன்பே சிவம், சமண சமயம், திருநாவுக்கரசரின் சமயநெறி என்னும் தலைப்புகளில் விளக்கப்பெறுகிறது.

## சமயம்

இவ்வுலகத்தே பல்வேறு சமயங்கள் பல்கிக் கிடக்கின்றன. ஈண்டு, சமயம் என்னும் தலைப்பு விளக்கம் பெறுகிறது.

உலகில் வாழும் மக்களைப் பக்குவப்படுத்தி நல்வழிக்கு அழைத்துச் செல்லும் வழிகாட்டியாகச் சமயத்தைக் கொள்ளலாம். சமயம் என்பது சமை என்ற அடிச்சொல்லிலிருந்து பிறந்ததாக அறிஞர்கள் கூறுவர். ஆதலால் மக்களைப் பக்குவப்படுத்தும் அமைப்பு சமயம் என்று கொள்ளப்படுகிறது.

## சமய வகைகள்

உலகில் பல்வேறு சமயங்கள் நிலவுகின்றன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொருவகையில் உயர்ந்ததாகவும் ஒப்பற்றதாகவும் காணப்படுகின்றன. பொதுநோக்கில் பார்க்கும் போது, மனித மேம்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் வாழ்விற்கும் ஒருமைப்பாட்டிற்கும் சமயங்கள் வழிவகுக்கின்றன என்பதே உண்மை.

## சமய விளக்கம்

மனித வாழ்வின் செம்மைக்கு வழிவகுத்துக் கொடுத்துள்ளது சமயம். இதன்மூலம் மனிதன், தன் தலைவனாகிய மேலான பரம்பொருளை உணர்ந்து அவ்வுணர்வின் வழி செயல்பட்டு மக்களினத்திற்குத் தன்னாலியன்ற தொண்டினைச் செய்தல்

சிறப்புடையதாகும். சமயம் என்பதை இக்காலத்தவர் பலரும் வெறும் சடங்குகள் நிறைந்த கூட்டமைப்பு என்று தவறாகக் கருதுகின்றனர். சடங்குகள் சமயவாழ்வின் உட்பகுதிகளாகக் கொள்ளத் தக்கவையேயன்றி இவையே சமயங்கள் என்று கொள்ளுதல் பொருந்தாது.

எனவே, சமயங்கள் வெறும் சடங்குகளல்ல என்பது தெளிவாகிறது. சமயம் பொருளற்ற சடங்களுக்கு அப்பாற்பட்டு இறைமை இயல்பிற்கு அழைத்துச்செல்லும் ஒளிவிளக்கு எனக் கொள்வர். சமயம் என்பது கடவுள் நெறி என்றே சொல்லப்படுகிறது.

## சமயம் என்ற சொல்

சமயம் என்ற சொல் காப்பியங்களில் காணப்படுகின்றது. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலையில் சமயம் என்ற சொல் வருகிறது. அதற்குமுன் உள்ள நூல்களில் காணப்படுவதாகத் தெரியவில்லை.

'சமயக்கணக்கரும்'[1]

'ஒட்டிய சமயத்து உறுபொருள்வாதிகள்'[2]

என்ற மணிமேகலைத் தொடர்களில் சமயம் என்ற சொல் குறிக்கப் படுகின்றது.

எனவே, சமயம் என்பது கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து தோன்றி வளர்ச்சியடைந்துள்ளதாகக் கொள்ளலாம். தொடக்கத்தில் ஒற்றுமையுணர்வை வளர்ப்பதாக அமைந்த சமயம் காலப்போக்கில் ஒற்றுமையைச் சிதைத்து மனமாறுபாடுகளுக்கும் மதவேறுபாடுகளுக்கும் காரணமாயிற்று. இதனால் ஒருவரோடொருவர் பகைகொண்டு மாறுபடும் சூழ்நிலை ஏற்பட்டு விட்டது.

## சமய உண்மை

'சமய உண்மை என்பது அவரவர் அறிவாற்றலுக்கும் அனுபவத்திற்கும் ஏற்றவாறு விளங்கித் தோன்றுவது'[3] என்று திரு.வி.க. விளக்குகிறார்.

## சமயமும் மதமும்

சமயம் - மதம் என்ற இரண்டு சொற்களையும் ஒருபொருள் உள்ளவையாகப் பயன்படுத்துகின்றனர். சமயம் வேறு, மதம் வேறு, இவற்றைநன்றாக நுணுகி ஆராய்ந்தால் மதம் என்பது கொள்கையினை மட்டும் குறிக்கும் பொதுச் சொல்லாக உள்ளது. சமயம் என்பது கொள்கையை மட்டும் குறிப்பிடாமல் அதற்கும் மேலான ஒரு நெறிப் படுத்தும் நிலையினை உணர்த்தும் சிறப்புடையதாக விளங்குகிறது. ஆனால், காலப் போக்கில் இக்கருத்தின் நுண்மைகள் மறைந்து இரண்டும் ஒன்றென்ற பொருளில் வழங்குவதைக் காணமுடிகிறது.

சைவமதம் - வைணவமதம் என்று வழங்கப்பட வேண்டியவை தற்போது சைவசமயம், வைண சமயம் என்று வழங்கி வருகிறது.

## உலக மதங்கள்

உலகில் நிலவிவரும் பல்வேறு வகையான மதங்களும் குறிப்பிட்ட ஒரு காலத்தில் தோற்றுவிக்கப்பட்டவையாக வரலாற்று நூல்கள் கூறுகின்றன. மிகப்பழமை வாய்ந்த மதங்களின் தோற்றம் பற்றிய காலவரையறையை ஓரளவு அறியமுடிகிறது.

| | மதங்கள் | ஆண்டுகள் |
|---|---|---|
| 1. | யூதமதம் | கி.மு. 1500 |
| 2. | ஷின்டோமதம் | கி.மு. 660 |
| 3. | சமணமதம் | கி.மு. 599 |
| 4. | பௌத்தம் | கி.மு. 560 |
| 5. | கான்பூஷியஸ் | கி.மு. 551 |
| 6. | கிறித்துவம் | கி.பி. 4 |
| 7. | இசுலாமியம் | கி.பி. 570 |
| 8. | சீக்கியம் | கி.பி. 1469 |

உலகின் பல்வேறு மதங்கள் தோற்றமெனும் காலவரை யறையைப் பெற்றுள்ளன. இந்துமதமோ தோன்றிய காலம் வரையறுத்துக்கூற முடியாத தொன்மை மதமாகக் கருதப்படுகிறது.

## இந்திய மதங்கள்

இந்திய பூமி புண்ணிய பூமி, இங்குதான் சைவம், வைணவம், புத்தம், சமணம் எனப் பலமதங்கள் தோன்றியுள்ளன. இம்மதங்களில் சில தோன்றிய காலத்தில் பெருமையும் புகழும் பெற்று ஓங்கி இருந்தன. பின்னர் காலப்போக்கில் தாழ்ந்து நலிவுற்று அழிந்தும் போயின. இதற்குக் காரணங்களாக அம்மதத்தின் கொள்கைகள், பின்பற்றிய மக்கள், ஆதரித்த அரசர் போன்றோரைச் சுட்டுவர்.

இவற்றால் இந்தியப் பெருநாட்டில் பல்வேறு மதங்கள் தோன்றி விளங்கின என்பனவும் அவற்றுள் சில காலப்போக்கில் வீழ்ச்சியுற்றன என்பனவும் அறியப்படுகின்றன.

## சமயங்களும் வேறுபாடுகளும்

உலகில் தோன்றிய மதங்களை அகச்சமயம், புறச்சமயம் என்று பகுத்துரைப்பர்.

## அகச்சமயம்

'பாடாணவாதம், பேதவாதம், சிவசமவாதம், சச்சிதானந்த வாதம், ஈசுவரஅவிகாரவாதம், சிமித்தகாரண பரிணாவாதம் என்பனவும் சைவம், பாசுபதம், மாவிரதம், காளாமுகம், வாமம், பைரவம் என்பனவும் அகச்சமயங்களாகும்.'[5]

## புறச்சமயம்

'தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பஞ்சராத்திரம் என்பன புறச்சமயங்களாகும்.'[6]

## சமயங்கள் மாறுபடுத்தன்மை

ஒவ்வொரு சமயமும் மாறுபடுந்தன்மையைக் கொண்டுள்ளன. இதனைத்,

'தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி
முனிவிலாததோர் பொருளது கருதலும்

ஆறுகோடி மாயா சத்திகள்
வேறுவேறுதம் மாயைகள் தொடங்கின
... ...... ...... ......
ஆத்த மானார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்
....... ...... ..... ....
சமயவாதிகள் தத்தம் மதங்களே
அமைவதாக அரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாத மென்னுஞ்
சண்டமாருதஞ் சுழித்தடித்தா அர்த்து
உலோகாயதனென்னும் ஒண்டிறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிட மெய்தி
அதிற்பெருமாயை எனப்பல சூழவும்"[7]

என சமய மாறுபாடு மாணிக்கவாசகர் அருளிச்செய்த போற்றித் திருவகவல் பகுதியால் விளக்கப்படுகிறது.

சமயங்கள், மக்களைப் பக்குவப்படுத்தும் ஒரு நெறி. சமயங்கள் பல்வகையாகப் பல்வேறு விளக்கங்களைப் பெற்றுள்ளன. சமய உண்மை அவரவரர் அனுபவத்திற்கும் அறிவிற்கும் ஏற்றவாறு விளங்குவது.

## இந்துமதம்

உலக மதங்களுள் தொன்மைச் சிறப்புடையது இந்துமதமாகும்.

இந்துமதம் என்பது இவரால் இக்காலத்தில் இவ்விடத்தில் இவ்வாறு தோற்றவிக்கப்பட்டது என்பதற்குச் சான்றுகள் இல்லை. இந்துமதம் தோன்றிய காலம் மிகவும் பழமையுடையது. வரலாற்று எல்லைக்கு அப்பாற்பட்டது. இந்துமதக் கடவுளர்களை வரலாற்று வீரர்களாக வருணிக்கமுடியாது. இந்து மதக்கொள்கைகள், காலக் கணக்கீடுகள் ஆகியன இதன் பழமைக்குச் சான்றாக உள்ளன. இந்துமதத்தைத் தனித்த ஒரு தலைவன் தோற்றுவிக்காமல் மக்கள் இனமே படைத்து, காத்து, வளர்த்து வருகிறது எனலாம். இந்துமதம் என்பது மிகப் பெருங்கடல். பல்வேறு சமயங்களும் இதில் சிற்றாறுகளாகவும் பேராறுளாகவும் வந்து கலந்துள்ளன.

இந்துமதம் மிக உயர்ந்த வாழ்க்கை நெறியினை உள்ளடக்கியது. 'வாழ்க்கையில் நீ எந்தச் சாலையில் போனாலும் சரி, எதிர்ப்படும் மகிழ்ச்சியிலோ துன்பத்திலோ நீ இறைவனின் எதிரொலியைக் கேட்கிறாய்; அந்த எதிரொலியில் இந்துமதத்தின் சாரத்தை உணர்கிறாய்'[8] என்பது கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதக் கொள்கையாகும்.

## இந்துமதச் சிறப்பு

இந்துமதச் சிறப்பு பற்றி ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சாரிய சந்திரசேகரசரசுவதி சுவாமிகள் பின்வருமாறு விளக்குகிறார்.

'இந்துமதம் ஒருவரால் காலத்திற்கேற்றவாறு தோற்றுவிக்கப் படாமல் உலகம் தோன்றிய நாள் முதல் ஆண்டவராலேயே தோற்றுவிக்கப்பட்டு எல்லாக் காலத்திற்கும் எல்லா மதங்களுக்கும் ஏற்ற அனாதியாய் இருந்து கொண்டு இருக்கிறது.

தற்போது, இந்துமதம் தவிர உலகிலுள்ள மதங்கள் எல்லாம் மூவாயிரம் நாலாயிரம் வருடங்களுக்கு முன்பு தோன்றியவை. அதற்கு முன்னால் இருந்த மதங்கள் எல்லாம் இப்போது இல்லை.

ஆகவே, ஒருவரால் ஒருநாள் தோற்றுவிக்கப்பட்ட எந்த மதமாக இருந்தாலும் ஒருநாள் அதற்கு முடிவும் ஏற்பட்டு விடுகிறது. இந்து மதத்திற்கு அதுபோல் ஒருநாளும் முடிவும் ஏற்படாது"[9] என்று சான்றோர்களால் முடிவு கூறப்பட்டுள்ளது.

இந்துமதம், தனித்தலைவர்களால் உருவாக்கப்படாத மதம், மக்களே தோற்றிவைத்தத் தொன்மையான மதம். இந்து மதத்திற்கு எந்நாளும் அழிவில்லை.

## சைவசமயம்

சிவசம்பந்தமுடைய சமயம் சைவமாகும். 'சைவம் என்பது அறவழியாகும்'[10] இயற்கை மனிதனிடத்திலுள்ள விலங்கியல்பை ஓட்டி அன்பையும் சாந்தத்தையும் நிலைபெறுத்தவல்லது சைவம்.

'சைவம் என்பது கடவுள் இயல்புகள் எல்லாவற்றையும் தன்னகத்தே அடக்கியுள்ள ஒரு பெருஞ்சொல்லாதலால் அதுவே

சிறப்பாக சைவ நன்மக்களாலும் மற்றவர்களாலும் சைவம் என்றழைக்கப்பட்டது.'[11]

சிவனை வழிபடுவோர் சைவ சமயத்தினர் ஆவார். சி - என்பது சூரியகலை என்றும்; வ - என்பது சந்திரகலையென்றும் யோகநூல்கள் கூறும்.

'சிவம் என்பது செம்மையினடியாகப் பிறந்த தனித்தமிழ்ச் சொல். சிவம் என்பதற்கு காந்தி, மங்கலம், ஆனந்தம், அறவோர் உள்ளத்து உறைவது; சராசரங்களின் தோற்ற ஒடுக்கத்திற்கு நிலைக்களனாய்க் கிடப்பது; இருளைப்போக்கி அருளைத் தருவது; முற்றறிவு உடையது; தூயது; இன்பந்தருவது முதலிய பலபொருள்கள் உண்டு.'[12]

தொன்மைச் சிறப்புடைய சைவசமயத்தின் முழுமுதற் கடவுளாக விளங்குபவர் சிவனேயாவார். இவர் அன்பே உருவானவர். பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்துள்ள பரம்பொருள். அனைத்து உயிர்களுக்கும் இன்னருள் வழங்குபவர். இத்தகைய பரம்பொருளான சிவனைப் பாடியும் பரவியும் போற்றியும் துதித்தும் மகிழ்ந்தவர்கள் அருளாளர்கள். இதனால் அவர்களின் சிந்தனையில் சிவம் நிறைந்திருந்தது. இத்தகைய சிவநேயச் செல்வர்களுள் தலைமையும் தகைமையும் பெற்றவராகத் திருநாவுக்கரசர் கருதப்படுகிறார்.

## சைவமேன்மை

உலகெங்கும் சைவம் தழைத்துள்ளது. திருநாவுக்கரசர் வரலாற்றைக்கூறும் சேக்கிழார்,

**'சைவநெறி ஏழுலகும் பாலிக்கும் தன்மையினான்'**[13]

என்று சைவமேன்மையை விளக்குகிறார்.

சைவத்தின் மேலான சமயமில்லை என்று சமயச் சான்றோர்கள் கருத்துரைக்கின்றனர்.

**'சைவத்தின் மேற்சமயமில்லை அதில்சார்சிவமாம்**
**தெய்வத்தின் மேல் தெய்வமில்லை'**[14]

என்று சைவஎல்லப்ப நாவலர் விளங்கக் கூறியுள்ளார்.

பிறமொழிகளைக் கற்று, அம்மொழிகளின் சிறப்புத் தன்மைகளையெல்லாம் ஆராய்ந்து அறிந்தபின்,

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்குங் காணேன்'[15]

என்று பாரதியார் எவ்வாறு தமிழ்மொழியின் உயர்வைக்கண்டு எடுத்துக் கூறியுள்ளரோ, அ..தேபோன்று சைவசமயத்தினின்று பிறமதம் சார்ந்த திருநாவுக்கரசர் சமணம், பௌத்தம் போன்ற பிறமதக் கருத்துகளையெல்லாம் நன்குணர்ந்து முடிவில் சைவசமயமே உயர்வுடையது என்னும் கருத்தைத் தன் தேவாரப் பதிகங்களில் பதிவு செய்துள்ளார்.

'கறுத்தானைக் கருதாதே கரும்பிருக்க
இரும்பு கடித் தெய்தவாறே'[16]

என்று தாம் சைவமேன்மையை விட்டுப் பிற மதங்களில் காலங் கழித்தமைக்கு வருந்தியுள்ளார். தாயுமான சுவாமிகளும்,

'வேறுபடுஞ்சமய மெலாம் புகுந்துபார்க்கின்
விளங்கு பரம்பொருளே! - நின்
விளையாட்டல்லால் மாறுபடுங் கருத்தில்லை'[17]

என்று சைவ மேன்மையை மிக அழகாக எடுத்துரைத்துள்ளார்.

சைவசமயம் சிவனைத் தலைவனாகக் கொண்ட அன்புச் சமயம். இது பல்வேறு சிறப்புகளைக்கொண்டு விளங்குகிறது. திருநாவுக்கரசர் சைவசமய நெறியைப் பின்பற்றியவர்களுள் சிறந்தவராவார்.

## அனைத்தும் சிவனே

சிவனே, உலகிலுள்ள அனைத்துப் பொருள்களுக்கும் தலைவராக விளங்குகின்றார். பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்துள்ள பரம்பொருளை,

'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே!
உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே!
வாசமலரெலாம் ஆனாய் நீயே!
மலையான் மருகனாய் நின்றாய் நீயே!
பேசப் பெரிதும் இனியாய் நீயே!
பிரானாய் அடி என்மேல் வைத்தாய் நீயே!
தேச விளக்கெலாம் ஆனாய் நீயே!
திருவையாறு அகலாத செம்பொற் சோதீ'[18]

என்று திருநாவுக்கரசர் எங்கும் நிறைந்த இறைவனைப் பாடிப் பரவியுள்ளார்.

திருநாவுக்கரசர் இறைவனின் தன்மைகளைத் திருத்தாண்டாகத்தில் விளக்கிக் கூறியுள்ளார். திருநாவுக்கரசர் தமிழ்க்கவிதை உலகிற்குத் தாண்டகம் என்ற புதுவகை யாப்பை வழங்கியுள்ளார். இதனால் திருநாவுக்கரசர் தாண்டக வேந்தர் என்று சிறப்பித்துப் பேசப்படுகிறார்.

'இறைவன் பொருளால் உலகத்தின் வேறாயினும் உடலில் உயிர்போல அவற்றில் சிறிதும் வேற்றுமையின்றிக் கலந்து நிற்கும் கலப்பினால் உலகமேயாகியும் அங்ஙனம் சிறிதும் வேற்றுமையின்றி ஒன்றாய்க் கலந்து நிற்பினும் பொருளால் தான் அவ்வுலகத்தின் வேறாகியும் இயங்கும் தன்மையுடைய அவ்வுலகத்தை இயக்குதலோடு அமையாது இயங்கியும் வருதலின் உடனாகியும் விளங்குகிறார்.'[19]

உலகப் பொருளாய் நிற்கும் இறைவனை உரிமையுள்ள உறவுப் பொருளாக்கி,

'அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ
அன்புடைய மாமனும் மாமியும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓரூரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்றுவாய்நீ
துணையாய் என்நெஞ்சந் துறப்பிப்பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்துநீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே'[20]

என்று அன்பு ததும்ப அழைக்கிறார் திருநாவுக்கரசர்.

## மூவரும் சிவனே

பரம்பொருளாகிய இறைவன் உலக உயிர்கள் உய்யும் பொருட்டு அயன், அரி, அரன் என மூவுருக்கொண்டு செயல்புரிகிறார் என்பது சைவ சமயக்கோட்பாடு.

படைக்கும் தொழில் நிகழ்த்தும்போது அவர் அயன் எனப்படுகிறார்.

காக்கும் தொழில் புரியும்போது அவர் அரி எனப்படுகிறார்.

அழிக்கும் தொழில் செய்யும்போது அவர் அரன் எனப்படுகிறார். இவ்வாறு மூன்றுபெயர்களைக்கொண்டு வினைபுரியும் இறைவன் ஒருவரே என்பதைத் திருநாவுக்கரசர் கீழ்வரும் தேவாரப் பாடல்களால் விளக்குகிறார்.

'ஒருவனாய் உலகேத்த நின்றநாளோ
ஓருருவே மூவுருவமான நாளோ'[21]

என்றும்,

'ஒருத்தன் காண் உமையவளோர் பாகத்தான் காண்
ஓருருவின் மூவுருவாய் ஒன்றாய் நின்ற
விருத்தன் காண்'[22]

என்றும்,

'மூவனாய் முதலாய் இவ்வுலகெலாம் காவனாய்'[23]

என்றும்,

'நாரணன்காண் நான்முகன்காண் நால்வேதங்காண்'[24]

என்றும்,

'மூவாதி யாவர்க்கும் மூத்தான் தன்னை
முடியா தேமுதல் நடுவு முடிவானானை'[25]

என்றும் கூறப்படும் தேவாரக் கருத்துகள் மூவரும் சிவனே என்பதைத் தெளிவாக விளக்கிக் காட்டுகின்றன.

அனைத்தும் சிவனே என்று அறியப்படுகிறது. ஐந்தொழில் நாயகனும் சிவனே என்பது பெறப்படுகிறது. ஒன்றாய், வேறாய், உடனாய் இருப்பவனும் அவனே என்பது உணர்த்தப்படுகிறது.

## அன்பே சிவம்

அன்பே தெய்வமென்று இறையியலார் கூறுவர். அன்பே சிவம் என்று சைவச் சான்றோர் கருதுவர்.

உலகில் உயர்ந்ததாகவும் ஒப்பற்றதாகவும் மதிக்கப்படும் உணர்வு அன்பேயாகும். அன்புடையவரே மக்கள் என்று போற்றப்படுவர். அன்பு உடையவரே இன்பம் எய்திச் சிறப்படைவர். அகத்தில் அன்பு கொண்டு வாழும் உயிர் வாழ்க்கையே மேலானது. அன்பின் தன்மையால் உயிர்களின் சிறப்பு உணரப்படுகிறது.

'அன்பின் வழியது உயிர்நிலை அஃதில்லார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு'[26]

என்றார் திருவள்ளுவர்.

ஈசனுக்கு அன்பில்லார், அடியவர்க்கு அன்பில்லார், எவ்வுயிர்க்கும் அன்பில்லார், தமக்கும் அன்பில்லார் இறைவன் அன்புள்ளோர் மனதில் குடிகொண்டிருக்கிறார் என்பதாக அறிய முடிகிறது. அன்பே சிவமாகும் தன்மையை,

**'அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே'[27]**

என்று திருமூலர் விளக்குகிறார்.

இறைவன் அன்பெனும் பிடியுள் அடங்குவார் என்பதை,

**'அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே**
**அன்பெனும் குடில்புகும் அரசே**
**அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே**
**அன்பெனும் கருத்தமர் அமுதே**
**அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே**
**அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே**
**அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே**
**அன்புரு வாம்பர சிவமே'[28]**

என்று இராமலிங்க அடிகளார் விளக்கியுள்ள தன்மை இங்கே சிந்திக்கத் தக்கதாகும்.

## அன்பு வேறுபாடற்றது

கடவுளுக்குச் செய்யப்படும் அன்பு வேறு; உயிர்களிடத்துச் செய்யப்படும் அன்பு வேறு என்று கருதுவது அறியாமை. உண்மையான அன்பு இறைவனிடம் செலுத்தப்படும்போது அ..து மன்னுயிர்களிடத்தே எதிரொலிக்கும். இத்தகைய அன்பு நிலையை,

**'அங்கமெலாம் குறைந்தழுகு தொழு நோயராய்**
**ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்**
**கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்**
**அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவுளாரே!'[29]**

என்று திருநாவுக்கரசர் கூறியிருக்கும் திறன் அவரின் மேலான அன்பு உள்ளத்தைத் தெளிவு படுத்துவதாக உள்ளது.

## அறுவகைச் சமயங்களின் தலைவன் சிவன்

சமயங்களை ஆறு என்ற எண்ணிக்கையில் கூறி அச் சமயத்திற்குரிய தெய்வங்களையும் கீழ்க்கண்டவாறு சுட்டுகின்றனர். அவை வருமாறு:

| | சமயம் | | தெய்வம் |
|---|---|---|---|
| 1. | காணாபத்தியம் | - | கணபதி வழிபாடு |
| 2. | கௌமாரம் | - | முருகன் வழிபாடு |
| 3. | சாக்தம் | - | சக்தி வழிபாடு |
| 4. | சைவம் | - | சிவன் வழிபாடு |
| 5. | வைணவம் | - | திருமால் வழிபாடு |
| 6. | சௌரம் | - | சூரியன் வழிபாடு |

இந்த ஆறினையும் சமயம் என்றும் மதம் என்றும் கூறுவர் மதவாதிகள்.

'அந்தந்த மதத்தில் கூறப்படும் அந்தந்தக் கடவுளையே அந்தந்த மதத்தினர் வணங்கவேண்டும்'[30] என்று அவ்வவ் மதத்தைச் சேர்ந்த அருளாளர்கள் கூறிச்சென்றனர்.

ஆனால், மேலே குறிக்கப்பெற்ற இந்த அறுவகைச் சமயங்களுக்கும் தலைவராக விளங்குபவர் சிவன் என்பதே உண்மை. இதனைத், திருநாவுக்கரசரின்,

'மிக்க சமயங்கள் ஆறின்
உருவாகி நின்ற தழலோன்'[31]

என்ற கூற்றாலும்,

'சமய மேலாறுமாகித் தானொரு சுயம்புவாகி'[32]

என்ற கூற்றாலும் தெளிவு பெற முடிகிறது.

## சமயநெறி விளக்கம்

சமயநெறி என்பது, இங்கே சிறப்பாக சைவநெறியை உணர்த்துவதாகும். சைவநெறியை அன்புநெறி என்று அழைக்கலாம். சிவம் என்பது அன்பு என்றும், சைவம் என்பது எவ்வுயிர்க்கும் தீங்கு நினையாத நலம்பேணும் அருள்நெறியென்றும் கொள்ளலாம்.

சைவநெறி அனைத்து உயிரும் ஒன்று என்ற கொள்கை யுடையது. பிறர் நலம்பேணி வாழ்வது, வேற்றுமை களைவது, பிறர் குற்றம் பொறுப்பது, குற்றம் புரிவோர் தம் குற்றம் உணர்ந்து மனந்திருந்தி வருந்துவரேல் அவரை மன்னிப்பது என்பன போன்ற கொள்கைகளைக் கொண்டது.

திருநாவுக்கரசர், சைவசமயத்திலிருந்து சமணம் சென்று, பின் மனந்திருந்தி மீண்டும் சைவத்திற்கு வந்தார். அவரை சமயம் ஏற்றுக் கொண்டதால் அவர் சைவநெறியையே சமயநெறியாகப் போற்றி வாழ்ந்தார்.

## திருநாவுக்கரசரின் சமயநெறி

திருநாவுக்கரசரின் சமயநெறி என்பது; மனம், மொழி, மெய்களால் தொண்டுபுரிவதை உணர்த்தி நிற்கிறது.

திருநாவுக்கரசர் சிவச்சின்னம் அணிந்து, இறைவனின் திருவடிகளை இடையறாது தன் மனத்தால் போற்றியவர் என்பதைக்,

> 'கருவுற்ற நாள்முதலா உன்பாதம் காண்பதற்கு
> உருகிற்று என்னுள்ளமும்'[33]

என்றும், இறைவனது பெருங்கருணைத்திறத்தைப் போற்றிப் புகழும் நன்மொழியுடையவர் என்பதை,

> 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே'
> உலகுக்கு ஒருபொருளாய் நின்றாய் நீயே'[34]

என்றும், தொண்டுபுரியும் உழவாரப்படையை உடையவர் என்பதைச்,

> 'சார்வான திருமனமும் உழவாரத்
> தனிப்படையும் தாமும் ஆகி
> பார்வாழத் திருவீதிப் பணிசெய்து
> பணிந்தேத்திப் பரவிச் சென்றார்'[35]

என்றும் அறிகிறோம்.

திருநாவுக்கரசர் மனம், மொழி மெய்கள் ஆகிய முக்கரணங்களால் சிவநெறித் தொண்டு புரிந்தார் என்பது தெளிவாக விளங்குகிறது.

அன்பும் சிவனும் ஒன்றென அறியப்படுகிறது. அறுவகை சமயத்தின் தலைவராக விளங்குபவரும் சிவனே. மனம், மொழி, மெய்களால் தொண்டு செய்வதே திருநாவுக்கரசர் மேற்கொண்ட சமய நெறியாகும்.

## சமண சமயம்

இந்தியப் பெருசமயங்களில் ஒன்று சமண சமயமாகும். 'சமண சமயத்தைத் தோற்றுவித்த முன்னோர்களைப்பற்றிச் சரியான சான்றுகள் கிடைத்தில. சமணசமய தீர்த்தங்காரர்கள் என்பது மரபாக உள்ளது. இவர்களுள் முதலில் தோன்றியவர் ரிஷபதேவர். இறுதியில் தோன்றியவர் வர்த்தமானர். இவர் காலம் கி.மு. ஆறாம் நூற்றாண்டென்பர்.'[36]

## சமணத்தின் பிரிவு

சமணத்தில் இருபிரிவினர் இருந்ததாக அறிகிறோம். சுயம்ப்ரர், திகம்பரர் என்போரே அவ்விரு பிரிவினர். சுயம்பரர் என்போர் அன்றாட உலகில் வாழ்க்கைக்கு ஏற்றபடி தங்களின் விதி முறைகளை மாற்றிக்கொண்டு வாழும் இயல்பினர். திகம்பரர் என்போர் கடுமையான விரதத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

## திருநாவுக்கரசர் தேவாரத்தில் சமணர்நிலை

திருநாவுக்கரசர், சமணம் சார்ந்திருந்தமையால் சமணர்களின் குறைபாடுகளை நன்கு அறிந்திருந்தார். மீண்டும் சைவராக வரப்பெற்ற பின் சமணர்களின் குறைபாடுகளைக் கீழ்க்கண்டவாறு தம் தேவாரத் திருப்பதிகங்களில் சுட்டியிருப்பதைக் காணமுடிகிறது.

| செயல்கள் | தேவாரச் சான்று |
|---|---|
| 1. தன் தலைமுடியைத் தானே பறித்துக்கொள்ளுதல் | அப். தே. 4 - 48 |
| 2. பல்துலக்காமை | " 6 - 904 |

| | | | |
|---|---|---|---|
| 3. | ஆடைஅணியாமை | அப். தே | 6 - 326 |
| 4. | நின்றுஉண்ணல் | ” | 6 - 29 |
| 5. | நீராடாமை | ” | 5 - 585 |
| 6. | உறிஉடைகையர் | ” | 5 - 585 |
| 7. | பெண்களைக் கண்டு மறைதல் | ” | 4 - 49 |
| 8. | பீலியைக் கைக்கொண்டிருத்தல் | ” | 4 - 385 |

போன்ற செய்திகளைத் திருநாவுக்கரசர் குறிப்பிட்டிருப்பதைக் காண முடிகிறது.

## சமணசமய நெறி

உலகம் யாவையும் பொய், உணர்ச்சிகளும் பொய், வாழ்வும் பொய்; எனவே, துறவே தலையாயது. உயிர்கள்பால் அருளுடைமையே உயர்நெறி. உண்மையைக் கடைப்பிடித்துக் கொல்லாமையை மேற்கொண்டொழுகலே வீடுபேறு அடைதற்குரிய வழி. ஒருவன் செய்யும் நன்மை தீமைகளுக்கேற்ப இன்பதுன்பங்கள் அவனை வந்தடையும். ஆகவே, கடவுள் என்ற ஒருவர் வேண்டுவதில்லை. கடவுள் என்று ஏற்றுக்கொள்ளக் கூடியவர் குருவே யாவார். அவரே அருகக் கடவுள்; அவரருள் பெறலே வீடுபேறு; பிற உயிர்களிடம் பேரன்புகொண்டு உண்மை, கொல்லாமை என்னும் இரு பேரொழுக்கங்களைக் கடைப்பிடித்து வந்தால் மேன்மைகிட்டும். இந்த நெறியைத் ‘தயாமூல தர்மம்’[37] என்றழைத்தனர்.

## கொள்கை முரண்

சமண சமயம் குறித்து, சேக்கிழார் குறிப்பிடும்போது,

‘கொல்லாமை மறைந்துறையும் அமண்சமயம்’[38]

என்று தெளிவுபடக் குறிப்பிட்டுள்ளார்.

கொல்லாமை என்ற அறத்தின் போர்வையில் கொலைகளையும் குறைபாடுகளையும் மறைத்து வைத்துள்ளது சமணம். எனவே, கொல்லும் இயல்பினைச் சமணம் கொண்டுள்ளது என்பதைத் துணிந்து கூறலாம்.

கொல்லாமை கூறும் சமணசமயம் அடுபாறை கிடத்தல், மயிர் பறித்தல் முதலிய மெய்வருத்தும் விரதநோன்புகளையும் உயிர் கழிப்பதனையும் பொருளெனக் கொண்டொழுகுதல் மேற்கூறிய அதன் அடிக்கொள்கைக்கு மாறுபட்டது என்பதை அறிய முடிகிறது.

மேலும், தம் சமயத்திலிருந்து நீங்கிய திருநாவுக்கரசரைக் கொல்லக்கருதி அவர்கள் மன்னன் வழியாகச் செய்த இடையூறு களையும் தண்டனைகளையும் எண்ணிப் பார்த்தாலும் ஆளுடைப் பிள்ளையின் திருமடத்தைத் தீயிட்டுக் கொளுத்திய செயலை அறிந்தாலும் சமணர்கள் கொலையுணர்வு மிக்கவர்கள் என்பது தெளிவாகிறது.

சமணத்தில் திளைத்திருந்த திருநாவுக்கரசர், சமணரைப் பொய்யர் என்றும், வல்லமணர் என்றும் குறிப்பிடுகிறார். இக்கருத்தை 'மனைதுறந்த வல்லமணர்'[39] என்னும் திருநாவுக்கரசரின் ஆறாம் திருமுறை சுட்டுகிறது. எவ்வளவு நல்லொழுக்கமும் இரக்கமும் கொண்டுள்ள சமயமேயானாலும் கடவுள் இருப்பதை ஏற்று அன்பு செய்யாத சமயம் குறைபாடு உடையதாகும் என்கிறார்.

தீமை செய்வோர்க்குத் தண்டனையும் நன்மை செய்வோர்க்குப் பேரின்பமும் அளிக்கவல்ல கடவுள் இல்லையாயின் தீமையும் கொடுமையும் அளவிடமுடியாமல் பெருகிவிடும்.

'சமணர், கடவுள் இல்லை என்ற கருத்தையுடையவர்கள். அதனால்தான் திருநாவுக்கரசரைப் பல இன்னல்களுக்கு ஆளாக்கினர்.'[40] இதை உணர்ந்துதான் திருநாவுக்கரசர் சமண சமயத்தை இழித்தும் பழித்தும் கூறுகிறார் என்று கொள்ளலாம்.

திருநாவுக்கரசர் விரும்பிச்சார்ந்த மதமும் வெறுத்து ஒதுக்கிய மதமும் சமணம் ஆகும். சமணசமயம் கொள்கைமுரணும் குறைபாடும் உடையது. திருநாவுக்கரசர் சமணரைச் சாடி, தம் தேவாரத்தில் பாடியுள்ளார்.

4

## பௌத்த மதம்

பௌத்தம், சமணம்போல் இந்திய நாட்டில் தோன்றிய மதங்களுள் ஒன்றாகக் கருதலாம்.

சமணமும் பௌத்தமும் ஏறத்தாழ ஒரேகாலக்கட்டத்தில் வட நாட்டில் தோன்றி வளர்ந்து தமிழ்நாட்டில் நுழைந்தனவாகக் கருதப்படுகிறது. சமணம் நிலைத்ததுபோல் பௌத்தம் நிலைக்க வில்லை. கடவுள் கொள்கையைப் பௌத்தர் ஏற்கவில்லை. சமணர்களைப்போல தமிழ்மொழியைக் கற்று பௌத்தம் பற்றிய நூல்களை இவர்கள் எழுதவில்லை. பௌத்தம் பற்றிய நூல் மணிமேகலை மட்டுமே உள்ளது. சமயப்பொறை இவர்களிடமில்லை. பிற சமயங்களுடன் ஒத்து வாழும் இயல்பும் இவர்களிடமில்லை. சைவ சமயத்தை இம்மதம் வெறுத்தது. எனவே, இச்சமயத்தைத் தமிழர்கள் புறக்கணித்து விட்டனர் எனலாம்.

'பௌத்தர்களை வெருட்டிய பெருமை சைவ சமயத்தையே சாரும்'[41] எனத் தாண்டேகர் போன்ற அறிஞர்களால் கருத்துரைக்கப் படுகிறது.

சமணம் தமிழ்நாட்டில் புறக்கணிக்கப்பட்ட மதமாகக் கருதப்படுகிறது.

## திருநாவுக்கரசர் நெறி

சைவ சமயத்திலிருந்து சமணம் சென்று பின் மீண்டும் சைவ நெறிக்குத் திரும்பிய திருநாவுக்கரசர் சைவ நெறியே மேலானது என்பதை உணர்ந்து அதனைப் பின்பற்றியுள்ளார்.

திருநாவுக்கரசர் சமணம் சார்ந்து சமணருடைய இயல்பு. பழக்க வழக்கம் போன்றனவற்றை நன்கு அறிந்திருந்தார். அச்சமயத்தை விட்டு வெளியேறி மீண்டும் சைவம் வந்து எய்திய பின் சமணர்களிடம் அவருக்கு வெறுப்பு ஏற்பட்டது. சமணர்களின் இழிந்த செயல்களையும் இயல்புகளையும் தம் தேவாரப்பதிகங்களில் சுட்டியுள்ளார்.

சமண நெறியில் தாம் நின்றதற்காகத் தம்மைத் தாமே நொந்து கொண்டுள்ளார் என்பதனைப்,

'பொறியிலா வழுக்கை யோம்பிப்
பொய்யினை மெய்யென்றெண்ணி
நெறியிலா நெறிகள் சென்றேன்'[42]

என்ற வரிகள் இக்கருத்தைத் தெளிவாக உணர்த்துவதை உணர முடிகிறது.

திருநாவுக்கரசர் தம் தேவாரத் திருப்பதிகங்களில் சமணர்களைப் பலவாறாகச் சாடும் நிலையைக் காணமுடிகிறது.

'அறந்தெரியா ஊத்தைவாய் அறிவிலிகாள்'[43]

என்றும்,

'மனைதுறந்த வல்லமணர் தங்கள் பொய்யும்
மாண்புரைக்கும் மனக்குண்டர் தங்கள்பொய்யும்'[44]

என்றும் கூறியிருத்தலான் சமணர்கள் அறிநெறிதெரியாத மூடர்கள், ஊத்தைவாய் அறிவிலிகள், முரட்டுத்தனமிக்கவர்கள், பொய்யர்கள் என்றெல்லாம் திருநாவுக்கரசர் சாடும் நிலையைத் தெளிவாக உணரமுடிகிறது.

இப்படிப்பட்ட தீய இயல்புள்ள சமணர்களோடு திருநாவுக்கரசரால் நீண்டகாலம் நிலைத்திருக்க முடியவில்லை.

'இம்மை மறுமை வாழ்வுக்கு ஒரு சிறிதும் ஒவ்வாத இச்சமண சமயத்தால் தவிராத சூலைநோயின் துயர்கெடச் செம்மை நெறியிலொழுகும் திலகவதியாருடைய திருவடிகளை வணங்கி உய்வேன்'[45] எனக்கருதிய திருநாவுக்கரசர் தம் தமக்கையாராகிய திலகவதியை வந்தடைந்தார்.

திலகவதியார், திருவதிகை வீரட்டானத் திருக்கோயிலுள் தம் தம்பியை அழைத்துச் சென்றார். உடன் சென்ற மருள்நீக்கியார் திருக்கோயிலைத் தொழுது வலம்வந்து நிலமிசை வீழ்ந்து

இறைஞ்சினார். இறைவனின் திருவருளால் செந்தமிழ்ப் பாமாலைகளாகிய திருப்பதிகங்களைப் பாடிப்போற்றினார். 'கூற்றாயினவாறு' எனத்தொடங்கும் பதிகத்தைப் பாடித் தம்மை வருத்திய சூலை நோய் நீங்கப்பெற்றவரானார்.

'குண்டுபட்ட குற்றந் தவிர்த்து என்னையாட்
கொண்டு நற்றிறங் காட்டிய கூத்தனை'[46]

என்றும்,

'குண்டரொடு பிரித்தென்னை யாட்கொண்டார்'[47]

என்றும் கூறும் தொடர்களிலிருந்து அறியமுடிகிறது.

## சழக்கர்காள் என்செய்வீர்

சழக்கு என்பதன் பொருள் அறியாமை, அறியாமையில் உழல்பவர்கள் சழக்கர் என்பார். திருநாவுக்கரசர்,

'சாத்திரம் பலபேசுஞ் சழக்கர்காள்
கோத்திரமும் குலமுங் கொண்டென் செய்வீர்
பாத்திரஞ் சிவமென்று பணிதிரேல்
மாத்திரைக்குள் அருளுமாற் பேறரே'[48]

சாத்திரம், கோத்திரம், குலம் இவற்றால் எப்பயனும் விளையப் போவதில்லை. இவையாவும் வீணே என்கிறார். அப்பரின் இக் கருத்துக்கு இசைவாக,

'சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணே நீர்அழிதல் அழகலவே'[49]

என்று மொழிகிறார் திருவருட்பிரகாச வள்ளலாராகிய இராமலிங்க அடிகளார்.

## அருட்செய்தி

சமயம் என்பது, உண்மையான மனம் ஒன்றிய வழிபாட்டிலும் அதனால் வரும் அனுபவ அடிப்படையிலும் மலருமேயன்றி,

ஆரவாரமான தீர்த்த யாத்திரையினாலோ, பொருளற்றச் சடங்குகளைச் செய்து பொழுதைக் கழிப்பதாலோ விளங்காது என்பதைத் திருநாவுக்கரசர் தெளிவுபட விளக்குகிறார். இதனைத், திருநாவுக்கரசரின் சமய அனுபவம் பற்றிய அருட்செய்தியாக ஏற்க முடிகிறது.

அனைத்துச் சமயங்களுக்கும் அடிப்படையாகிய அனுபவம் வரப்பெற்றால் கருத்து வேற்றுமைப் போராட்டங்களுக்கு இடமில்லை. என்பது திருநாவுக்கரசரின் சமய உண்மைக்கான கருத்தாக விளங்குவதைக் காண முடிகிறது.

திருநாவுக்கரசர் சமணநெறியினும், சைவத்திருநெறியையே போற்றியுள்ளார்.

## இயல் முடிபு

1. சமயம் என்பது மக்களைப் பக்குவப்படுத்தும் ஒருநெறி.

2. சமயஉண்மை ஒவ்வொருவர் உணரும் நிலைக்கேற்ப மாறுபடும் தன்மையுடையது.

3. சமயங்கள் வேறுபாடும் மாறுபாடும் கொண்டு விளங்குகின்றன.

4. மற்ற மதங்களைவிட இந்துமதம் காலத்தால் பழமையுடையது, நிலைத்து நிற்கும் ஆற்றல் உடையதாகும்.

5. சைவநெறி எல்லோரும் ஏற்கத்தகுந்த எளிய இனிய கொள்கைகளை உள்ளடக்கியது.

6. சமயங்கள் கூறும் இறைவன் ஒருவனே. அவனே சிவன்.

7. அன்பும் சிவமும் ஒன்று.

8. சமணநெறி, கொள்கை முரணுடையது.

9. பௌத்தம் பலரால் புறக்கணிக்கப்பட்டுவிட்டது.

10. திருநாவுக்கரசரின் வழிபடுதெய்வம் சிவன்.

11. திருநாவுக்கரசரின் சமயநெறி சைவசமய நெறியாகும்.

## அடிக்குறிப்புகள்

1. மணி. வரி. 13,
2. மேலது, வரி. 59.
3. திரு. வி. கலியாணசுந்தரனார், சைவத்தின் சமரசம், ப.14, பாரிநிலையம், சென்னை, 1992.
4. திருக்கோயில், திங்களிதழ், ப. 7. அரசுவெளியீடு, சூன், 1977.
5. சிவவாக்கியயோகிகள், சித்தியார் உரை, ப. 13.
6. பிங்கல நிகண்டு, ப. 3.
7. மாணிக்கவாசகர், போற்றித்திருவகவல், வரி, 42-58.
8. கவியரசு கண்ணதாசன், அர்த்தமுள்ள இந்துமதம், தொகுதி-1, ப. 10, வர்னதிபதிப்பகம், தி.நகர், சென்னை, 1987.
9. மேலது, காஞ்சிப்பெரியவர் முன்னுரை, ப.3.
10. மறை. திருநாவுக்கரசு, அப்பர் வரலாற்றுஆய்வுரை, ப.27 மறைமலையடிகள் பதிப்பகம், சென்னை, 1978.
11. திரு.வி. கலியாணசுந்தரனார், சைவத்தின் சமரசம், ப. 21, பாரிநிலையம், சென்னை, 1992.
12. மேலது, பக். 23.
13. பெ. பு. செ. 1282.
14. சைவஎல்லுப்ப நாவலர், தி.அ.க., கா. செ., ப. 4.
15. பாரதி., ப. 157.
16. அப். தே., 4 - 51.
17. தாயு. பா. 630.
18. அப். தே. 6 - 380.
19. திரு.வி. கலியாணசுந்தரனார், ப. 129.

20. அப். தே. 6 - 929.

21. மேலது, 6 - 340.

22. மேலது, 4 - 620.

23. அப். தே. 4 - 319.

24. மேலது, 4 - 661.

25. மேலது, 4 - 735.

26. குறள். 80.

27. திரு. 270.

28. தி. அ. பா., ப. 8.

29. அப். தே. 6 - 938.

30. சுவாமி, இந்துமத வாழ்க்கையும் தத்துவங்களும், ப.16, அநுராகம், தி.நகர், சென்னை, 1994.

31. அப். தே. 4 - 143.

32. மேலது, 4 - 555.

33. மேலது, 4 - 961.

34. மேலது, 6 - 380.

35. பெ. பு., தி. நா. பு. 132.

36. த. வீராசாமி, அப்பர், ப. 9. கா.வா. சு. சு. செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள், 1985.

37. மறை. திருநாவுக்கரசு, ப. 30.

38. பெ. பு., தி. நா. பு. 27.

39. அப். தே. 6 -230

40. ஆதிரையார் பெரிய புராணக்கதைகள், ப.29, சுவாமிமலைப் பதிப்பகம், தி.நகர், சென்னை-17, 1992.

41. அ. ச. ஞானசம்பந்தன், பெரியபுராணம் ஓர் ஆய்வு, ப.36, மாருதி அச்சகம், சென்னை - 14, 1987.

42. அப். தே. 4 - 521.

43. மேலது, 4 - 732.

44. மேலது, 4 - 538.

45. க. வெள்ளைவாரணனார், பன்னிரு திருமுறை வரலாறு, ப. 128, முதல்பகுதி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1972.

46. அப். தே. 5 - 417.

47. மேலது, 6 - 948.

48. மேலது, 5 - 604.

49. தி.அ.பா., ப. 37.

## இயல் - 3

# மெய்ப்பொருள் நெறி

மெய்ப்பொருள்நெறி என்ற இம்மூன்றாவது இயல் மக்கள், வாழ்வியல், சைவசித்தாந்த உண்மை, திருநீற்றின் பெருமை, திருவைந்தெழுத்தின் சிறப்பு, ஐவரும் ஆமையும், ஐம்புலக்கள்வர், மனமெனும் தோணி, பிறப்பறுக்கும் பெருநெறி, சிவகதியடைதல், சொல்லும், செயல் தொண்டும் எனும் தலைப்புகளால் விளக்கப் படுகின்றன.

### மெய்ப்பொருள் மெய்ந்நெறி

சான்றோர்கள் உலகம் உய்யும் பொருட்டும் உலக மக்கள் நல்வாழ்வு வாழவேண்டியும் பலமெய்ம்மைக் கருத்துகளை நூல் வடிவில் ஆக்கித் தந்துள்ளனர். அந்நூல் தரும் கருத்துகளை ஆராய்ந்தால் அவை அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற் பொருளையும் உணர்த்துவனவாக அமைந்திருப்பதை அறியலாம்.

இறைவனை அடையும் நெறியை அறிவது அறிவாகும்.

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு'[1]

என்பது வள்ளுவர் வழங்கிய வான்தமிழ் நெறியாகும். இவ்வழி நூல்கள் மெய்ப்பொருள் நெறியை விளக்கிக் கூறியுள்ளன. இம் மெய்ப்பொருள் நெறி பற்றி,

'அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே'[2]

என நன்னூலும் பகர்ந்துள்ளது.

### மெய்ப்பொருள் நெறி

உலகியல் நெறிக்கு மேலானதாக உள்ள நெறியே மெய்ப் பொருள் நெறியாகும். இம்மெய்ப்பொருள் நெறியே பக்தியை

நிலைநாட்டக் கூடியது. பரமனை உணர்த்தக்கூடியது. பிறப்பை அறுக்க வல்லது. பிறவா நிலையை அளிக்கக்கூடியது. முக்தியின்பத்தை அருளக்கூடியது. முடிவிலா பேரின்ப வீடுபேற்றினை நல்கக்கூடியது.

இம்மெய்ப்பொருள் நெறியைத் திருநாவுக்கரசர் உணர்ந்து, இறைவனிடம் பக்திசெலுத்தி, தம் தேவாரத்திருப்பதிகங்களின் வாயிலாக மக்களுக்கு மெய்ப்பொருள் நெறியை உணர்த்தியுள்ளார். பிறப்பை அறுத்துப் பிறவாநிலை யளிக்கக்கூடிய முக்தியின்பத்தை யடைந்து மேலான வீடுபேற்றினைப் பெற்றார் என்பதனைத் திருநாவுக்கரசரின் வரலாற்றிலிருந்து அறியமுடிகிறது.

நாற்பொருள் உணர்வை நல்குவது இறையின் மெய்ப் பொருள் நெறியாகும். பிறப்பறுக்கும் பெருநெறி மெய்ப்பொருள் நெறி. திருநாவுக்கரசர், மெய்ப்பொருள்நெறியை உணர்ந்து, உணர்த்தி உயர்வு பெற்றார்.

## மக்கள் வாழ்வியல் நெறி

மக்களாய்ப் பிறந்த யாவரும் இன்பதுன்ப நுகர்ச்சியில் ஈடுபடுகின்றனர். ஆசை, பாசம், பற்று இவற்றிற்கு ஆட்படுகின்றனர். இதனால் மீண்டும் மீண்டும் பிறப்பிற்கு ஏதுவான செயல்களைச் செய்து பிறவித்துன்பத்தில் அகப்பட்டு அதிலிருந்து மீளமுடியாமல் தவித்துத் துன்புறுகின்றனர்.

இவ்வாறு, பிறப்பிற்குக் காரணமான செயல்களிலிருந்து நீங்கிப் பிறவா பெருநிலையையடையவே அருளாளர்கள் விரும்பினர். இவ்வுலகில் பிறந்தோர் யாவரும் துன்பமே எய்துகின்றனர். இதனை மணிமேகலைக் காப்பியம்,

> 'பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
> பிறவார் உறுவது பெரும் பேரின்பம்;
> பற்றின் வருவது முன்னது; பின்னது
> அற்றோர் உறுவது அறிக'[3]

என்று உணர்த்தியுள்ளது.

இவ்வாற்றால் ஆசை, பாசம், பற்று அற்று வாழ்தல் மக்கள் வாழ்வியல் நெறியாகும் எனப்பெறப்படுகின்றது.

## பதி, பசு, பாசம் விளக்கம்

இறைவனை நாடவேண்டிய உயிர், பாசத்தளைகளால் கட்டுண்டு கிடக்கின்றது. பாசம் நீங்கப் பதியருள் கிட்டும் என்பதைச் சைவநெறி விளக்குகிறது.

பதி - இறைவன்
பசு - ஆன்மா (உயிர்)
பாசம் - தளை (கட்டு)

அறியாமையினின்றும் ஆன்மா விலகி, அஃதில்லா ஆண்டவருடன் கலத்தல் வேண்டும் என்பதே சைவ சித்தாந்தம் உணர்த்தும் உண்மை. இம்முப்பொருள் உண்மை எச்சமயத்தாராலும் ஏற்றுக் கொள்ளப்படுவதே யாகும்.

சைவசித்தாந்தம் கூறும் இறை, உயிர், தளை என்னும் இம் முப்பொருள் உண்மையை மெய்கண்டார் அருளிய 'சிவஞான போதம்' என்னும் நூல் விளக்குகின்றது.

## சைவ சித்தாந்த உண்மை

சைவசித்தாந்த உண்மைப்படி பதி, பசு, பாசம் என்று சொல்லப்பட்ட மூன்றும் அனாதியாய் நிலவி வருகின்றன. இவற்றுள், நடுவண் நின்ற பசுவாகிய ஆன்மா பாசமாகிய மலத்தில் பற்று வைத்தால் மலத்தின் பாற்படும். பதியாகிய சிவத்தின்கண் அன்பு செலுத்தினால் சிவகதியடையும். 'ஆன்மா மலத்தின் வயப்பட்டால் பிறப்பு இறப்புத் துன்பத்திலே வீழ்ந்து அழுந்தும். சிவத்தின் வயப்பட்டால் பேரின்பமாகிய முக்தியைப் பெறும்.'[4]

சைவசித்தாந்தம் என்பது முடிந்த முடிபாகும். மக்கள் எளிதில் பின்பற்றுவதற்கும் இறைவனை எளிதில் அடைவதற்கும் உரிய நெறி சைவ சித்தாந்தமே. இதனைத் திருமூலர்,

'கற்பன கற்றுக் கலைமன்னு மெய்யோகம்
முற்பத ஞானமுறைமுறை நண்ணியே
சொற்பத மேவித் துரிசற்று மேலான
தற்பரங் கண்டுளோர் சைவ சித்தாந்தரே'[5]

என்று குறிப்பிடுகின்றார்.

இதனாலேயே சமயக்குரவர்களும் இதனைப் பின்பற்றினர் எனலாம்.

'சைவ சித்தாந்தத்தில் கூறப்படும் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மை, உலக அனுபவத்தைக் காட்டும் கருத்துகள், இவ்வுலகத் துன்பத்திலிருந்து விடுபடவேண்டிய வழிகள் போன்றனவற்றை திருநாவுக்கரசர் தம் தேவாரத் திருப்பதிகங்களில் அருளியுள்ளார் என்பதை 'அப்பர் விருந்து' என்னும் நூலில் ஜி. சுப்பிரமணியப் பிள்ளை விளக்கியுள்ளார்.[6]

சைவசித்தாந்தம் பதி, பசு, பாசமென்னும் முந்நெறிகளை விளக்கியுள்ளது. ஆன்மா, பிறப்பு இறப்புத் துன்பங்களுக்கு ஆட்படக்கூடியது. உயிர் இறைவனை அடைந்து முக்திப்பேறு அடையக்கூடியது. முடிந்த முடிபைக் கூறுவது சைவ சித்தாந்தம். சைவ சித்தாந்தக் கருத்துகளைத் திருநாவுக்கரசர் தம் தேவாரத்தில் குறிப்பிட்டுள்ளதை அறியமுடிகிறது.

## திருநீற்றின் பெருமை

இவ்வுலகத் துன்பங்களிலிருந்து விடுபட முழுமுதற் கடவுளாகிய சிவனை வழிபடுதல் வேண்டும். சிவன் திருநீறணிந்த செல்வராக விளங்குகிறார். சிவச் சின்னங்களுள் ஒன்றாகத் திருநீறு மதிக்கப்படுகிறது.

தெய்வநாட்டத்தை உணர்த்தும் அடையாளமாகப் பூசப் பெறுவது திருநீறாகும். திருநீறு அணியும் வழக்கம் தொன்மைச் சிறப்புடையது. இதனைப்,

'பண்டமர் பலகடந்து மதுகையால் நீறணிந்து'[7]

என்னும் கலித்தொகை கடவுள் வாழ்த்து அறிவிக்கின்றது. சிவனை உடையவர் என்ற சிறப்பிற்குரியோராக விளங்குபவர் திருநீற்றை அணிவர் என்ற இக்கருத்தைச்,

'சடையினர் உடையினர் சாம்பற் பூச்சினர்'[8]

என்று சிலப்பதிகாரம் பகர்கின்றது.

'கருநிறச் சாணத்தைத் தீயாற்சுட்டுத் தூய வெண்ணீறாக்கித் தரித்தல், மெய்ஞ்ஞானத்தால் இருளாய மலத்தைக் களைந்து வெள்ளிய அருளொளி நிறைந்த சிவத்தன்மை அடைவித்தலைக் குறிக்கும்.'[9]

திருஞானசம்பந்தரின் 'மந்திரமாவதுநீறு வானவர் மேலது நீறு' என்னும் திருநீற்றுப்பதிகம் இங்கே நினைவுகொள்ளத் தக்கதாகும்.

திருநீற்றின் சிறப்பைத் திருமந்திரம்,

'கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாரும் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வரே'[10]

என்று விளக்குகிறது. ஔவையார் அருளிய நல்வழி,

'நீறிலா நெற்றிபாழ்'[11]

என்று எடுத்தியம்புகிறது.

இத்தகைய சிறப்புகளெல்லாம் விளங்கப்பெற்றத் திருநீற்றைத் திருநாவுக்கரசர் அணிந்து சிறப்புற்றார். இதனைத்,

'தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனியும்'[12]

என்று சேக்கிழார் பெருமான் காட்டுகிறார்.

திருநாவுக்கரசர், தம் தேவாரத் திருப்பதிகத்தில்,

'பாலனார் பசுபதியார் பால்வெள்ளை நீறுபூசி
காலனைக் காலாற் செற்றார்'[13]

என்றும்,

'பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்'[14]

என்றும் இறைவன் நீறுபூசி விளங்கும் சிறப்பை எடுத்துரைக்கிறார்.

திருநீற்றுப் பொலிவுடன் விளங்கும் நெற்றி அம்மையப்பரை நினைக்கவும் நினைப்பிக்கவும் உரிய அடையாளமாகத் திகழ்கிறது.

திருநீறு சிவச்சின்னமாகக் கருதப்படுகிறது. திருஞான சம்பந்தர் முதலானோர் திருநீற்றின் பெருமையைச் சிறப்பித்துக் கூறியுள்ளனர். இத்திருச்சின்னத்தைத் திருநாவுக்கரசர் அணிந்து பெருமையுற்றுள்ளார். திருநீற்றுப் பொலிவுடன் விளங்கும் நெற்றி அம்மையப்பரை நினைக்கவும் நினைப்பிக்கவும் செய்கிறது.

## திருவைந்தெழுத்தின் சிறப்பு

திருநீற்றை நெற்றியில் அணியும்போது பஞ்சாட்சர மந்திரமாகிய திருவைந்தெழுத்தைக் கூறுதல் சைவமரபாகும்.

சிவாய நம என்று சொல்வதால் மனமும் மொழியும் நீறு அணிவதால் மெய்யின் தொழிலும் ஒன்றுபடுவதை உணரலாம். திருவெண்ணீற்றையும் பஞ்சாட்சரம் என்றுகூறும் வழக்கம் உண்மையால் திருவெண்ணீற்றிற்கும் திருவைந்தெழுத்திற்கும் ஒரு நெருங்கிய தொடர்பு இருத்தலைக் காணலாம்.

சிவாய நம என்னும் திருவைந்தெழுத்து சிவனுக்குரிய மந்திரச் சொல்லாகும்.

'சிவாய நம வென்று சிந்தித்திருப்பார்க்கு
அப்பாயம் ஒருநாளும் இல்லை'[15]

என்பது ஔவையாரின் அமுதமொழியாகும்.

திருவைந்தெழுத்தின் சிறப்பைத் திருநாவுக்கரசர் தம் தேவாரத் திருமுறைகளில் பல இடங்களில் விளக்கியுரைப்பதைக் காணலாம்.

'திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசாராகில்'[16]

என்றும்,

'இருந்து சொல்லுவன் கேண்மின்கள் ஏழைகாள்
அருந்தவம்தரும் அஞ்செழுத்து ஓதினால்
பொருந்து நோய்பிணி போகத் துரப்பதோர்
மருந்துமாகுவர் மன்னுமாற் பேறரே'[17]

என்றும் திருநாவுக்கரசரின் பாடல்வரிகள் ஐந்தெழுத்தின் சிறப்பையும் மக்கள் மேற்கொண்டொழுக வேண்டிய மெய்ப்பொருள் நெறியையும் தெளிவாக உணர்த்துகின்றது.

சூலை என்னும் கொடியநோய் திருநாவுக்கரசரைப் பற்றி வருந்தியபோது, அந்நோய் நீங்க இவரின் தமக்கையார் திலகவதியார்,

'திருக்கைலைக்
குன்றுடையான் திருநீற்றை அஞ்செழுத்து ஓதிக்கொடுத்தார்'[18]

என்பதனாலும் சமணர்கள், திருநாவுக்கரசரைக் கல்லொடு சேர்த்துக் கட்டிக் கடலிற் பாய்ச்சியபோது,

'கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சி வாயவே'[19]

என்பதனாலும் திருவைந்தெழுத்தின் பெருமையும் சிறப்பும் நன்கு விளங்கக் காணலாம்.

திருவைந்தெழுத்து மந்திரத்தை மனம், மொழி, செய்கைகள் ஒன்றிப் பொருந்த உளமகிழ்வோடு ஓதிப்பயிலல் வேண்டும்.

சிவாய நம என்னும் ஐந்தெழுத்து மந்திரம் பஞ்சாட்சரம் என்றழைக்கப்படுகிறது. இம் மந்திரத்தைத் திருநாவுக்கரசர் போற்றியதால் துன்பத்திலிருந்து மீண்டு இன்புற்றிருக்கிறார்.

## ஐவரும் ஆமையும்

திருநீறணிந்து, திருவைந்தெழுத்தோதி இறைவனைத் துதிசெய்தல் நன்மைபயப்பதாகும். இதற்கு ஐம்புலனடக்கம் அவசியமாகிறது.

கொடிய இயல்புடைய வேடர் ஐவர் ஆமையைக் கொன்று தின்னவேண்டுமென்று விரும்பினர். மூன்று கற்களை அடுப்பாக வைத்துப் பெரிய பானையில் நீர்நிரப்பிக் கற்களின்மீது வைத்தனர். நிலத்திலிருந்து ஆமையை எடுத்துப் பானை நீரிலிட்டு ஆமை வெளியே செல்லாவண்ணம் பெரியத் தட்டால் பானையை மூடினர். தீ மூட்டினர். நிலத்திலிருந்த ஆமையை நீரிலிட்டவுடன் ஆமைக்குப் பெருமகிழ்ச்சி ஏற்பட்டது. தனக்கு எல்லையில்லாத இன்பம் கிடைத்ததாக எண்ணிப் பானைநீரில் இங்குமங்கும் நீந்திக் களித்தது.

அதுபோல சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐம்புல வேடர்கள் வாதம், பித்தம் சிலேத்துமம் என்ற கற்களின்மீது இந்த உடலாகிய பானையில் ஆசையெனும் நீரை நிரப்பி சீவனாகிய ஆமையை அதில் இட்டுத் தீவினையாகியத் தீயைமூட்டி, பந்த பாசம் எனும் தட்டால் மூடி விட்டார்கள். ஆமைபோல் ஆன்மாவும் புலன் இன்ப ஆசையாகிய நீரில் இங்குமங்கும் நீந்தி விளையாடுகிறது. ஆனால் சூடு ஏறஏற ஆமை துன்புற்றுத் துடித்து மடிவதைப்போல, தீவினையின் வயப்பட்ட சீவனும் அழிகிறது. இந்த அழகிய கருத்தைத் திருநாவுக்கரசர்,

'வளைத்து நின்றுஐவர் கள்வர் வந்துஎனை நடுக்கஞ் செய்யத்
தளைத்து வைத்து உலையை ஏற்றித் தழல்எரிமடுத்த நீரில்
திளைத்து நின்று ஆடுகின்ற ஆமைபோல் தெளிவிலாதேன்
இளைத்து நின்றுஆடுகின்றேன் என்செய்வான் தோன்றினேனே'[20]

என்று பாடுகிறார்.

'ஐவரை அகத்தேவைத்தீர் அவர்களே வலியர் சாலச்
செய்வது ஒன்றறிய மாட்டேன்'[21]

என்றும் அவரே ஏங்குகின்றார். இதிலிருந்து ஐம்புலன் நுகர்ச்சியை வெல்லுதல் மிகவும் அரியது என்பது பெறப்படுகிறது.

## ஐம்புலக் கள்வர்கள்

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களும் தீய செயல்களுடைய கள்வர்கள். உலகமாகிய பாலைநிலத்தில் உலவுகின்றனர். வீட்டு நெறியில் ஒழுகும் மாந்தராகிய வழிப்போக்கரிடம் அவர்களுடைய மெய்யறிவு என்னும் பொருளைக் கொள்ளையடிப்பர். மேலும், அவர்களைப் பயணம் செய்யவிடாமலும் தடுப்பர். இதனைப்,

'புள்ளுவர் ஐவர் கள்வர்
புனத்திடைப் புகுந்து நின்று
துள்ளுவர்; சூறை கொள்வர்
தூநெறி விளைய ஒட்டார்'[22]

எனத் திருநாவுக்கரசர் குறிப்பிடுகின்றார்.

## வெல்லும் வழி

இத்தகைய கள்வரை வெல்வதற்கு உரிய வழி, மூன்று கண்களையுடைய சிவபெருமான் இரண்டு திருவடிகள் என்னும் ஆயுதத்தைத் துணையாகப் பற்றுவதேயாகும். இதனை,

'முள்ளுடை யவர்கள் தம்மை
முக்கணான் பாத நீழல்
உள்ளிடை மறைந்து நின்று அங்கு
உணர்வினால் எய்தலாமே'[23]

என்று திருநாவுக்கரசரின் பாடல் தெளிவாகத் தெரிவிக்கிறது.

## மனமெனும் தோணி

"திருவொற்றியூரில் எழுந்தருளியுள்ள எம்பெருமானே! மனமாகியப் படகைத் துணையாகக்கொண்டு, அறிவாகிய கோலையூன்றி, கோபமாகிய பண்டத்தை அப்படகில் ஏற்றிக்கொண்டு வாழ்க்கை எனும் நீர்நிறைந்த கடலில் பயணம்செய்யும்போது ஆசையெனும் கருங்கற்பாறையில் மோதி நிலைகுலைந்து தவிக்கும்போது உன்னை அறிந்து துதிக்கமுடியாது. ஆதலால்,

உன்னை நினைந்து வழிபடும் பக்தியுணர்வினை எனக்கு இப்போதே அளித்தருள்வாயாக" என்று திருநாவுக்கரசர் வேண்டுகிறார். திருநாவுக்கரசரின் வேண்டுதல்,

'மனமெனும் தோணிபற்றி மதியெனும் கோலையூன்றிச்
சினமெனும் சரக்கைஏற்றிச் செறிகடல் ஓடும்போது
மனமெனும் பாறைதாக்கி மறையும்போது அறியவொண்ணா
உனை உன்னும் உணர்வை நல்காய் ஒற்றியூர்
உடையகோவே'[24]

என்னும் இப்பாடலால் வெளிப்படுவதைக் காணலாம். உலக வாழ்வின் இயல்பைப் படகுப்பயணத்துடன் ஒப்புமைப்படுத்தி, திருநாவுக்கரசர் உண்மைத்தன்மையை உணரவைக்கின்றார்.

'காமம் வெகுளி மயக்கம் இம்மூன்றும்
நாமம்கெடக் கெடும் நோய்'[25]

என்றார் திருவள்ளுவர். வெகுளியையும் அதற்கு இனமானதாக விளங்கும் காமம், மயக்கம் ஆகிய தீயகுணங்களையும் அறவே நீக்குதல் வேண்டுமென்பது இதனால் பெறப்படுகின்றது.

ஐம்புலவேடர்களால் ஆன்மா என்னும் ஆமை அறியாமையால் அழிகிறது. ஐம்புலக்கள்வர்கள் மெய்யறிவாம் பொருளைக் கொள்ளையடிப்பர். கள்வரை வெல்ல சிவனின் திருப்பாதத்தைப் பற்றுதல் வேண்டும். உலகவாழ்வு படகுப் பயணத்தைப் போன்றது. வெகுளி, காமம் போன்ற தீயகுணங்களை முழுவதுமாக விட்டொழிக்க வேண்டும்.

## பிறப்பை அறுக்கும்வழி

எல்லாம் வல்ல ஈசனை நினையாமல் பந்தபாசங்களாகிய ஆசையில் கட்டுண்டு அலைகிறோம். ஆசையை விட்டொழித்தல் வேண்டும்.

பிறப்பை அறுத்துப் பேரருள் புரிபவர் சிவனேயாவார். பிறப்பறுத்து மீண்டும் பிறவாநிலை பெற்றுப் பேரானந்தமடைய ஒரே

வழி இறைவனின் ஒப்பற்றத் திருவடிகளைச் சேர்தலே என்பது திருநாவுக்கரசரின்அருங்கருத்தாக அமைந்துள்ளது.

'ஆசையறாய் பாசம் விடாய் ஆனசிவபூசை பண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய் - சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்'[26]

என்று மறைஞான சம்பந்தர் சிவபோக சாரத்தில் கூறியிருப்பது இங்கே பொருத்தமுடையது எனலாம்.

பிறவித்துன்பத்தை அறுக்கவல்லவர் இறைவனே. இதனை,

'மாசார் மயக்கறு வித்து என்னுள்
நேசமாகிய நித்த மணாளனை'[27]

என்றும்,

'பந்தபாசம் அறுத்தென்னை யாட்கொண்ட'[28]

என்றும் திருநாவுக்கரசர் கூறியிருத்தலான் அறியமுடிகிறது. மாணிக்கவாசகரும்,

'பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க'[29]
'பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே'[30]

என்று சிவபுராணத்துள் கூறியிருப்பதாலும் இவ்வுண்மை தெளிவாகிறது.

'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
பற்றுக பற்று விடற்கு'[31]

எனப் பற்றினைத் துறப்பதற்குப் பற்றற்றான் பற்றினைப் பற்றல் வேண்டும் என்று திருவள்ளுவர் கூறும் கருத்தும் மிகப் பொருத்த முடையதாக அமைகிறது.

இறைவனையடைய நல்வழி இருப்பினும் அதனைக் கருதிச் செல்லாது, மனிதன் தானே தன் அழிவைத் தேடிக்கொள்கிறான். இறைவனின் திருவடியைச் சிந்தித்தால்அழியாத பேரின்ப நிலையை அடையலாம். சிற்றின்பங்களிலே சிக்குண்டு தவிக்காமல் சிவனை நினைத்த மாத்திரத்தில் மிக எளிதாக சிவகதியை அடையலாம்.

• 'தேறிநீ நினைதியாயிற் சிவகதி திண்ணமாகும்'[32]

என்று திருநாவுக்கரசர் உலகோர்க்கு மெய்ப்பொருள் உணர்த்துகிறார்.

ஆசையறல், பாசம்விடல் இவை பிறப்பு அறுப்பதற்கு உரிய வழியாகும். பந்த பாசங்கள் நீங்க இறைவனின் திருவடியை நினைந்து போற்றல் வேண்டும். இறைவனை எண்ணினால் சிவகதி மிக எளிதாகக் கிட்டும்.

## சிவகதியடைதல்

உண்மையான ஈடுபாட்டுடன் இறைவனை எண்ணித்துதித்தல் வேண்டும். இவ்வாறு செய்வது சிவகதியை அளிக்கும்.

திருநாவுக்கரசர் சிவகதி விளைவை, வேளாண்மை செய்வதுடன் ஒப்பிட்டுக் காட்டியுள்ள திறன் இங்கே விளக்கப்படுகிறது.

'மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப்
பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக்கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பாராகில் சிவகதி விளையுமன்றே'[33]

என்று திருநாவுக்கரசர் தம் தேவாரப்பதிகத்தில் விளக்கிக் கூறியுள்ளார். இவர்கூறும் மெய்ப்பொருள்வழி நடந்தால் வாழ்வின் முழுப்பயன் நிறைவெய்தும் என்பது உறுதியாக விளங்குகிறது.

இறைவனுடன் பக்தி என்னும் அன்புத் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு, பொய்ம்மையை நீக்கி, கொல்லாமையாகிய நன்னெறியில் நிற்றல் நன்மை பயக்கும். மனம் ஒன்றித் திருவைந்தெழுத்து ஓதி திருநீறு அணிந்து உருகி வழிபடுதல் வேண்டும். இவையாவும் சிவகதியடைந்து பேரின்ப நிலையைப்பெற உதவும் என்பது கண்டறியப்படுகிறது.

உண்மை அன்புடன் நன்னெறியில் நின்று சிவனை வழிபட்டால் சிவகதியடையலாம்.

## சொல்லும், செயல்தொண்டும்

உலகில், பிறர்க்கு அறிவுரை கூறுதல் என்பது மிக எளிய செயலாகும். அவ்வாறு சொன்ன அறிவுரையின்படி தான் வாழ்ந்து காட்டுதல் என்பது மிகவும் அரிய செயலாகும். திருநாவுக்கரசர் சொல்லாலும் செயலாலும் ஒன்றுபட்டே வாழ்ந்தவராவார்.

திருநாவுக்கரசர் சொல்லும் செயலும் எந்தச்சூழ்நிலையிலும் மாறுபடாமல் ஒன்றுபட்டே விளங்கிய சிறந்தத்தூய்மைத் தன்மையை அவர்தம் வரலாற்றான் அறியமுடிகிறது.

கடவுள் உண்டு அவரை மெய்யன்புடன் வழிபட்டால் உய்வு உண்டு என்பதனை நாவுக்கரசர் மக்களுக்கு எடுத்துக்கூறினார். அதன்வழி தானும் நம்பிக்கையுடன் போற்றினார்.[34] என்ற மறை. திருநாவுக்கரசு அவர்களின் கருத்து மிகவும் பொருத்தமுடையதாகத் திகழ்கிறது.

சமணர்கள் இழைத்த கொடுமையான தண்டனைகளை யெல்லாம் வெல்வதற்கு இறைவனை மெய்யன்புடன் உருகி வழிபட்டிருக்கிறார்.

ஈசனிடம் கொண்ட பேரன்பினாலும் உறுதியான நம்பிக்கை யினாலும் இணையிலாத் திண்மை உடையவராகவும் நன்மை யுடையவராகவும் திருநாவுக்கரசர் விளங்கியிருக்கிறார்.

இறை நம்பிக்கையில் எப்போதும் சொல்லாலும் செயலாலும் ஒரே உறுதியில் திருநாவுக்கரசர் நின்றிருக்கிறார்.

## இயல் முடிபு

1. இறைவனை அடையும் நெறியை அறிவது அறிவாகும்.
2. உயிர், பாசத்தால் கட்டுண்டுக் கிடக்கிறது. பாசம் நீங்கப் பதியருள் கிட்டும்.
3. சைவசித்தாந்தம் பதி, பசு, பாசம் என்னும் முந்நெறிகளை விளக்கியுள்ளது.

4. இறைவனை அடையும் உயிர் பேரின்பம் பெறுகிறது.
5. சிவச்சின்னங்களுள் ஒன்று திருநீறு அணிவதாகும்.
6. திருநாவுக்கரசர் திருநீற்றுப் பொலிவுடன் விளங்கியுள்ளார்.
7. திருவைந்தெழுத்து மந்திரத்தைத் திருநாவுக்கரசர் போற்றியுள்ளார்.
8. ஐம்புலவேடரைக், கள்வரை வெல்லும் வழிபற்றி எடுத்துக் கூறியுள்ளார்.
9. உலக வாழ்வின் இயல்பை விளக்கியுள்ளார்.
10. ஆசை, பற்று போன்றவை நீங்கினால் பற்று அறும். பற்று அறுக்கும் பான்மை உடையது ஈசனின் இணையடிகளே.
11. சிவகதியடைய வழியும் சிறப்பும் கூறியுள்ளார்.
12. திருநாவுக்கரசர் சொல்லும் செயலும் ஒன்றுபட்டுத் தூய்மையும் திட்பமும் வாய்ந்தவராக விளங்குகின்றார்.

## அடிக்குறிப்பு

1. குறள், 423.
2. நன். பாயி. நூ. 10.
3. மணி. மந்திரம் கொடுத்த காதை, வரி, 64 - 67.
4. சைவசமய வரலாறு, திருவாவடுதுறை ஆதீனம், 1992, ப.3.
5. திரு. 1421.
6. ஜி. சுப்பிரமணியப்பிள்ளை, அப்பர் விருந்து, ப. 239, தமிழ்நிலையம், புதுக்கோட்டை, 1960.
7. கலி. குறிஞ்சிக்கலி, பாடல், 43, வரி.8.
8. சிலம்பு,. புகார்க்காண்டம், இந்திரவிழா ஊரெடுத்தகாதை வரி. 103.
9. சைவசமய வரலாறு, திருவாவடுதுறை ஆதீனம், 1992, ப.24.

10. திரு. 1666.

11. ஔவையார், நல்வழி, புலியூர்கேசிகன் உரை, பா.24. பாரிநிலையம், சென்னை-1, 1973.

12. பெ. பு. செ. 1410.

13. அப். தே. 4 - 425.

14. மேலது, 4 - 783.

15. ஔவையார், நல்வழி, பா.15.

16. அப். தே. 6 - 934.

17. மேலது, 5 - 605.

18. பெ. பு. செ. 1336.

19. அப். தே. 4 - 104.

20. மேலது, 4 - 769.

21. மேலது, 4 - 526.

22. மேலது, 4 - 462.

23. மேலது, 4 - 750.

24. மேலது, 4 - 555.

25. குறள். 360.

26. சிவ. போ. சா. ப. 4.

27. அப். தே. 5 - 736.

28. மேலது, 5 - 356.

29. சிவ. வரி, 7.

30. மேலது, வரி. 64.

31. குறள். 350.

32. அப் தே. 4 - 752.

33. மேலது, 4 - 737.

34. மறை. திருநாவுக்கரசு, அப்பர் வரலாற்றுஆய்வுரை, ப. 97, மறைமலையடிகள் பதிப்பகம், பெரம்பூர், சென்னை - 82, 1978.

## இயல் - 4

# தொண்டு நெறி

தொண்டு நெறி என்ற இந்த நான்காம் இயலில் மானிடப் பிறப்பும் மனமும் தொண்டின் பொருளும் வகையும் நாநெறித் தொண்டும் தொண்டரும் தொண்டர்களைப் போற்றிய தொண்டர், அப்பரின் பிற அருந்தொண்டுகள், மக்கள் தொண்டின் சிறப்பு, என்கடன் பணிசெய்து கிடப்பதே, தொண்டர்தம் பெருமை எனும் தலைப்புகளில் கருத்து விரித்துரைக்கப்பட்டுள்ளது.

## மானிடப்பிறப்பும் மனமும்

உலகிலுள்ள எண்ணற்ற உயிரினங்களுள் மனிதனே சிறப்பிற்கு உரியவனாகிறான். மற்றப்பிறப்புகளைவிட மானிடப் பிறப்பே மேலானது. மனம் என்ற ஒன்றைப் பெற்றதால் மனிதன் சிறப்புக்கு உரியவனவாக விளங்குகின்றான்.

மானிடப்பிறவி அருமை வாய்ந்தது. அனைத்து உயிரினங்களையும் காக்கும் திறனுடையது. மானிடப்பிறப்பின் பெருமையை,

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது'[1]

என்று ஔவையார் சிறப்பிக்கின்றார். இந்தச் சிறப்பிற்குக் காரணம் அறிவும் மனமும் பெற்றதேயாகும்.

'ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே'[2]

என்று தொல்காப்பியர் உயிர்வகைகளை அறிவின் அடிப்படையில் வகுத்துக் கூறுகின்றார். மனமென்னும் சிறப்பைப் பெற்றவர் மனிதன் என்றும் தொல்காப்பியர் உணர்த்துகிறார். மனிதன் அறிவைப் பயன்படுத்தித் தமக்கும் நன்மையுண்டாகும் மேலான செயல்களைச் செய்து சிறப்புடையவர்களாக வாழ வேண்டும்.

## மனித மனம்

மற்ற உயிரினங்களினும் மனிதமனம் சிறப்புடையது. பிற உயிர்கள் படும் துன்பத்தைக்கண்டு இரங்கக்கூடியது. கருணை வாய்ந்தது. மனநலத்தினால்தான் மற்றை நலன்கள் அமைந்துள்ளன. இத்தகைய மனத்தைச் 'சென்ற இடத்தால் செலவிடாது தீது ஓரீஇ நன்றின்பால் உய்க்குமாறு'[3] செயலாற்ற வேண்டியது அவசியமாகிறது.

நல்ல தகுதியில் தன்னை நிறுத்திக் கொள்பவரும் தன்னைத் தன் தகுதியிலிருந்து மாறுபடச் செய்து தாழ்த்திக் கொள்பவரும் தான் இருக்கும் தகுதியில் தன்னை படிப்படியாக மேலுயரச்செய்து உயர்நிலையில் நிறுத்துபவரும், எல்லோரினும் மேம்பட்டவராகத் தன்னைச் செய்துகொள்பவரும் தானே என்ற கருத்தை,

**'நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை**
**நிலைகலக்கிக் கீழிடுவானும் - நிலையினும்**
**மேன்மேல் உயர்ந்து நிறுப்பானும் தன்னைத்**
**தலையாகச் செய்வானும் தான்'[4]**

என்று நாலடியார் பாடல் நன்கு விளக்கிக் காட்டுகிறது. மனமிருந்தால் நல்ல மார்க்கமும் உண்டு.

இவ்வாறு, பிறருக்கு உதவும் மனமே சிறந்த ஒன்று எனக் கருதிய திருநாவுக்கரசர் தம்வாழ்வில் அதனை உணர்த்தி யிருப்பதைக் காணலாம். நல்ல உள்ளம் உடையவர்க்குத் தன்னைக் காட்டிலும் இனியவர் எவருமில்லை. இத்தகையோர் உள்ளத்திலே இறைவன் என்று விளங்குகிறார்.

திருநாவுக்கரசர் இக்கருத்தை,

'என்னிலாரும் எனக்கு இனியா ரில்லை
என்னினும் இனியான் ஒருவன் உளன்
என்னுளே உயிர்ப்பாய்ப் புறம்போந்து புக்கு
என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே'[5]

என்றும்,

'வெள்ளநீர்ச் சடையனார் தாம் வினவுவார்போல் வந்துஎன்
உள்ளமே புகுந்து நின்றார்'[6]

என்றும் எடுத்தியம்புகிறார்.

எனவே, இத்தகைய மனம்பெற்ற மனிதன் மற்றவர்க்கு உதவி புரிந்து வாழ்தலே மானிடப் பிறவி பெற்றதன் பயனாகும்.

மானிடப்பிறப்பு அரியதொன்றாகும். மனிதன் ஆறாம் அறிவாகிய பகுத்தறிவைப் பெற்றவன். மனம்பெற்ற காரணத்தால் மனிதன் என அழைக்கப்பட்டான். மனம்பெற்ற மனிதன் மற்றவர்க்கு உதவிசெய்து வாழ்பனாவான்.

## தொண்டின் பொருளும் வகையும்

அறிவால் சிந்தித்து மன ஈடுபாட்டுடன் அன்பு மேலோங்கச் செய்யப்படும் தன்னலமற்றக் கைமாறு கருதாத செயலதுவே தொண்டு என்பதன் பொருளாகும்.

தன்னலமின்றிப் பிறர்நலத்தை நாடிச் செய்யப்படும் தொண்டிலே ஓர் இன்பம் பிறக்கும். தன்னலம் கருதாமல் பிறர்க்கென வாழும் தன்மைகொண்டவர்களால்தான் இந்த உலகம் நிலைபெற்றிருக்கிறது என்றஇந்த உண்மையைத்,

'தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே'[7]

என்று புறநானூறு புகல்கிறது.

தன்னலமற்ற, கைமாறு கருதாமல் பிறர்க்குச் செய்யப்படும் உதவி சமுதாய வாழ்விலும் உண்டு; ஆன்மிக வாழ்விலும் உண்டு.

'தொண்டு என்பது பரந்த விரிந்த பொருளில் நிற்பது. பிறர்க்கு ஏற்படும் இன்னல் களைவதும் தொண்டு என்றே கூறப்பெறும்.'[8]

'அறிவு, வினை, அன்பு இவை மூன்றும் இணைந்த நிலையில் செய்யப்படும் செயல்கள் சிறப்பும் செம்மையும் தருவனவாகும். இதனை வடமொழியில் ஞானம் - கருமம் - பக்தி என்று குறிப்பிடுவர். இந்த மூன்றும் இணைந்ததை 'நிஷ்காமிய கருமம்' என்று அழைப்பர். அஃதாவது பயன் கருதாது செய்யும் செயல் என்பது இதன்பொருள்.'[9]

இவ்வாறு, பயன்கருதாமல் செய்யப்படும் செயல்களில் தூய அன்பு மலர்கிறது. தொண்டு வெளிப்படுகிறது. குறிப்பிட்ட ஒரு பணியில் நாட்டமும் நிலைப்பும் ஏற்படுகிறது. இந்த நிலையைத் திருநாவுக்கரசரின் வாழ்வில் காணமுடிகிறது.

## பலவகைத் தொண்டு

உலகில் தொண்டில் சிறந்த தூயவர்களாகச் சிலர் வாழ்ந்துள்ளனர். இதில் ஆண், பெண் என்ற பாகுபாட்டிற்கே இடமில்லை. மகாத்மா காந்தி, வினோபாபாவே, அன்னை தெரசா போன்றோர் சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டுகள் அளப்பரியன வாகும்.

'அவரவர்கள் வாழ்ந்த காலச் சூழ்நிலைக்கேற்பத் தொண்டின் தன்மைகளும் செயல்பாடுகளும் அமைந்திருத்தலைக் காணலாம்.'[10]

சமயத்தொண்டு, சமுதாயத்தொண்டு, மொழித் தொண்டு, இறைத்தொண்டு, கல்வித்தொண்டு, நாட்டு நலத்தொண்டு, மருத்துவத் தொண்டு என்று தொண்டின் பல்வேறு வகையைச் சுட்டிச் சொல்லலாம். ஆதிசங்கரர், இராமானுசர் போன்ற பெரு மக்களின் சமயத்தொண்டு என்றும் போற்றுதற்கும் புகழுதற்கும் உரியதாகும்.

தனிமனிதரேயன்றிப் பல நிறுவனங்கள் அல்லது அமைப்புகள் குழுக்களாக இயங்கிப் பல்வேறு நிலையில் தொண்டுசெய்து வருவது மிகவும் குறிப்பிடத்தக்கது. நாட்டில் பலதொண்டு நிறுவனங்களும் பல்கிப் பெருகி வருவதைக் காணமுடிகிறது.

'செஞ்சிலுவைச் சங்கம்' என்ற அமைப்பு போரில் புண்பட்டோருக்குப் பல்வேறு மருத்துவ மற்றும் பாதுகாப்பு உதவிகளைச் செய்து வருகிறது.

சுழற்சங்கம், அரிமா சங்கம், மகளிர் மேம்பாட்டுச் சங்கம் போன்றத் தொண்டு நிறுவன அமைப்புகள் சமுதாயத்தின் பல்வேறு நிலைகளில் உதவிபுரிந்து வருகின்றன.

திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணத்துள் தொண்டர்கள் வரலாற்றையும் தொண்டின் மேன்மையினையும் தொண்டர்சீர் பரவுவாராகிய சேக்கிழார் பெருமான் செவ்விதின் விளக்குகிறார். நாயன்மார்கள் எவ்விதப் பதிலுதவியும் கருதாமல் மக்கள் தொண்டில் ஈடுபட்டனர். அதனால் பல நன்மைகளும் அடைந்தார்கள் என அவர்களின் வரலாற்றால் அறிய முடிகிறது. சமயத்தோடு தொடர்பு படுத்தினாலும் மக்கள் தொண்டாகவே கருதினர். 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்ற முதுசொல் அவர்களின் வாழ்வில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளதை அறியலாம்.

'சேவையைத் தவிர வேறு தேவையை அறியாத சான்றோர்கள் அருள்தொண்டர்கள் என்று போற்றப்பட்டனர்.'[11] இவ்வாறு அறிவுநம்பி கருத்துரைக்கிறார்.

திருத்தொண்டின் நெறி வாழ்ந்தவராகத் திருநாவுக்கரசர் விளங்குகிறார். திருநாவுக்கரசரின் திருஅவதாரத்தைக் கூறவந்த சேக்கிழார் பெருமான்,

> 'திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டின் நெறிவாழ
> வருஞானத் தவமுனிவர்'[12]

என்று சிறப்பித்து மொழிகிறார். திருத்தொண்டு என்பது கடவுளுக்குச் செய்யப்படும் தொண்டு என்று கொள்ளலாம். சிவ நெறியைத் தொண்டு வழியாகப் பரப்புதல் சிறப்புடையது. இத்தகைய திருத்தொண்டின் நெறியில் சிவனையடைய உழைத்தவர் திருநாவுக்கரசராவார்.

## இளமையில் அறத்தொண்டு

மருள்நீக்கியார் என்ற இயற்பெயர்கொண்ட திருநாவுக்கரசர், தம் இளமைப்பருவத்திலேயே நல்லறங்கள் பலவுஞ்செய்தார். இதற்குக் காரணம் அவர் நிலையாமையை உணர்ந்ததேயாகும்.

> 'மாசின்மனத் துயரொழிய மருணீக்கியார் நிரம்பித்
> தேசநெறி நிலையாமை கண்டு அறங்கள் செய்வாராய்க்
> காசினிமேல் புகழ்விளங்க நிதியளித்துக் கருணையினால்
> ஆசில் அறச்சாலைகளும் தண்ணீர்ப்பந்தரும் அமைப்பர்.'[13]

இவ்வாறு திருநாவுக்கரசரின் இளமைத் தொண்டினைப்பற்றி சேக்கிழார் பெரியபுராணத்துள் கூறியுள்ளார்.

தன் தந்தையாரும் தாயாரும் இளம் பருவத்திலேயே தன்னைவிட்டு அகன்றதும், தமக்கையாருக்கு மணம் பேசி முடித்த மணவாளர் திருமணத்திற்கு முன்பே இறந்ததும் இதன்காரணமாகத் தமக்கையாரும் தம்மைக் கைவிட்டு உயிர்துறக்க எண்ணியதுமாகிய இந்த நிகழ்ச்சிகள் யாவும் திருநாவுக்கரசருக்கு நிலையாமை உணர்வை இளமையிலேயே தந்தன எனலாம்.

எனவே, நிலையிலா இவ்வுலக வாழ்வில் நிலைபெற்றிருக்கக் கூடிய நல்லறங்கள் பலவற்றையும் இளமைக் காலத்திலேயே செய்தார்.

> 'காவளர்த்தும் குளந்தொட்டும் கடப்பாடு வழுவாமல்
> மேவினார்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும் விருந்தளித்து
> நாவலர்க்கு வளம்பெருக நல்கியும் நானிலத் துள்ளோர்
> யாவர்க்கும் தவிராத ஈகைவினைத் துறைநின்றார்'[14]

என்ற சேக்கிழாரின் அருள்வாக்கு மேற்கூறிய கருத்தை மெய்ப்பிக்கின்றது.

தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் வாழ்வு தொண்டு வாழ்வாகும். இது பயன் கருதாத செயல் என்று கூறப்படுகிறது. தொண்டுகள் சமய, சமூகத் தொண்டுகளாக மலர்ந்துள்ளன.

திருநாவுக்கரசர் தொண்டு நெறி வாழ்ந்த ஞான தவமுனிவர். திருநாவுக்கரசர் இளமையிலேயே தொண்டில் ஆர்வம் உடையவராக விளங்கியுள்ளார்.

## நாெனறித்தொண்டும் தொண்டரும்

சைவம், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகைத் தொண்டினையும் உள்ளடக்கியுள்ளது. சரியை என்பது; உழைப்பு நெறியாகும். இதனை உணர்த்த வந்தவர் திருநாவுக்கரசர். கிரியை என்பது வழிபடும் நெறியாகும். இதனை உணர்த்த வந்தவர் திருஞானசம்பந்தர். யோகம் என்பது மன ஒருமைப்பாட்டு நெறியாகும். இதனைக் காட்ட வந்தவர் சுந்தரர். ஞானம் என்பது மெய்யுணர்வு நெறியாகும். இதனை விளக்க வந்தவர் மாணிக்கவாசகராவார்.

## சரியைத்தொண்டு (உழைப்பு நெறி)

திருநாவுக்கரசர் சரியைத் தொண்டு மேற்கொண்டவர். சிறப்பு முறையால் உழைப்பு நெறியை உணர்த்த வந்தவர். சரியை என்பதற்குத் தூய்மை செய்தல் என்று பொருள் கொள்ளலாம். தன் மேனியை வருத்திச் செய்யும் பணியாகும்.

திருக்கோயிலில் திருவலகு இடுதல், திருமெழுக்கு செய்தல், நந்தவனம் அமைத்தல், பூக்கொய்து கொடுத்தல், பூமாலை தொடுத்தல், திருவிளக்கிடுதல், சிவபெருமானைப் புகழ் மிக்கப் பாடல்களால் பாடித் துதித்தல், ஆடுதல், அன்பு மேலோங்கி இன்பக் கண்ணீர் உகுத்தல், அடியவர்களுக்குப் பணிசெய்தல் போன்ற பல்வகைப் பணிகளும் சரியைத் தொண்டில் அடங்குவதாக அமைத்துக் கூறலாம்.

திருமாலும் நான்முகனும் மேற்குறித்த எச்செயலையும் செய்யாமையினாலேயே அவர்கள் சிவனைக் காணமுயன்றும் முடியவில்லை.

திருநாவுக்கரசர் மேற்கண்ட உழைப்புநெறியைச் செய்தமையால், இறைவன் தானேவந்து திருநாவுக்கரசருக்குக் காட்சி நல்கினார் என்று கருதலாம்.

'நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடை எம்ஆதீ என்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே'[15]

என்று திருநாவுக்கரசர் தம் தேவாரத் திருப்பதிகங்களில் எடுத்தோதி யிருத்தலான், இவர் சரியைத்தொண்டு செய்துள்ளார் என்று அறிய முடிகிறது. 'சிவபெருமானின் உருவத்திருமேனியை நோக்கிச் செய்யப்படும் வழிபாடாக சரியைத்தொண்டு அமைகிறது'[16] என்று நடேசக் கவுண்டர் கூறும் கருத்து சிந்தனைக்கு உரியது.

## கிரியைத்தொண்டு (வழிபடும் நெறி)

சிவபெருமானின் அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யப்படும் தொண்டாகும். மலர், நீர், நறும்புகை, ஒளி, திருவமுது முதலான பொருள்களைக்கொண்டு அன்பு மேலோங்க இலிங்கத் திருமேனியைத் தூய்மை செய்து, ஆடை அணிவித்து, அருகிருந்து திருமேனியைத் தீண்டிச் செய்யப்படும் தொண்டாகும்.

'சலம் பூவோடு தூபம் மறந்தறியேன்'[17]
'போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவார்
அவர்பின் புகுவேன்'[18]
'பெரும்புனல் காலைமூழ்கிப் பித்தருக்குப் பத்தராகி
அரும்பொடு மலர்கள் கொண்டு'[19]

என்பன போன்ற திருநாவுக்கரசரின் பாடல்வரிகள் இவரின் கிரியைத் தொண்டினை உணர்த்திநிற்கிறது எனலாம்.

## யோகத்தொண்டு (மன ஒருமைப்பாடு)

உடம்பில் உயிர்ப்பை ஒடுக்கி, மனதைச் சென்றவிடமெல்லாம் அலையவிடாது ஓரிடத்தில் நிறுத்தி உள்ளம் என்னும் திரையில் சிவபெருமானின் உருவை எழுதி அதிலே மனமொன்றி வழிபடும் வழிபாடு யோகமாகும்.

'உயிரா வணமிருந்து உற்றுநோக்கி
உள்ளக் கிழியின் உருவெழுதி
உயிரா வணஞ் செய்திட்டு உன்கைத்தந்தால்
உணரப் படுவாரோடு ஒட்டி வாழ்தி'[20]

என்னும் திருநாவுக்கரசரின் திருத்தாண்டகம் யோகநெறி பற்றி விளக்குகிறது.

## ஞானத்தொண்டு (மெய்யுணர்வு)

திருக்கோயிலில் அலகிடுதல் முதலான சரியை, கிரியை, யோகம் என்ற மூன்றும் மெய்யுணர்வை நல்குவனவாகும். இதனை ஞானம் என்று கூறுவர்.

அலகிடுதல் தொண்டினும் பத்துமடங்கு இன்பம் மெழுகினவர்க்குக் கிடைக்கும். மலர்களைத் தொடுத்து இறைவனுக்கு மாலையாக அளிப்பதால் சிவலோகம் கிட்டும். திருவிளக்கு இடுவோர் பெறும்பேறு சொல்லில் அடங்காப் பெருமையுடையது. விளக்கு இடும்பணி ஞானத்தை நல்கும். புற இருளைப்போக்கிப் பொருள்களைப் புலப்படுத்துவது விளக்கு. அறியாமையாகிய அகவிருளைப் போக்கி உலகின் உண்மைத் தன்மையை விளக்குவது மெய்ஞ்ஞானம் ஆகும்.

'விளக்கினார் பெற்ற இன்பம் மெழுக்கினால் பதிற்றியாகும்
துளக்கிநன் மலர்தொடுத்தால் தூயவிண் ஏறலாகும்
விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்ஞ்ஞெறி ஞானமாகும்
அளப்பில கீதம் சொன்னார்க்கு அடிகள் தாம் அருளுமாறே'[21]

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு நெறிகளுமே சைவ சமயத்தில் இறைவனுக்குச் செய்யப்படும் தொண்டுகளாகும்.

**'ஞானயோகக் கிரியா சரியை நாலும்நாதன்றன்பணி'[22]**

என்ற சிவஞான சித்தியாரின் கருத்தும் இங்கே ஒருங்கு வைத்து எண்ணப்படுவதாகும்.

## நால்வர் நன்னெறி

வழிபடும் நெறியைக் (கிரியை) காட்டவந்தவர் திருஞான சம்பந்தர். மன ஒருமைப்பாட்டு நெறியை (யோகம்) ஓதவந்தவர் சுந்தரர். மெய்யுணர்வு நெறியை (ஞானம்) உணர்த்த வந்தவர் மாணிக்கவாசகர். உழைப்பு நெறியை (சரியை) விளக்க வந்தவர் திருநாவுக்கரசர். என்றாலும் மேற்கண்ட தேவாரப் பதிகங்களின் வாயிலாக உணரும்போது திருநாவுக்கரசர் நான்கு நெறிகளையுமே கடைப்பிடித்து வாழ்ந்தவர் என்பது தெளிவாக விளங்குகிறது. திருநாவுக்கரசர் மேற்கொண்ட நான்கு நெறிகள்,

1. சரியை - உழவாரப்பணி
2. கிரியை - 'சலம்பூவோடு தூபம் மறந்தறியேன்'
3. யோகம் - 'உயிராவணமிருந்து உற்றுநோக்கி'
4. ஞானம் - இம்மூன்றினையும் உள்ளடக்கியது ஞானம்.

பெரியபுராண ஆய்வுரையில் மறை. திருநாவுக்கரசு 'சிறப்பு முறையில் நான்கு நெறிகளையும் திருநாவுக்கரசர் மேற்கொண்டு நடந்து காட்டினார்'[23] என்று கூறும் கருத்து மிகவும் ஏற்புடையதாகும்.

இறையை அடையும் மார்க்கம் எனும் நெறி, சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு வகைப்படும். அதில்,

| | |
|---|---|
| சரியை | - திருநாவுக்கரசர் |
| கிரியை | - திருஞானசம்பந்தர் |
| யோகம் | - சுந்தரர் |
| ஞானம் | - மாணிக்கவாசகர் |

பின்பற்றிய நெறிகளாகும். இந்த நான்கு நெறிகளையும் திருநாவுக்கரசர் போற்றியுள்ளார்.

## தொண்டர்களைப் போற்றிய தொண்டர்

திருநாவுக்கரசர், இறைவனுக்குத் தொண்டராக விளங்கும் பேறு பெற்றிருந்தும் அவர் தமக்குமுன் வாழ்ந்தத் தொண்டர்களையும் தம் காலத்து வாழ்ந்தத் தொண்டர்களையும் தம் தேவாரப் பதிகத்தில் போற்றிக், குறிப்பிட்டுள்ளார்.

தொண்டர்களுக்குத் தொண்டு செய்யும்பேறு என்று கிட்டும் என்று ஏங்கியவர் திருநாவுக்கரசர். மனிதர்களில் மனிதராவார் திருத்தொண்டர்களே. தொண்டர்களது திருவேடத்தைக்கண்டு கை தொழல் சிறப்பு. தொண்டர்கள்மேல் அளவற்ற அன்பும் நன்மதிப்பும் கொண்டு விளங்கிய திருநாவுக்கரசர் தம் தேவாரத் திருப்பதிகங்களில் தொண்டர்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

| திருநாவுக்கரசருக்கு முன்வாழ்ந்த தொண்டர்கள் | திருநாவுக்கரசரின் தேவாரத் திருமுறை |
|---|---|
| 1. காரைக்காலம்மையார் | 6 - 317 |
| 2. சோழன் கோச்செங்கணான் | 6 - 12, 39 |
| 3. சண்டேசுவரர் | 6 - 233, 656, 758 |
| 4. சாக்கியார் | 4 - 1022, 1024, 1029 |
| 5. கண்ணப்பர் | 4 - 497 |
| 6. கணம்புல்லர் | 4 - 499 |
| 7. அமர்நீதியார் | 4 - 974 |
| 8. நமிநந்தியடிகள் | 4 - 687 |

திருநாவுக்கரசர் தம்காலத்தல் வாழ்ந்த தொண்டர்கள்

| | |
|---|---|
| 1. திருஞானசம்பந்தர் | 4 - 365 |
| 2. அப்பூதியடிகளார் | 4 - 863 |

திருநாவுக்கரசர் தொண்டர்களைப் போற்றிய தொண்டராவார்.

6

## உழவாரத் திருத்தொண்டு

உழவாரம் என்பது தரையிலுள்ள புல் பூண்டுகளை நீக்க உதவும் இரும்பாலான கைக்கருவியாகும். இக்கருவி இலைபோன்ற வடிவுடையது. இதன் துணைகொண்டு திருநாவுக்கரசர் திருக்கோயில்கள் தோறும் சென்று தூய்மைத் திருத்தொண்டு செய்தார்.

திருநாவுக்கரசர் செய்த திருத்தொண்டுகளுள் முதன்மையாகப் போற்றும் சிறப்பிற்குரியது உழவாரத் திருத்தொண்டாகும். தன் திருக்கரத்திலுள்ள உழவாரம் என்னும் கருவியால் திருக்கோயில்களிலும் திருவீதிகளிலும் வீணே வளர்ந்துள்ள புல், பூண்டு மற்றும் முட்செடிகளைச் செதுக்கி அப்புறப்படுத்துதல், நடப்போரின் பாதங்களை வருத்தும் கல், முள், ஓடு போன்றவற்றையும் நடைபாதையிலிருந்து விலக்குதல் போன்ற தூய்மைத் தொண்டினைத் திருத்தில்லை, திருவாரூர், திருவாமூர், திருவதிகை போன்ற திருத்தலங்கள் தோறும் திருநாவுக்கரசர் செய்துள்ளார்.

'செல்வச் செழிப்பு இருப்பினும், பணியாட்கள் பலர் பலராக நின்று செய்யும் உழைப்பு இருப்பினும் அவற்றின் துணைக்கொண்டு சிவனுறையும் திருக்கோயில் திருத்தொண்டு செய்தல் உண்மைத் திருத்தொண்டாக அமையாது'[24] என்று கருதி தாமே தம் திருக்கரங்களால் திருத்தொண்டு புரிய முடிவுசெய்து பணிமேற் கொண்டார்.

பலவகைத் தொண்டுகள் இருப்பினும், உழவாரத் திருத்தொண்டினைத் திருநாவுக்கரசர் மேற்கொண்டதற்குக் காரணமாக அமைந்தவர், அவரின் தமக்கையாராகிய திலகவதியாரே யாவார்.

'தொண்டன் என்றோ அடியன் என்றோ சொல்லுதல் போதாது. தம்கையால் திருத்தொண்டு செய்தல் வேண்டும் என்ற நெறியில் திருநாவுக்கரசரைத் திலகவதியார் ஈடுபடுத்தினார்'[25] என்ற இக்கருத்து மிகவும் பொருத்தமுடையதாகவும் உண்மையுடையதாகவும் உள்ளது.

திருக்கோயில்களில் உழவாரத்தொண்டிற்கு திருநாவுக்கரசரே முன்னவராக விளங்கியுள்ளார். இறைவன் உறையும் திருக்கோயில்கள் தோறும் உழவாரப்படை கொண்டு திருத்தொண்டைச் செய்துள்ளார். திருநாவுக்கரசர் உழவாரத் தொண்டு புரியக் காரணமாக இருந்தவர் திலகவதியார்.

திலகவதியார் தங்கியிருந்து திருத்தொண்டு செய்துவந்த திருவதிகை வீரட்டானத்திருக்கோயிலில்தான் திருநாவுக்கரசரும் முதன்முதலாக உழவாரத் திருத்தொண்டைத் தொடங்கினார்.

'சென்றுதிருவீரட்டானத்திருந்த செம்பவளக்
குன்றை அடிபணிந்து கோதில் சிவசின்னம்
அன்றுமுதல் தாங்கி ஆர்வமுறத் தங்கையால்
துன்று திருப்பணிகள் செய்யத் தொடங்கினார்'[26]

என்று சேக்கிழார் கூறியிருப்பதிலிருந்து மேற்கண்ட கருத்தின் உண்மை புலனாகிறது.

## அப்பரின் பிற அருந்தொண்டுகள்

திருநாவுக்கரசர் உழவாரத்தொண்டேயன்றி வேறுபல தொண்டுகளையும் செய்துள்ளதை அறியமுடிகிறது.

நாடெல்லாம் நடந்து மாந்தர் உய்ய அருளுரைகள் பல கூறினார். தெய்வமணங்கமழும் தேவாரத்திருப்பதிகங்களைப் பாடினார். திருஞானசம்பந்தருக்குப் புல்லக்கு தாங்கினார். திங்களூரில் பாம்பால் மாண்ட அப்பூதியடிகளாரின் மகனை உயிர்ப்பித்தார். திருவீழிமிழலையில் இறைவனிடம் படிக்காசு பெற்று, மழையின்றிப் பஞ்சத்தால் தவித்த மக்களுக்கு உணவு வழங்கினார். திருமறைக்காட்டில் அடைக்கப்பட்டிருந்த கோயில் கதவும் திறக்கப்பாடினார். பழையாறை என்னுமிடத்தில் சமணர்களால் மறைத்து வைக்கப்பட்ட சிவனாலயத்தை வெளிப்படுத்தினார்.

'தலையின் மயிரைப் பறித்துண்ணும் சாதிசமணர் மறைத்தாலும்
நிலையிலாதார் நிலமையினான் மறைக்க வொண்ணுமோ'[27]

என்னும் பெரியபுராணச் செய்யுளால் அறியமுடிகிறது. இவை போன்ற பலவகைத் தொண்டுகளையும் திருநாவுக்கரசர் செய்து சிறப்புற்றார் என அவர்தம் தேவாரத் திருப்பதிகங்களால் அறிய முடிகிறது.

திருநாவுக்கரசர் உழவாரத் தொண்டேயன்றி பல்வேறு மக்கள் தொண்டும் செய்துள்ளார்.

## மக்கள் தொண்டின் சிறப்பு

மக்களுக்குச் செய்யப்படும் தொண்டு இறைவனுக்குச் செய்யப்படும் தொண்டாக் கருதப்படுகிறது.

உயிர்களுக்கு அன்போடு செய்யப்படும் உதவியே கடவுளுக்குச் செய்யப்படும் தொண்டாகும். இத்தகைய உண்மையினைச்,

'செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரன் எனத்தொழுமே'[28]

என்று மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம் உணர்த்துகிறது.

திருமூலர் தாம் அருளிய திருமந்திரத்தில்,

'படமாடக் கோயில் பரமற் கொன்றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயின்
படமாடக் கோயில் பரமற்க தாமே'[29]

என்று அடியவர்க்குச் செய்யும் தொண்டே ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டாகும் என்பதை விளக்கிக் கூறியுள்ளார்.

'அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே'[30]

என்ற தாயுமானவரின் பாடல்வரிகளின் கருத்தும் இங்கே நினைந்து இன்புறத்தக்கதாகும்.

இத்தகைய மக்கள் தொண்டின் சிறப்பினை உணர்ந்த திருநாவுக்கரசர் உழவாரத் தொண்டேயன்றி வேறுபல மக்கள் தொண்டினையும் செய்து சிறப்புற்றார் என்பதனை முன்னுள்ள பகுதியால் விளங்கிக்கொள்ள முடிகிறது.

மெய்கண்டார், திருமூலர், தாயுமானவர் போன்ற ஆன்மிகச் சான்றோர்கள் உணர்த்திய மக்கள் தொண்டைத் திருநாவுக்கரசர் செய்துள்ளார்.

## என்கடன் பணிசெய்து கிடப்பதே

தொண்டின் வடிவமாகவே திருநாவுக்கரசர் திகழ்கிறார். அப்பரின் வாழ்வு, தொண்டு வாழ்வாகும். அப்பர் பெருமானின் சொல்லும் செயலும் பணியின் மேன்மையை உணர்த்துகிறது. அப்பரின் வாழ்வு 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற அருள் மொழியாகத் திகழ்கிறது.

'தொண்டராகித் தொடர்ந்து விடாதார்க்கு
அண்டர் ஆளவும் வைப்பர் ஆரூரரே'[31]

என்று தொண்டின் பெருமையையும் தொண்டர்களின் சிறப்பையும் அவர்கள் பெறும் உயர்வையும் திருநாவுக்கரசர் தம் திருவாக்கால் அருளியுள்ளதை அறியமுடிகிறது.

என்கடன் பணிசெய்துகிடப்பதே என்பது திருநாவுக்கரசரின் வாழ்வின் குறிக்கோள். திருநாவுக்கரசர் செய்த தொண்டெல்லாம் இறைவனின் திருவடிப்பேற்றிக்கு உரியதான மக்கள் தொண்டாகும்.

## தொண்டர்தம் பெருமை

தொண்டு நெறியில் இறைவனை அடையப்பெறலாம் என்னும் நன்னெறிக்கு எடுத்துக்காட்டாய் விளங்குபவர் திருநாவுக்கரசர்.

சைவசமயத் தலைவர்கள் நால்வரையும் இறைவன் ஒவ்வொரு வகையில் ஆட்கொண்டுள்ளார் என்பதை அறிகிறோம். 'இறைவன், திருஞானசம்பந்தரை அவரது இளம்பருவத்திலேயே

தம்பிள்ளையாக ஏற்று அருள்புரிந்துள்ளார். சுந்தரரைத் தம்பிரான் தோழர் என்ற நிலையில் ஆட்கொண்டிருக்கிறார். மாணிக்க வாசகரைத் தம் சீடராக ஏற்றுக் கருணை புரிந்துள்ளார். ஆனால் திருநாவுக்கரசரைமட்டுமே தொண்டராக ஏற்றுக் கொண்டுள்ளார்' என்பது இங்கே குறிப்பிடத்தக்க சிறப்புடையதாகும்.

எனவே, ஏனைய மூவரினும் திருநாவுக்கரசரே தொண்டின் வடிவாகத் திகழ்ந்து, தொண்டினைப்போற்றி, தொண்டினை உணர்த்தி, தொண்டினைச் செய்து தொண்டராகவே வாழ்ந்து சிறப்பித்துள்ளார் என்பதைத் தெளிவாக அறிய முடிகிறது.

திருநாவுக்கரசர் புரிந்த தொண்டெல்லாம் இறைவனின் திருவடிக்குக் கீழிருந்து புரிந்த தொண்டு. இறைவனின் திருவடி நோக்கிப் புரிந்த தொண்டு. இறைவனின் திருவடிக்கு உரித்தான திருத்தொண்டு, இறைவனின் திருவடியை எய்தச் செய்த தவத்தொண்டு.

'இறைவன் தொண்டர்தம் உள்ளத்து ஒடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே'[32]

என்றார் ஔவையார்.

சமயத்தலைவர்கள் நால்வரும் இறைவனால் ஆட்கொள்ளப் பட்டிருப்பினும் திருநாவுக்கரசர் ஒருவரே தொண்டராக ஏற்று ஆட்கொள்ளப் பெற்றிருக்கிறார். தொண்டர்களில் பெருமை மிகவும் சிறப்புடையது.

## இயல் முடிபு

1. ஆறாம் அறிவாம் பகுத்தறிவைப்பெற்ற மனிதப்பிறப்பு அரியதொன்றாகும்.
2. மற்றவர்க்கு உதவிசெய்தலே மனம் பெற்ற மனிதனின் கடனாகும்.
3. தனக்கென வாழாமல் பிறர்க்கெனவாழும் பொதுநல வாழ்வே உயர்ந்த தொண்டாகும்.
4. திருநாவுக்கரசர் தொண்டுநெறி வாழ்ந்த தூய தவமுனிவராவார்.

5. திருநாவுக்கரசர் இளமை தொட்டே தொண்டு புரிவதில் ஆர்வம் உடையவர்.
6. திருநாவுக்கரசர் நால்வகை நெறியிலும் சரியை எனும் தொண்டுநெறி சிறக்க விளங்கியவர்.
7. திருநாவுக்கரசர் தன் காலத்து அடியவர்களையும் தமக்கு முன் வாழ்ந்த அடியவர்களையும் போற்றியுள்ளார்.
8. திருநாவுக்கரசரே உழவாரத் திருத்தொண்டின் முன்னோடியாவார்.
9. திருநாவுக்கரசர், மக்களுக்குச் செய்யும் தொண்டே இறைவனுக்குச் செய்யும் தொண்டெனப் போற்றினார்.
10. தொண்டின்வழி இறைவனை அடையலாம் என்பதற்குத் திருநாவுக்கரசர் சான்றானவர்.
11. 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்பது திருநாவுக்கரசரின் செவ்விய குறிக்கோள்.
12. திருநாவுக்கரசர் தொண்டெல்லாம் இறைவனின் திருவடிப்பேற்றிற்கான மக்கள் தொண்டாகும்.

## அடிக்குறிப்பு

1. ஔவையார் பாடல்கள், ப. 104, பாரிநிலையம், பிராட்வே, சென்னை, 1979.
2. தொல். மர. நூ. 571.
3. குறள். 422.
4. நாலடி. பா. 39.
5. அப். தே. 5 - 205.
6. மேலது, 4 - 734.
7. புறம். பா. 182.
8. அ. ச. ஞானசம்பந்தன், பெரியபுராணம் ஓர் ஆய்வு, ப.265 மாருதி அச்சகம், சென்னை-14, 1987.

9. மா. இராசமாணிக்கனார், பெரியபுராண ஆராய்ச்சி, ப.26 மாடல் பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1948.
10. சொ. சிங்காரவேலன், அப்பர் அருட்செய்தி, ப. 48, தமிழ்மன்றம், மாயூரம், 1974.
11. அறிவுநம்பி, தமிழரின் தெய்வநெறிச் சிந்தனைகள், ப.21.
12. பெ.பு., தி.நா.பு., பா.1.
13. மேலது, பா. 25.
14. மேலது, பா. 26.
15. அப். தே. 6 - 312.
16. கு. நடேசக்கவுண்டர், அப்பர் வரலாற்றாராய்ச்சியும் தேவாரத்திறனும் ப.36, கழகவெளியீடு, சென்னை, 1972.
17. அப். தே. 4 - 18.
18. மேலது, 4 - 31.
19. மேலது, 4 - 34.
20. மேலது, 6 - 252.
21. மேலது, 4 - 748.
22. சிவ. சித்., பா. 12.
23. மறை. திருநாவுக்கரசு, அப்பர் வரலாற்று ஆய்வுரை, ப.21, மறைமலையடிகள் பதிப்பகம், சென்னை-82, 1978.
24. வை. இரத்தினசபாபதி, திருநாவுக்கரசு ஓர் ஆய்வு (முதற்பகுதி), ப.149, இராதாகிருஷ்ணன், மெய்யுணர்வு மேல்நிலைக் கல்வி நிறுவனம், சென்னைப் பல்கலைக் கழகம், 1984.
25. மேலது, ப. 101.
26. பெ. பு. 1312.
27. மேலது, 300.
28. மெய்கண்டார், சிவஞானபோதம், ப. 5.
29. திரு. பா., 1857.
30. தாயு. பா. 87.
31. அப். தே. 4 - 312.
32. ஔவையார் பாடல்கள், ப.68.

## இயல் - 5

# தெய்வ நெறி

தெய்வநெறி என்னும் இவ்வைந்தாமியல் தெய்வத் தொடர்புடைய செய்திகள், நெறிப்பொருளும் சிவச்செய்தியும், தெய்வக் கொள்கை, சிறுதெய்வ மறுப்பு, திருநாவுக்கரசரும் சிவனடியும், திருநாவுக்கரசரின் தெய்வ நெறி என்னும் தலைப்புகளில் விளக்கப்பெற்றுள்ளன.

## தெய்வத்தொடர்புடைய செய்திகள்

பண்டைத் தமிழர் தெய்வ நம்பிக்கையில் சிறந்து விளங்கினர். இதனைப் பழந்தமிழ் இலக்கணமானத் தொல்காப்பியத்தின் வாயிலாக அறிய முடிகிறது. தொல்காப்பியத்தில் தெய்வம், கடவுள், இறைவன் என்ற பெயர்கள் சுட்டப்பெறுகின்றன.

'தெய்வம் உணாவே மாமரம் புட்பறை'[1]

என்றும்

'கடவுள் வாழ்த்தொடு கண்ணியவருமே'[2]

என்றும்

'செருவகத்து இறைவன் வீழ்வுறச்சினைஇ'[3]

என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில் தெய்வம் என்ற சொல் தொல்காப்பியத்தில் கருப்பொருள்களைப் பற்றிக் குறிப்பிடும்போது ஒரு நிலத்திற்கு உரிய தெய்வம் என்பதாக உணர்த்தப்படுகிறது.

அடுத்து, தொல்காப்பியப் பாயிரத்தில் பயின்றுவரும் கடவுள் என்பதற்குப் பலரும் பல்வேறு வகையில் விளக்கம் அளிக்கின்றனர். பற்றுக் கோடில்லாதவர் கடவுள் என்பதை மட்டும் அனைவராலும் ஏற்க முடிகிறது.

இறுதியாக வரும் இறைவன் என்ற சொல் மன்னனைக் குறிப்பதாகவே கையாளப்பட்டுள்ளது.

எனவே, மேலே குறிப்பிடப்பட்டுள்ள தெய்வம், கடவுள், இறைவன் என்பன சிவனைக் குறிபபிடவில்லை யாதலால் சிவன் என்பவர் ஆதி கடவுள் இல்லை என்று ஜி. சுப்பிரமணியப்பிள்ளை கருத்துரைக்கின்றார்.[4]

சைவசமயம் என்பது மிகவும் பழமை வாய்ந்தது என்பது உண்மை; இம்மதத்தின் முழுமுதற்கடவுள் சிவன் என்பதும் உண்மை. தொல்காப்பியத்தில் சிவன் குறித்த செய்தியில்லை என்பதற்காகச் சிவன் பழமையான தெய்வமாகப் பாராட்டப்படவில்லை என்ற கருத்தை ஏற்றுக்கொள்ளல் இயலாது என்பது ஆய்வாளர் கருத்தாகும்.

திருக்குறளில் தமிழ் என்ற சொல் இடம்பெறவில்லை என்பதற்காக இந்நூல் தமிழில் எழுதப்படவில்லை என்று கூறுதல் போன்ற தன்மையுடையதாக மேற்கண்ட கருத்து உள்ளது.

தொல்காப்பியம் என்பது பழந்தமிழ் இலக்கணநூல். அந்நூலில் மொழி, மக்கள் வாழ்வு பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. எனவே, சமயச் சார்பான விரிவான விளக்கங்களுக்கு அந்நூல் பொறுப்பாக முடியாது. அது சமய நூலமன்று. தொல்காப்பியம் சமயநூல் இன்மையால் சிவன் பற்றிய செய்தி குறிப்பிடப்படாமல் இருந்திருக்கலாம் என்று அமைதி கொள்வது ஏற்புடையது.

## சங்க இலக்கியச் செய்திகள்

சங்க இலக்கியப் பாடல்களில் சிவன் என்ற சொல் இடம் பெற்றதாகத் தெரியவில்லை. எட்டுத்தொகை நூல்களுள் ஐங்குறுநூறு என்னும் நூலில் உள்ள பெருந்தேவனாரின் கடவுள் வாழ்த்துப்பாடலில் சிவனையே இறைவனாகக்கொண்டு பாடப்படுவது விளங்குகிறது.

'உமையொரு பாகத்தர், பிறைசூடியவர், கொன்றை மாலை அணிந்தவர், விடையேறு கொண்டவர், நீலமணி மிடற்றர், நீண்ட சடைமுடியர், நுதல்விழியர், பதினெண் கணங்களை உடையவர்,

மழு ஏந்தியவர், செவ்வான் அன்ன சிறந்த மேனியுடையவர், உடுக்கையைக் கையில் கொண்டவர். அமரரும் முனிவரும் அறிய வொண்ணாத் தன்மையர், வேத முதலாக விளங்குபவர். அனைத்து உலகப் பொருள்களாகவும் விளங்குபவர்'[5] என்றெல்லாம் அறிவு நம்பி சிவனைப்பற்றிச் சுட்டிச் செல்கிறார்.

என்றாலும், 'சங்க இலக்கியத்தில் கடவுள் வடிவு பேசப் பெறவில்லை என்பதும், பேசப்பெற்றவை உரைகாரர் சுட்டிக்காட்டும் தெய்வங்களே என்பதும் சிந்தித்தக்கதாக உள்ளது'[6] என்றும் அவரே கருத்துக் கூறுகிறார்.

இதற்கு விடைகூற வேண்டுமானால் 'சிவன் என்ற சொல் அக் காலத்தில் இல்லாமல் இருந்திருக்கலாம் என்பதேயாகும்'[7] என்று பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தனார் கூறும் கருத்து மிகவும் ஏற்புடையதாக உள்ளது.

பின் எப்போது சிவன் என்ற சொல் வந்தது என்பதை ஆராயுமிடத்து, திருமூலர் தம் திருமந்திரத்தில்,

'சிவனோ டொக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனோடு ஒப்பார் இங்கு யாரும் இல்லை'[8]

என்று கூறியிருந்தலான் அவர்காலத்தில் சிவன் என்ற சொல் வழக்கத்திலிருந்திருக்கலாம் என்று ஆய்வாளர் கருதுகிறார். எவ்வாறாயினும்,

'தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'[9]

என்ற மாணிக்கவாசகரின் கருத்தைப் போற்றி மகிழ்தல் சிறப்புடையது.

1. தொல்காப்பியத்தில் சிவன் என்ற சொல் சுட்டப்பெறவில்லை. தெய்வம், கடவுள், இறைவன் என்றே சுட்டப்பட்டுள்ளது.

2. திருமூலர் திருமந்திரத்தில் சிவன் என்ற சொல் காணப் படுகிறது.

## நெறிப்பொருளும் சிவச்செய்தியும்

சைவசமயம் தெய்வநெறியை மிகவும் வலியுறுத்துகிறது. தெய்வநெறி என்பதன் பொருளும் சிவச்செய்தியும் பற்றி இங்கே விளக்கப்படுகிறது.

நெறி என்பது பலபொருள் ஒருசொல். 'நெறி என்பது ஒழுங்கு, கண்மண்டை, குழி, கற்பு, கோயில், சன்மார்க்கம், சுளுக்கு, செவ்வை, நரம்புத்திரட்சி, நீதி, முறை, வழி, விதம் போன்ற பல பொருள்களைக் கழகத் தமிழ் கையகராதி உணர்த்துகின்றது.'[10]

பெரும்பான்மையும் தமக்கும் பிறர்க்கும் நன்மை தருவனவற்றை மேற்கொண்டு அவ்வழி நடத்தலை நெறி என்னுஞ் சொல் உணர்த்தும், எடுத்துக்காட்டாக திருநெறி, பெருநெறி, அன்பு நெறி, அருள்நெறி, ஒழுக்கநெறி, உண்மை நெறி, நன்னெறி, சமய நெறி, சன்மார்க்க நெறி, பக்தி நெறி என்பன போன்று பலவாறாகப் பல்கிப் பெருகி நிற்கும். தீநெறி, புன்மை நெறி என்று இழிந்த நிலையிலும் வருகிறதே எனினும் நெறிநின்றார் என்றாலே நல்ல செயல்களை மேற்கொண்டு ஒழுகினார் என்றுதான் பொருள்படும்.

இங்கு தெய்வநெறி என்பது தெய்வத்தை உணர்த்தும் வழி என்பது பொருளாக அமைகிறது. தெய்வத்தை உணர்த்தும் நெறி, தெய்வத்தன்மை வாய்ந்த நெறி, தெய்வத்தால் ஆனநெறி என்றும் பொருள் கொள்ளலாம்.

தெய்வத்தை உணர்த்தும் நெறியாக திருநாவுக்கரசர் கூறும் கருத்தை இங்கே சிந்திப்பது ஏற்றது.

இறைவன், தன் திருவடிகளைச் சரண் அடைந்தவர்களைப் பிறவி எனும் பெருங்கட்டினை அறுத்து, தீவினைகளை நீக்கி, இன்னா உலகம் புகுவதிலிருந்து காத்து சிவனருள் தந்து காப்பாற்றுகிறார்.

'தன்னைச் சரண் என்று தாளடைந்தேன் தன்னடியடையப்
புன்னைப் பொழில் புகலூர் அண்ணல் செய்வன
கேண்மின்களோ!

என்னைப் பிறப்பறுத்து என்வினை கட்டறுத்து ஏழ்நரகத்து
என்னைக் கிடக்கல்ஒட்டான் சிவலோகத்து இருத்திடுமே'[11]

என்று கூறுவதிலிருந்து இறைவன் வழங்கும் ஈடிலா நற்பயனை மக்களுக்குக் கூறி அவன் திருவடிகளைச் சரண் அடைதலே இப் பிறவியில் வேண்டப்படுவதாகவும் என்று தெய்வத்தைப் பற்றி வழியை உணரமுடிகிறது. இவ்வாறு தம் தேவாரத் திருப்பதிகங்களில் தெய்வநெறிப் பொருளைத் திருநாவுக்கரசர் வற்புறுத்திக் கூறியுள்ளார்.

## சிவச்செய்தி

சேக்கிழார், பெரியபுராணத்தில் திருநாவுக்கரசர் அவதரித்த ஊரைச் சுட்டும் பொழுதே,

'தெய்வநெறி சிவம்பெருக்கும் திருவாமூர் திருவாமூர்'[12]

என்று இருமுறை விதந்து ஓடுகின்றார். அணிக்கு அணி செய்வது போல், முன்பே திருவாமூர் சைவச் சான்றார்கள் வாழும்சிறப்புடைய ஊர். அவ்வூரில் திருநாவுக்கரசர் அவதரித்ததால் மேலும் அச்சிறப்பு இருமடங்காகப் பொலிகிறது.

தெய்வநெறி சிவம் பெருக்கும் என்பது, 'தெய்வ நெறியால் அடையப்பெறும் சிவத்தை மேன்மேல் எல்லா உயிரும் பெறும்படி வளரச்செய்யும் அருளாகிய திருவினை உடைய ஊர் என்பதும் இவ்வூரில் திருநாவுக்கரசர் பிறந்ததால் இவ்வூர் மேலுஞ் சிறக்கப் போகிறது என்பதும் உணரமுடிகிறது.'[13]

தெய்வக் கொள்கையில் பற்றுவைத்து அதனை மக்களுக்கும் எடுத்துக் கூறும் திருநாவுக்கரசரின் பிறப்பு போற்றுதற்குரியதே யாகும்.

தெய்வநெறி சிவம் பெருக்கும் சிறப்புடையது. திருநாவுக்கரசரின் திருஅவதாரத்தால் திருவாமூர் மேலும் பொலிவுற்று விளங்கியது.

## தெய்வக்கொள்கை

திருநாவுக்கரசர் கடவுளுக்குப் பிறப்புண்டு என்னும் கொள்கை மறுப்புடையவர். பலதெய்வக் கொள்கையைத் திருநாவுக்கரசர் விலக்குகிறார்.

கடவுளுக்குப் பிறப்புண்டு என்று கூறுபவர் கருத்தைத் திருநாவுக்கரசர் வெறுத்துப் பேசுகிறார்.

'செத்துசெத்துப் பிறப்பதே தேவென்று
பத்திசெய் மனப்பாறைகட்கு ஏறுமோ'[14]

என்று மீண்டும் மீண்டும் செத்துச் செத்துப் பிறப்பதே தெய்வம் எனப் பொய்யாகப் கருதிப் பக்தி செய்யும் கல்மனம் உடையவர்களுக்கு இறைவனின் இனிய தன்மை விளங்காது என்று குறிப்பிடுவதை அறியமுடிகிறது.

பதி என்னும் இறைவன் எப்போதும் பந்தத்துள் படாதவர் என்பதே சைவம். கடவுளின் அவதாரக் கொள்கையைச் சைவ சித்தாந்தம் ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. சிவன் இன்னார்க்கு இவ்விடத்தில் பிறந்தவர் என்று எந்தப்புராணமும் கூறியதாகச் செய்தி இல்லை. எனவே தெய்வத்திற்குப் பிறப்பு மில்லை இறப்பு மில்லை என்ற கருத்துத் துணிந்துரைக்கப்படுகிறது.

## பலதெய்வக் கொள்கை

சூரியன், அக்கினி முதலான பொருள்களையும் அவற்றிற்கு முதல்வராக உள்ள தேவர்களையும் கடவுளர் என்று கூறும் தெய்வக்கொள்கையைத் திருநாவுக்கரசர் பெரிதும் விலக்குகிறார்.

'எரிபெருக்குவர் அவ்வெரி ஈசனது
உருவருக்கமாவது உணர்கிலார்'[15]

என்றும்

'அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில்
அருக்கன் ஆவானும் ஆனுரு வல்லனோ'[16]

என்றும் தேவர்களின் நிலையின்மையைச் சுட்டி எல்லாம் வல்ல பரம்பொருள் என்பது ஒன்றேயாகும். அப்பரம்பொருளே நிலைத்த தன்மையுடையது; உலக உயிர்களைக் காக்கவல்லது என்றும் உணர்த்துகிறார்.

சிவனையன்றி இவ்வுலகில் பிறிதொருபொருள் நிலையுடையதன்று என்ற உண்மை ஞானத்தை உலகிற்குப் பல்வேறு விளக்கங்களால் அறிவுறுத்தியவர் திருநாவுக்கரசராவார்.

சூரியன், நெருப்பு போன்றவைகளையும் அவற்றிற்குரிய தேவர்களையும் கடவுளர் என்று கூறும் தெய்வக்கொள்கையைத் திருநாவுக்கரசர் மறுக்கிறார்.

## சிறுதெய்வ மறுப்பு

தெய்வம் பற்றிய பல்வேறு கருத்துகள் கூறப்படுகின்றன. என்றாலும் சிறு தெய்வக் கொள்கையினைத் திருநாவுக்கரசர் மறுத்துரைக்கிறார்.

பரம்பொருளான சிவனைத் தவிர மற்றையவையெல்லாம் சிறு தெய்வங்களே. சிறுதெய்வங்கள் வணங்குவதற்கு ஏற்றவை அல்ல என்ற கொள்கையுடையவராகத் திருநாவுக்கரசர் விளங்குகிறார்.

> 'சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லேம்
> சிவபெருமான் திருவடிக்கே சேரின் அல்லால்'[17]

என்று சிறுதெய்வ வழிபாட்டில் மறுப்புடையராகவும் சிவபெருமான் திருவடியையே சேரப்பெற்றவர்தாம் என்பவராகவும் திருநாவுக்கரசர் உணர்த்துகிறார்.

திருநாவுக்கரசரின் இக்கருத்தினை ஏற்று அதனை விளக்கும் நிலையில் பிற்காலத்து வாழ்ந்த கவிஞராகிய பாரதியார்,

> 'ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி
> அலையும் அறிவிலிகாள்'[18]

என்றும்

'மாடனைக் காடனை வேடனைப் போற்றி
மயக்கும் மதியிலிகாள்'[19]

என்றும் சிறுதெய்வ வழிபாட்டைச் சாடுகிறார்.

'ஒன்றுபரம்பொருள் நாமதன் மக்கள்'[20]

என்று தெய்வம் ஒன்றே என்று நிலைநாட்டிக் கூறியிருக்கும் திறன் திருநாவுக்கரசரின் தெய்வக் கொள்கைக்குப் பெரிதும் ஏற்படையதாக விளங்குகிறது.

திருநாவுக்கரசர், சிறுதெய்வ வழிபாட்டை ஏற்காமல் சிவபெருமானையே வணங்கும் உறுதி கொண்டவர்.

## திருநாவுக்கரசரும் சிவனடியும்

திருநாவுக்கரசர் இறைவனின் திருவடியைப் போற்றி வணங்குவதைக் காணலாம்.

சிவனெனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனியம்மானின் சேவடிக்கு அன்புபூண்டு வாழ்ந்து நன்னிலை பெற்றவர் திருநாவுக்கரசர். இவர் ஒவ்வொரு வினாடியும் இறைவனின் திருவடி நிழலை நினைந்தே தம் வாழ்வைக் கழித்தவர். இறைவனை மறந்த எண்ணமோ, பேச்சோ, செயலோ அவரிடம் இருந்ததில்லை. தம் உயிர் இறைவனின் திருவடிக்கீழ் தவறாது தங்கியிருக்கும் உணர்ச்சியை அவர் இடையறாது பெற்றவர் என்பதை,

'அட்டான் அடிநிழற் கீழதன்றோ எந்தன் ஆருயிர்'[21]

என்னும் அவர்தம் திருப்பாட்டால் அறியலாம்.

சிவனையே சிந்தை செய்து, அவரது திருநாமமாகிய ஐந்தெழுத்தை ஓதி, திருத்தொண்டுகள் செய்து மனம், மொழி, மெய்களால் இறைவனைப் போற்றி இறைவனடியை அடைந்தவர் திருநாவுக்கரசர்.

இங்ஙனம், சிவனடியைச் சார்தலே அனைவர்க்கும் வேண்டுவ தொன்றாகும். சைவசித்தாந்தம் உணர்த்தும் உண்மைக் கருத்தும் இதுவேயாதல் கூடும்.

திருநாவுக்கரசர் ஏன் இறைவன் திருவடியைப் பாடினார் என்பது சிந்தனைக்குரியதாகும்.

இறைவனைப் பாதாதி கேசமாக அதாவது அடி தொடங்கி முடிவரை பாடுதல் சமய மரபாக முன்னோர்கள் கடைப்பிடித்துப் பாடியுள்ளனர். முன்னோர் மொழிபொருளைப் பொன்னேபோல் போற்றும் திருநாவுக்கரசரும் அம்மரபை அடியொற்றி இறைவனின் திருவடியைச் சிந்திக்கப் பெற்றவராதல் வேண்டும் என அறிய முடிகிறது.

இறைவனின் திருவடியே பிறப்பறுக்க வல்லது.

'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்'[22]

என்றார் திருவள்ளுவர். இவ்வாறே கடவுள் வாழ்த்தில் ஏழு குறட்பாக்களிலும் தாளை வணங்கும் தன்மையை வற்புறுத்துகிறார். மாணிக்கவாசகரும் சிவபுராணத்துள்,

'நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க'[23]
'பிறப்பறுக்கும் பிஞ்ஞுகன்றன் பெய்கழல்கள் வெல்க'[24]
'மெய்யே; உன்பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்'[25]

என்றெல்லாம் சிவனின் திருத்தாள்களைப் போற்றியுள்ளார்.

சைவ நூலேயன்றி வைணப் பெருநூலான நாலாயிரத் திவ்வியப் பிரபந்தக் காப்புச் செய்யுளிலும்

'பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்
செவ்வடி செவ்வி திருக்காப்பு'[26]

என்று இறைவனின் திருவடி சிறப்பிக்கப்படுகிறது. திருமால் வாமன அவதாரமாகப் பேருருவுடன் விளங்கி இவ்வுலகை அளந்த திருவடியையுடையவர் என்று திருவடியின் பெருமை பேசப்படுகிறது.

இவ்வாறாக முன்னோர்கள் பாடி உணர்த்திய சமயநெறி மரபுப்படி திருநாவுக்கரசரும் இறைவனின் திருவடியைப் பாடும் விருப்பமுற்றார் என அறியப்படுகிறது.

இப்பிறப்பிலேயே சிறப்பெய்தி என்றும் நிலையான பேரின்பத்தைத் துய்த்தவராகிய திருநாவுக்கரசர், தாம் பாடிய முதல் பாசுரத்திலேயே,

'ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்'[27]

என்று சிவபெருமான் தம்மை ஓர் அடியவராகக்கொண்டு திருவடியில் ஏற்று அருளியதைத் தெரிவித்துள்ளார். இதேபோல்,

'புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்'[28]

என்று பூம்புகலூரில் பாடி நிறைவு செய்கிறார்.

இவ்வாறு, முதலிலும் முடிவிலுமேயன்றித் தம் தேவாரத் திருப்பதிகங்களின் இடையிடையேயும் சிவபெருமானின் திருவடிப் பெருமையினை எடுத்துக்காட்டிச் செல்கிறார்.

'கருவுற்ற நாள்முதலாக யுன்பாதமே காண்பதற்கு
உருகிற்று என்னுள்ளமும்'[29]

'கருவுற்றிருந்து உன்கழலே நினைந்தேன்'[30]

கருவிலேயே சிவனடியைச் சிந்தை செய்யும் பேற்றினை அவர் பெற்றிருக்கிறார். இறையவரும் கழலடிக்கீழ் திருநாவுக்கரசரைக் காத்தார் என்பதைக்,

'கருவுற்ற காலத்தே என்னை ஆண்டு
கழற்போது தந்தளித்த கள்வர்'[31]

என்ற அப்பர்தம் திருவாக்கால் அறியலாம்.

'கருவுற்ற காலத்தே' என்று திருநாவுக்கரசர் தம் தேவாரப் பதிகத்தில் பாடியிருந்தாலும், சமணம் சார்ந்து பின் சைவசமயத்திற்கு வந்த பின்பே சிவபெருமானின் திருவடியைச் சிந்திக்கப் பெறுகிறார் என்பது விளங்குகிறது.

## சூட்டிய திருவடி

திருமாலும் நான்முகனும் அரிதின் முயன்றும் காண முடியாத சிவன் சேவடியைத் தாம் எளிதில் இதயத்துள், திருவருளின் துணையுடன் கண்டுகொண்ட சிறப்பினைத்,

**'தேடிக் கண்டு கொண்டேன் - திரு**
**மாலொடு நான் முகனும்**
**தேடித் தேடொணாத் தேவனை என்னுளே**
**தேடிக் கண்டு கொண்டேன்'[32]**

என்று பாடிப்பாடி ஆனந்தக் கூத்தாடுகிறார் திருநாவுக்கரசர்.

இறைவனின் திருவடி காலனைத் தடிந்தது.[33] ஏன் எனில் அது அவனின் கருணையற்ற தன்மையைச் சுட்டுவதற்காக இராவணன் தலையிலும் வைக்கப்பட்டது.[34] அதன்காரணம் அவன் அகந்தையை அழிப்பதற்காக. திருவதிகை வீரட்டானப் பெருமான் சுந்தரர் சென்னியில் திருவடியைச் சூட்டி மறைந்தது இறைவனின் எளிவந்து அருளும் இயல்பைக் காட்டுவதற்காக.[35] ஆனால் அதே திருவடி அப்பரின் தலையிலும் சூட்டப்பட்டது.[36] இதன் நோக்கம் அவரை அன்புடன் ஆட்கொள்வதற்காக, ஆணவ முனைப்பால் அடைதற்கரிய திருவடி அன்பின் மென்மையால் அடைதற்கு எளிதாகிவிட்ட நிலையைத் திருநாவுக்கரசர் பாடியுள்ளார்.

## காக்கும் திருவடி

பிறவிப் பிணியால், துன்பக்கொடுமையால் துவண்டு வருந்தும் உயிர்களை இறைவனின் திருவடி நிழலே காக்கவல்லது. இத்திருவடி இன்பத்தில் திளைத்த திருநாவுக்கரசர் ஈசனின் இணையடி நிழலின் அருமைச் சுகத்தை 'மாசில் வீணையும்'[37] என்னும் தேவாரப் பாடலில் சொல்லோவியமாக வடித்துக் காட்டியுள்ளார்.

'இச்செய்யுளில் சிவனடி நிழலானது கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும் அறிவனவாகிய ஐம்புலனின்பமும் ஒருங்கே அழியாவகையில் அளிக்க வல்லது'[38] என்ற கருத்து எண்ணி மகிழத்தக்கது.

இறைவனின் திருப்பாதம் திருநாவுக்கரசருக்குப் பல நன்மைகளை விளைவித்திருக்கிறது. இவ்வுலகில் காணமுடியாத காட்சியின்பத்தையும் அறிய இயலா அறிவின்பத்தையும் அளித்துள்ளது என்பதைக்,

'கண்டேன் அவர்திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்'[39]

என்று திருநாவுக்கரசர் உறுதியாய்க் கூறுவதிலிருந்து அதுவரை அவர் அறியாத கல்வியை, அறிவை, ஞானத்தைத் திருவடிக் காட்சியானது வழங்கியிருக்கிறது என்பது தெளிவாக விளங்குகிறது.

## எப்பிறவியிலும் வேண்டுவது

எளிய பிறப்பில் பிறந்தாலும் அரிய பிறப்பில் பிறந்தாலும் எப்பிறவிக்கும் இறைவனின் திருவடியே சிந்திக்கத்தக்கது.

'புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா
உன்னடி என்மனத்தே
வழுவாதிருக்க வரந்தர வேண்டும்
இவ்வைய கத்தே'[40]

என்ற திருநாவுக்கரசர் வேண்டுவதிலிருந்து இதனை அறியலாம்.

இறைவனின் திருவடியை மனங்குளிர அன்பு மேலோங்கக் கண்டு வணங்கிவிட்டாலே மனிதப்பிறவி முழுமை பெற்று விடுவதாக திருநாவுக்கரசர் கருதுகிறார். மனிதப் பிறவியின் பயனும் இதுவேயாகும் என்றும் கருத்துணர்த்துகிறார்.

'குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயில்
குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்
பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பா தமுங்
காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே'[41]

என்று திருவடியின் சிறப்பையும் திருவடிதரும் பயனையும் தெரிந்து உரைக்கிறார்.

சிவனின் திருவடியைப் போற்றியவர் திருநாவுக்கரசர். இறைவனின் திருவடி பற்றறுக்க வல்லது. முன்னோர்கள் உணர்த்தும் நெறிப்படியே திருநாவுக்கரசரும் இறைவனின் திருவடியைப் பாடியுள்ளார்.

## திருநாவுக்கரசரின் தெய்வநெறி

திருநாவுக்கரசரின் தெய்வநெறி சிவனைப் போற்றும் செவ்விய நெறியாக விளங்குகிறது.

திருநாவுக்கரசர் தாம் அருளிய தேவாரத் திருப்பதிகங்களின் பல இடங்களில் முடிந்த முடிபாகத் திருவடியைச் சுட்டிச்செல்லும் தன்மை மேலே விளக்கியுரைக்கப்பட்டது.

உலக மக்களைப் பார்த்து முடிவான கருத்தைக் கூறுவதுபோல்,

'ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை'[42]

என்று உறுதிபடக் கூறுகிறார். உடம்பாகிய வீட்டில், உள்ளமாகிய அகலில் உணர்வாகிய நெய்சேர்த்து உயிர் எனும் திரியிட்டுச் சிவஞானம் எனும் ஒளியில் நோக்கினால் இறைவனின் கழலடி காணலாமே எனும் தெய்வநெறியைத் திருநாவுக்கரசர் காட்டுகிறார்.

'ஞானங் காட்டுவர் நன்னெறி காட்டுவர்
தானங் காட்டுவர் தம் அடைந்தார்க்கு எல்லாம்
தானங் காட்டித்தன் தாளடைந் தார்கட்கு
வானங் காட்டுவர்போல் வன்னி யூரரே'[43]

என்று தேவாரத்தால் திருநாவுக்கரசரின் உணர்த்தும் தெய்வ நெறியாம் திருவடி நெறியை விளக்கமாகக் கண்டு மகிழ முடிகின்றது.

திருநாவுக்கரசரின் தெய்வ நெறியாக விளங்குவது திருவடியை வணங்கும் நெறியே என்பது உரைக்கப்படுகிறது.

## இயல் முடிபு

1. தெய்வம் பற்றிய செய்திகள் பண்டைத் தமிழ்நூல்களில் காணப்படுகின்றன.
2. தொல்காப்பியத்தில் சிவன் என்ற சொல் இல்லை.
3. நெறி என்பது பல விளக்கங்களைத் தருகிறது என்றாலும், நெறி என்பதை வழி என்ற பொருளில் திருநாவுக்கரசர் எடுத்தாண்டுள்ளார்.
4. சைவம் திரும்பிய திருநாவுக்கரசர் சிவனைத் தவிர வேறு தெய்வம் எதையும் வழிபடவில்லை.
5. முன்னோர் மொழிபொருளைப் போற்றும் நிலையிலேயே திருநாவுக்கரசர் திருவடியைப் பாடியுள்ளார்.
6. திருமாலும் நான்முகனும் காணமுடியாத சிவனின் திருவடியைத் திருநாவுக்கரசர் கண்டிருக்கிறார்.
7. இறைவனின் திருவடியை வணங்குவோர்க்குப் பிறவித் துன்பமில்லை.
8. இறைவனின் திருவடியை மனம் ஒன்றித் துதிக்கவேண்டும்.
9. இறைவனை ஒன்றியிருந்து நினைக்கும் தெய்வ நெறியாளர்க்குக் குறைபாடு ஒருபோதும் வராது.
10. சிவனின் செந்நெறி அடைந்தார் ஞானம், நன்னெறி, தானம் ஆகியவற்றை அடையப் பெறுவர்.
11. திருநாவுக்கரசர் உணர்த்தும் தெய்வநெறியாக விளங்குவது இறைவனின் திருவடியை வணங்குதல் என்பதேயாகும்.

## அடிக்குறிப்பு

1. தொல். பொருள். அகத்திணையியல், நூ. 20.
2. தொல். எழுத்து, சிறப்புப்பாயிரம், வரி.9.
3. தொல். பொருள். புறத்திணையியல், நூ. 72.
4. ஜி. சுப்பிரமணியப்பிள்ளை, அப்பர் விருந்து, ப. 37, தமிழ்நிலையம், புதுக்கோட்டை, 1960.
5. அறிவுநம்பி, தமிழரின் தெய்வநெறிச் சிந்தனைகள், ப.27 அமுதன் நூலகம், பாண்டிச்சேரி, 1993.
6. மேலது. ப. 28.
7. அ. ச. ஞானசம்பந்தன், பெரியபுராணம் ஓர் ஆய்வு, ப.31 மாருதி அச்சகம், சென்னை-14, சனவரி, 1987

8. திருமந்திரம், பா. 5.
9. மாணிக்கவாசகர், போற்றித் திருஅகவல், வரி.164.
10. கழகத் தமிழ் அகராதி, ப. 492, தி.தெ.சை.சி.நூ. ப. கழகம் சென்னை, 1982.
11. அப். தே. 4 - 1009.
12. தி.நா.பு. செ. 12.
13. க. வெள்ளைவாரணன், பன்னிருதிருமுறை வரலாறு, ப. 173, முதல் பகுதி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1972.
14. அப். தே. 5 - 1007.
15. மேலது, 5 - 1012.
16. மேலது, 5 - 1013.
17. மேலது, 6 - 905.
18. பா. பா. அறிவே தெய்வம், வரி.12.
19. மேலது, வரி. 56.
20. மேலது, பாரதமாதா, வரி.9.
21. அப். தே. 4 - 801.
22. குறள். 10.
23. சிவபுராணம், வரி.1.
24. மேலது, வரி.7.
25. மேலது, வரி. 32.
26. நா. தி. பி. பா. 1.
27. அப். தே. 4 - 1.
28. மேலது, 6 - 971.
29. மேலது, 4 -961.
30. மேலது, 4 - 937.
31. மேலது, 6 - 885.
32. மேலது, 4 - 93.
33. ஜி. சுப்பிரமணியப்பிள்ளை, அப்பர் விருந்து, ப. 36.
34. மேலது.
35. க. வெள்ளைவாரணன், பன்னிரு திருமுறை வரலாறு, ப.274, முதல் பகுதி.
36. ஜி. சுப்பிரமணியப்பிள்ளை, அப்பர் விருந்து, ப. 37.
37. அப். தே. 5 - 884.
38. ஜி. சுப்பிர்மணியப்பிள்ளை, அப்பர் விருந்து, ப. 44.
39. அப். தே. 4 - 21.
40. மேலது, 4 - 920.
41. மேலது, 4 - 783.
42. மேலது, 4 - 781.
43. மேலது, 5 - 258.

# முடிவுரை

முடிவுரை என்ற இப்பகுதியில், திருநாவுக்கரசரின் தெய்வநெறி என்ற இந்த ஆய்வுக்கட்டுரையில் கண்ட முடிவுகள் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. நூலின் இறுதியில் சில பரிந்துரைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

## திருநாவுக்கரசரின் வரலாறு என்ற முதல் இயலில் கண்ட முடிபுகள்

1. திருநாவுக்கரசர் பிறந்தஊர் திருவாமூர், இவரது பெற்றோர் புகழனார், மாதினியாராவார்.

2. சைவத்தைவிட்டு சமணம் புகுந்த திருநாவுரக்கரசர்க்குத் தருமசேனர் என்ற பட்டத்தைச் சமணர்கள் வழங்கினர்.

3. தமக்கை திலகவதியார் இறைவனிடம் வேண்டியதால் திருநாவுக்கரசருக்குச் சூலைநோய் ஏற்பட்டது. பின்னர் இறைவனால் ஆட்கொள்ளப்பெற்றார்.

4. இறைவனின் திருவருட்கருணையால் சமணர்கள் இழைத்த கொடுமைகளையெல்லாம் திருநாவுக்கரசர் வென்று மீண்டார்.

5. திருநாவுக்கரசர் தன் மேனியில் சூலக்குறியும், இடப முத்திரையையும், திருப்பெண்ணாகடத்து இறைவனிடம் வேண்டிப் பெற்றார்.

6. சிவனுறையும் திருக்கோயில்கள்தோறும் திருநாவுக்கரசர் சென்று உழவாரத் திருத்தொண்டு செய்து இறைவனைப் பாடிப் பரவினார்.

7. பல்வேறு அற்புத நிகழ்ச்சிகளை நிகழ்த்தினார்.

8. திருவையாற்றில் கைலைக் காட்சியைக்கண்டு, திருப்புகலூரில் முக்தி பெற்றார்.

9. திருநாவுக்கரசர் கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

## சமயநெறி என்ற இரண்டாம் இயலில் கண்ட முடிபுகள்

1. மக்களைப் பக்குவப்படுத்தும் நெறி சமயமாகும்.

2. வேறுபாடும் மாறுபாடும் கொண்டு விளங்கும் சமயம் அவரவர் உணரும் நிலைக்கேற்ற முடிபைப்பெறும்.

3. இந்துமதம் ஏனைய மதங்களைவிட காலத்தால் பழைமையும் நிலைத்து நிற்கும் ஆற்றலும் பெற்றது.

4. எளிய இனிய கொள்கைகளைக்கொண்ட சைவநெறி எல்லோராலும் ஏற்கக்கூடிய இனிய எளிய கொள்கைகளையுடையது.

5. சமயங்களால் உணரப்படும் இறைவன் சிவனே யாவார்.

6. அன்பே சிவமாகும்.

7. கொள்கை முரணுடையது சமண நெறியாகும்.

8. பலரால் புறக்கணிக்கப்பட்ட மதம் பௌத்தமாகும்.

9. திருநாவுக்கரசர் சைவநெறியை உடையவர். தன் வழிபடு கடவுளாக சிவனையே கொண்டவர்.

## மெய்ப்பொருள் நெறி என்ற மூன்றாமியலில் கண்ட முடிபுகள்

1. அறிவு என்பது இறைவனை அடையும் நெறியை அறிவதாகும்.

2. உயிர், பாசத்தை விட்டு நீங்கினால் பதியருளைப் பெறும்.

3. முப்பெருநெறிகளாகிய பதி, பசு, பாசம் என்பதனைச் சைவ சித்தாந்தம் விளக்குகிறது.

4. உயிர் பேரின்பத்தைப்பெற இறைவனை அடைதல் வேண்டும்.

5. சிவச்சின்னமாம் திருநீற்றை அணிந்து திருநாவுக்கரசர் பொலிவுடன் விளங்கியுள்ளார்.

6. திருநாவுக்கரசரால் போற்றப்பட்ட சிவமந்திரம் 'சிவாய நம' வாகும்.

7. ஐம்புல நுகர்ச்சியை வெல்லும் வழிபற்றி திருநாவுக்கரசர் கூறியுள்ளார்.

8. உலக வாழ்வின் இயல்பு திருநாவுக்கரசரால் விளக்கப் பட்டுளளது.

9. ஆசையே பற்றிற்குக் காரணம். இறைவனின் திருவடியே பற்றறுக்க வல்லது.

10. சிவகதியடையும் வழியைத் திருநாவுக்கரசர் கூறியுள்ளார்.

11. திருநாவுக்கரசர் மனத்திட்பம் வாய்ந்தவர். சொல்லிலும் செயலிலும் மாறாத சிறந்த தன்மையுடையவர்.

## தொண்டு நெறி என்ற நான்காமியலில் கண்ட முடிபுகள்

1. மனிதப்பிறவி மிகவும் சிறப்புடையது. ஆறறிவு படைத்தவன் மனிதன்.

2. மனம் பெற்ற மனிதன் மற்றவர்க்கு உதவிசெய்யும் பண்புடையவனாவான்.

3. தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் உயரிய் கொள்கையுடையவர் திருநாவுக்கரசர்.

4. திருநாவுக்கரசர் தொண்டு நெறி வாழ்ந்த தூயவராவார்.

5. திருநாவுக்கரசருக்கு இளமையிலேயே தொண்டு செய்யும் ஆர்வம் இருந்தது.

6. திருநாவுக்கரசர் சரியை என்னும் உழைப்பு நெறியைப் போற்றியவர்.

7. திருநாவுக்கரசர் அடியவர்களைப் போற்றியவர்.

8. திருநாவுக்கரசர் உழவாரத் திருத்தொண்டின் முன்னோடி யாவார்.

9. மக்களுக்குச் செய்யும் தொண்டையே இறைவனுக்குச் செய்யும் தொண்டாகத் திருநாவுக்கரசர் போற்றினார்.

10. என்கடன் பணிசெய்து கிடப்பதே என்பது திருநாவுக்கரசரின் சிறந்த குறிக்கோளாகும்.

11. திருநாவுக்கரசர் தொண்டெல்லாம் இறைவனின் திருவடி பேற்றிற்காகச் செய்யப்பட்டவையாகும்.

## தெய்வநெறி என்ற ஐந்தாமியலில் கண்ட முடிபுகள்

1. இலக்கிய, இலக்கண நூல்களுள் தெய்வம் பற்றிய செய்தி காணப்படுகின்றது.

2. தொடக்கத்தில் சிவன் என்ற சொல்லால் இறைவன் குறிக்கப்பெறவில்லை.

3. நெறி என்பது பலபொருள் ஒருசொல். திருநாவுக்கரசர் நெறி என்பதை வழி என்ற பொருளில் எடுத்தாண்டுள்ளார்.

4. தெய்வநெறி சிவத்தைப் பெருக்கும்.

5. சிவனைத் தவிர வேறு சில தெய்வங்களைத் திருநாவுக்கரசர் வழிபட்டிலர்.

6. இறைவனின் திருவடியை எப்போதும் சிந்தைசெய்யும் மனமுடையவராகத் திருநாவுக்கரசர் விளங்குகிறார்.

7. திருமாலும் நான்முகனும் காணமுடியாத சிவனுடைய திருப்பாதத்தைத் திருநாவுக்கரசர் கண்டிருக்கிறார். அப்பாத நீழல் இவரைத் துன்பங்களிலிருந்து காத்திருக்கிறது.

8. இறைவனின் திருப்பாதத்தைக் கண்டுவிட்டவர்க்குப் பிறவி இல்லை.

9. அருளாளர்கள் போற்றிய வழியிலேயே திருநாவுக்கரசர் இறைவனின் திருவடியைப் போற்றியிருக்கிறார்.

10. இறைவனை மனம் ஒன்றித் துதிக்க வேண்டும்.

11. சிவநெறி அடையப் பெற்றோர் ஞானம் பெற்றவராவார்.

## பரிந்துரைகள்

இந்த ஆய்வைத் தொடர்ந்து பின்வரும் தலைப்புகளில் ஆய்வு மேற்கொள்ளலாம். அதற்கு இந்த ஆய்வு முன்னோடியாக அமையும்.

1. திருநாவுக்கரசரின் தெய்வம் பற்றிய உண்மை.
2. திருநாவுக்கரசர் சமணம் தழுவியதற்கான காரணங்கள்.
3. திருநாவுக்கரசரின் அருள்வாழ்வில் காணப்பட்ட அடியவர்கள்.
4. அப்பரும் ஆளுடையப் பிள்ளையும் நிகழ்த்திய அற்புதங்கள்.
5. அப்பரின் சமயவாழ்வு.

* * * * *

# துணைநூற் பட்டியல்


1. அறிவுடைநம்பி, ம.சா., - திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணப்படும் இலக்கியக் கொள்கைகள், கருமணி பதிப்பகம், மதுரை, 1981.

2. அறிவுநம்பி அ., - தமிழரின் தெய்வநெறிச் சிந்தனைகள், அமுதன் நூலகம், பாண்டிச்சேரி, நவம்பர், 1993.

3. ஆதிரையார் - பெரியபுராணம் கதைகள், சுவாமிமலைப் பதிப்பகம் தி.நகர், சென்னை - 17, 1992.

4. இரத்தின சபாபதி, வை., - திருநாவுக்கரசர் ஓர் ஆய்வு. இராதாகிருஷ்ணன் மெய்யுணர்வு மேல்நிலைக் கல்வி நிறுவனம், சென்னைப் பல்கலைக்கழகம், முதல் பகுதி, 1984, இரண்டாம் பகுதி, 1986.

5. இராசமாணிக்கனார், மா., - பெரியபுராணம் ஆராய்ச்சி, மாடல் பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1948.

6. இராமலிங்க அடிகள், - திருவருட்பா, ஞானசபை வெளியீடு, வடலூர், 1982.

7. இலக்குவன், அரு., - அப்பர் பெருமான் வாழ்வும் வாக்கும், பூம்புகார் கல்லூரி வெளியீடு, மேலையூர், மே, 1980.

8. இளங்கோவடிகள், - சிலப்பதிகாரம், தி.தெ.சை.நூ.ப. கழகம், சென்னை -1, 1968.

9. ஔவையார், - ஔவையார், புலியூர் கேசிகன், பாரி நிலையம், சென்னை - 17,1992.

10. கண்ணதாசன், கவியரசு., - அர்த்தமுள்ள இந்துமதம், தொகுதி - 1, வானதி பதிப்பகம், தி.நகர், சென்னை - 17,1993.

11. கலியாணசுந்தரனார், திரு.வி., - என்கடன் பணிசெய்து கிடப்பதே, பூம்புகார் பதிப்பகம், 63, பிராட்வே சென்னை, ஏப்ரல் 1987.

12. கிருபானந்தவாரியார், திருமுருக., - சிவனருட்செல்வர், வானதி பதிப்பகம், தி.நகர், சென்னை - 17, மே, 1973.

13. சமணமுனிவர்கள், - நாலடியார், தி.தெ.சை.நூ.ப. கழகம் சென்னை - 1, 1968.

14. சிங்காரவேலன், சொ., - அப்பர் அருட்செய்தி, தமிழ் மன்றம், மாயூரம், 1974.

15. சீத்தலைச் சாத்தனார், - மணிமேகலை, தி.தெ.சை.நூ.ப. கழகம், சென்னை -1, 1968.

16. சுப்பிரமணியப்பிள்ளை. ஜி., - அப்பர் விருந்து, தமிழ் நிலையம், புதுக்கோட்டை, மார்ச், 1960.

17. சுப்பிரமணிய முதலியார், சி.கே., - 'சேக்கிழார்' சாது அச்சுக்கூடம் இராயப்பேட்டை, சென்னை, சூலை, 1932.

18. சுப்பிரமணியன், மு., - திருநாவுக்கரசர், நாகுவெளியீடு, சென்னை - 5, மே,1968.

19. சுவாமி, - இந்து தர்ம வாழ்க்கையும் தத்துவங்களும், அநுராகம், தி.நகர், சென்னை -17, 1994.

20. சேக்கிழார், - பெரியபுராணம், திருப்பனந்தாள் ஆதீன திருமடப்பதிப்பு, திருப்பனந்தாள், 9-6-1982.

21. சைவ எல்லப்ப நாவலர் - திருவருணைக் கலம்பகம், தி.தெ.சை.நூ.ப. கழகம், சென்னை, 1968.

22. ஞானசம்பந்தன், அ.ச., - பெரியபுராணம் ஓர் ஆய்வு, மாருதி அச்சகம், சென்னை - 14, சனவரி, 1987.

23. தணிகாசல முதலியார், ஈஎன்., - அப்பர், கலாநிலையம், சென்னை, 1929.

24. தாமரைக்கண்ணன் - திருநாவுக்கரசர், பராசக்தி பதிப்பகம் அச்சிறுபாக்கம், நவம்பர், 1989.

25. தாயுமானவர், - தாயுமானவர் பாடல்கள், தி.தெ.சை.சி.நூ.ப. கழகம், சென்னை, 1973.

26. திருநவுக்கரசர், - தேவாரம், 4,5,6 திருமுறைகள், தருமபுர ஆதீன வெளியீடு, 1957.

27. திருநாவுக்கரசு, மறை., - அப்பர் வரலாற்று ஆய்வுரை, மறைமலையடிகள் பதிப்பகம், பெரம்பூர், சென்னை - 82, 1978.

28. திருமூலர், - திருமந்திரம், மணிவிழா நினைவு வெளியீடு, ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள், 2-3-91.

29. திருவள்ளுவர், - திருக்குறள், தி.தெ.சை.சி.நூ.ப. கழகம், சென்னை - 1, 1993.

30. துரைசாமிப்பிள்ளை, ஔவை சு., - சைவ இலக்கிய வரலாறு, அண்ணாமலை நகர், 1978.

31. தொல்காப்பியர், - தொல்காப்பியம், தி.தெ.சை.சி.நூ.ப. கழகம், சென்னை, 1966.

32. நடேசக் கவுண்டர், கு., - அப்பர் வரலாற்றாராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும், கழக வெளியீடு, சென்னை, 1972.

33. நடேசப்பிள்ளை, பி.ஏ., - அப்பர் காட்டும் அருள்நெறி, அருள்நெறிக் கழகம், நாகர்கோயில், 1975.

34. பாரதியார் - பாரதியார் கவிதைகள், இந்து பப்ளிகேஷன்ஸ் தி.நகர், சென்னை-17, 1995.

35. பாலசுந்தரம்பிள்ளை, தி. சு., - சொல்லரசர், கழக வெளியீடு, சென்னை, 1940.

36. பூர்ணலிங்கம்பிள்ளை. மு.சி., - திருநாவுக்கரசர் திருஞானம், அப்பர் நிலையம், திருநெல்வேலி, 1944.

37. பெரியாழ்வார், - நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம், திருவேங்கடநாதன் திருமன்றம், சென்னை -19. 1981.

38. பெருமாள், தே.ப., - தேவாரத் திருச்செல்வர்கள், பொதிகைப் பதிப்பகம், சென்னை, 1980.

39. மாணிக்கவாசகர் - திருவாசகம், தருமபுர ஆதீன வெளியீடு, 1957.

40. மெய்கண்டார், - சிவஞானபோதம், ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள், 1991.

41. விசுவநாதன், த., - அப்பரடிகள், அருணோதயம் பதிப்பகம், சென்னை, 1980.

42. வீராசாமி, த., - அப்பர், கா.வா.சு.சு. செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள், ஏப்ரல், 1985.

43. வெள்ளைவாரணன், க., - பன்னிரு திருமுறை வரலாறு, முதல் பகுதி, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1972.

44. - கழகத்தமிழ் அகராதி, தி.தெ.சை.சி.நூ.ப. கழகம், சென்னை-1, 1982.

45. திருக்கோயில் திங்களிதழ், அரசு வெளியீடு, சூன், 1977.

# பின்னிணைப்பு – 1

## திருநாவுக்கரசரைப் போற்றும் புராணங்கள்

சமயங்களில் சைவமே தலை சிறந்தது; இதனை நடைமுறையில் கண்டவர் அப்பர். சிந்தையை சிவனுக்கே அர்ப்பணித்தார். அற்புதங்கள் பல நிகழ்த்தினார். அவற்றைப் பல புராணங்கள் போற்றியுள்ளன. அவை வருமாறு :

1. திருத்தொண்டர்புராணம் (பெரியபுராணம்)
2. கந்தபுராணம்
3. கருவூர்ப்புராணம்
4. திருக்குடந்தைப்புராணம்
5. திருக்குற்றாலப்புராணம்
6. திருக்குறுக்கைப்புராணம்
7. திருக்கழுக்குன்றப்புராணம்
8. கந்தகணேச புராணம்
9. சிவராத்திரி புராணம்
10. சீகாளத்தி புராணம்
11. செவ்வந்திபுராணம்
12. சேதுபுராணம்
13. திருச்சுழியல் புராணம்
14. தனியூர்ப்புராணம்
15. திருவிளையாடற்புராணம்
16. திருநாகைக்காரோண புராணம்
17. திருப்பாதிரிப்புலியூர் புராணம்
18. பேரூர்ப்புராணம்
19. மருதவனபுராணம்
20. திருவாரூர்ப்புராணம்
21. மச்சப்புராணம்
22. மாயூரப்புராணம்
23. திருவையாற்றுப்புராணம்
24. திருவானைக்கா புராணம்
25. உறையூர்ப்புராணம்

# பின்னிணைப்பு – 2

## அப்பர் சென்ற திருத்தலங்கள்

1. திருவதிகை
2. திருப்பாதிரிப்புலியூர்
3. திருமாணிக்குழி
4. திருத்தினைநகர்
5. திருவெண்ணெய்நல்லூர்
6. திருவாமாத்தூர்
7. திருக்கோவலூர்
8. திருப்பெண்ணாகடம்
9. திருநெல்வாயில் அர்த்துறை
10. திருமுதுகுன்றம்
11. திருத்தில்லை
12. திருவேட்களம்
13. திருக்கழிப்பாலை
14. சீர்காழி
15. திருக்கோலக்கா
16. திருக்கருப்பறியலூர்
17. திருப்புன்கூர்
18. திருநீடூர்
19. திருக்குறுக்கை
20. திருநின்றியூர்
21. திருநனிபள்ளி
22. திருச்செம்பொன்பள்ளி
23. திருமயிலாடுதுறை
24. திருத்துருத்தி
25. திருவேள்விக்குடி
26. திருவெதிர்கொள்பாடி
27. திருவாவடுதுறை
28. திருவிடைமருதூர்
29. திருநாகேச்சுரம்
30. திருப்பழையாறை
31. திருச்சத்திமுற்றம்
32. திருநல்லூர்
33. திருக்கருகாவூர்
34. திருவாவூர்ப்பசுபதீச்சரம்
35. திருப்பாலைத்துறை
36. திருப்பழனம்
37. திங்களூர்
38. திருச்சோற்றுத்துறை
39. திருவாரூர்
40. திருவலஞ்சுழி
41. திருக்குடமூக்கு
42. திருநாலூர்
43. திருச்சேறை
44. திருக்குடவாயில்
45. திருவாஞ்சியம்
46. திருக்கீழ்வேளூர்
47. திருவிளமர்
48. திருவலிவலம்
49. திருக்கன்றாப்பூர
50. திருப்புகலூர்
51. திருவம்பர்
52. திருக்கடவூர்
53. திருவாக்கூர்
54. திருவீழிமிழலை
55. திருவாஞ்சியம்
56. திருமறைக்காடு
57. திருவாய்மூர்
58. திருவானைக்கா
59. திருவெறும்பியூர்
60. திருச்சிராப்பள்ளி
61. திருக்கற்குடி
62. திருப்பராய்த்துறை
63. திருப்பைஞ்ஞீலி
64. திருவண்ணாமலை
65. திருக்கச்சியேகம்பம் (காஞ்சி)
66. திருவோத்தூர்
67. திருவேகம்பம்
68. கச்சித்திருமயானம்
69. திருமாற்பேறு
70. திருக்கழுக்குன்றம்
71. திருவான்மியூர்
72. திருமயிலாப்பூர்
73. திருப்பாசூர்
74. திருவாலங்காடு
75. திருக்காரிகரை
76. திருக்காளத்தி
77. திருப்பருப்பதம்
78. காசி
79. திருவையாறு
80. திருநெய்த்தானம்
81. திருமழபாடி
82. திருப்பூந்துருத்தி
83. தீருப்புத்தூர்
84. திருவாலவாய்
85. திருப்பூவணம்
86. திருவிராமேச்சுரம்
87. திருநெய்வேலி
88. திருக்கானப்பேர்.

# ஆசிரியரைப்பற்றி



இந்த நூலின் ஆசிரியர் திரு. ஆ. சந்திரசேகரன் அவர்கள் சிதம்பரம் வட்டம் தெற்கு விருதாங்க நல்லூரைச் சேர்ந்தவர். ஆதிவராகம் பஞ்சவர்னம் இவரின் பெற்றோர் ஆவர்.

காட்டுமன்னார் கோயிலில் பள்ளிக்கல்வி கற்றார். அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்புலவர் வகுப்பில் சேர்ந்து பயின்றார். 1972ஆம் ஆண்டு புலவர் தேர்வில் முதல் வகுப்பில், முதல் தரத்தில் வெற்றி பெற்று முன்னை முதல்வர். திரு.எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களின் 'தங்கப்பதக்கம்' பெற்றவர்.

நடுவணரசின் அமைச்சராக இருந்த டாக்டர். சுப்புராயன் அவர்களின் நினைவுப் பரிசையும் பெற்றுள்ளார். பி.லிட், எம்.ஏ எம்ஃபில் பட்டக்கல்வி பயின்றவர்.

27.10.1973 அரசு உயர்நிலைப்பள்ளியில் முதல்நிலைத் தமிழாசிரியராகப் பணியேற்றார். தம் பணிக்காலத்தில் மாணாக்கர்களுக்குச் சிறப்புறக் கற்பித்து நூறு விழுக்காடு தேர்ச்சியினைப் பலமுறை பெற்றுத் தந்து கல்வி அலுவலர்களால் பெரிதும் பாராட்டப் பெற்றவர்.

சிறுகதை, கவிதைகள் படைத்துள்ளார். பல சொற் பொழிவுகள், பட்டிமன்றங்கள், கவியரங்குகளில் பங்கு பெற்ற சிறப்புக்குரியவர். மாவட்ட அளவில் ஆசிரியர்களுக்கான கலைக்கழகப் போட்டிகளில் சிறுகதை, மரபுக்கவிதை எழுதி பலமுறை முதற்பரிசும் நற்சான்றிதழ்களும் பெற்றவர். முதுகலை ஆசிரியராக – தலைமையாசிரியராகப் பணியாற்றி பணிநிறைவு பெற்றவர்.

தற்போது விருத்தாசலம் வட்டம் பூதாமூரில் குடியமர்ந்து சமுதாயம் – இலக்கியம் – ஆன்மீகம் சார்ந்த அறப்பணிகளில் தம்மைப் பெரிதும் ஈடுபடுத்தித் தொண்டாற்றுகிறார்.

– பதிப்பகத்தார்.

# தமிழறிஞர் ச.வே. சுப்பிரமணியன் பதிப்பித்த நூல்கள்

தொல்காப்பியம் *(தெளிவுரை)*

சங்க இலக்கியம் *(முழுவதும்)*

பன்னிரு திருமுறை *(முழுவதும்)*

தமிழ் நிகண்டுகள்

திருவருட்பா *(முழுவதும்)*

சிலப்பதிகாரம் *(முழுவதும்)*

தமிழ் இலக்கண நூல்கள்

தமிழ் இலக்கிய வரலாறு

மெய்யப்பன் தமிழ் அகராதி

மாணவர் செந்தமிழ் அகராதி

கம்ப இராமாயணம்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

திருக்குறள் மூலமும் சொல் அமைப்பும்

அடியார்க்கு நல்லார் உரைத்திறன்

தொல்காப்பியம் அறிமுகம்

சங்க இலக்கியத்தில் முல்லைப் பாடல்கள்

சங்க இலக்கியத்தில் மருதப் பாடல்கள்

சங்க இலக்கியத்தில் பாலைப் பாடல்கள்

சங்க இலக்கியத்தில் குறிஞ்சிப் பாடல்கள்

சங்க இலக்கியத்தில் நெய்தல் பாடல்கள்

Tolkaappiyam An Introduction